# தமிழ் இலக்கியம்

## (விருப்பத்துக்குரியது)

அலகுப் பரீட்சைகளுக்கான முன்னோடி வினா விடை

க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைக்குரியது



தொகுப்பு: இ.க. சிவஞானசுந்தரம், எம்.ஏ

ஆசிரியர் கல்விவள ஆலோசகர்

மேல் மாகாணம்.

[illegible]

# தமிழ் இலக்கியம

## (விருப்பத்துக்குரியது)

## தரம் 10-11

**பரீட்சைக்கான முன்னோடி வினா விடை**

**க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைக்குரியது**

☞ பரீட்சை உசாத்துணை நூல் வரிசையில் புதிய பரிமாணம்.

☞ க.பொ.த (சாதாரண)தரப் பரீட்சையில் விசேட சித்தி பெறுவதற்கான முன்னோடி வினாவிடை

தொகுப்பு: **இ.க. சிவஞானசுந்தரம்,**
**M.A (Cey), P.G.Dip.in Edu, B. A (Cey), Sp.Trd, ISA**
**ஆசிரியர் கல்விவள ஆலோசகர்,**
**மேல் மாகாணம்.**

*Thendral Publication*

Rs. 150/-

முதற் பதிப்பு - 2000 யூன்.
பதிப்புரிமை - ஆசிரியருக்கே.

இந்நூலில் உள்ளவாறே வேறு பிரதிகளில், புத்தகங்களில் பிரசுரம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்க.

# தமிழ்த் தெய்வ வணக்கம்

பல் உயிரும் பல உலகும்
படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம் பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உன் னுதரத்(து) உதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்(கு)
அழிந்தொழிந்து சிதையா உன்
சீர்இளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துமே

- மனோன்மணீயம் -

*கணனி அச்சமைப்பு:*
**SDS Computer Services**
30A, 33rd Lane, Colombo 6.
T.P: 593920, 075-518812

Rs. 150/-

# முன்னுரை

அரச புதிய கல்வித்திட்டத்திற்கு அமைவாகத் **தமிழ் இலக்கியம் (விருப்பத்துக்குரியது) தரம் 10 - 11** பாடநூல் வெளியிடப்பட்டுள்ளது. இப்பாட விதானத்தை அடியொற்றி என்னால் வெளியிடப்படும் பாடப் பகுதியிலுள்ள வினாக்களுக்கு பரீட்சைகளுக்கு எவ்வாறு விடை எழுதுவது என்பது தொடர்பாக மாணவர்களை வழிப்படுத்தும் முகமாக இப் **பரீட்சை வினாவிடை முன்னோடி** வெளியிடப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டம் கா.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைக்குரியது.

இரு தசாப்த கால அளவிலான கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு அனுபவமும், இப்பாடப் பகுதிக்கான ஆசிரியர்களுக்கான கல்விசார் ஆலோசனை கூறும் தொழில்சார் அனுபவமும் ஒன்றிணைந்தே என்னை இவ் வினா விடையை ஆக்கத் தூண்டிற்று எனலாம். இந்நூலானது மொழிப் பாடத்தில் மாணவர் பூரண தெளிவும், தேர்ச்சிசார் மட்டத்தை அடையவும் நிச்சயம் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியப் பெருந்தகைகள் இந்நூலை வரவேற்று மகிழ்வர் என நம்புகிறேன்.

இந்நூலைக் கணனி முறையில் அச்சமைத்துத் தந்த SDS ஸ்தாபனத்தார் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. மேலும் இந்நூலை நூலுருவாகப் பதிப்பித்துத் தந்த மாணவர் நகலகம் (சென்னை) ஸ்தாபன உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

மாணவர் அனைவரும் எதிர்காலத்தில் வியத்தகு முன்னேற்றம் அடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

வாழ்க தமிழ் மொழி! வளர்க தமிழ் மொழி! வாழிய வாழியவே.

ஆசிரியர்,

**இ. க. சிவஞானசுந்தரம், எம். ஏ**

# நான்கு கோடி

1. "மதியாதார் முற்றம் மதித் தொருகாற் சென்று
மிதியாமை கோடி (யுறும்) பெறும்"

2. "உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமையே கோடியுறும்"

3. "கோடி கொடுத்தும் குடிப்பிறந்தோர் தம்மோடு
கூடுவதே கோடியுறும்"

4. "கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்
கோடாமை கோடியுறும்"

ஔவையார்

# உள்ளடக்கம்

பக்கம்


01. உலகம் உண்டு ........ 1

02. திருக்குறள் ........ 09

அன்புடைமை

விருந்தோம்பல்

03. ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான் ........ 14

04. நடிப்புச் சுதேசிகள் ........ 23

05. மானவீரன் ........ 29

06. உமர் கையாம் பாடல்கள் ........ 38

07. வாயும் நாவும் எதற்கு? ........ 46

08. மக்கத்துச் சால்வை ........ 54

09. புள்ளி அளவில் ஒரு பூச்சி ........ 59

10. உணவளிப்போர் உயிர் காப்போர் ........ 60

11. பொருளோ பொருள் (நாடகம்) ........ 70

12. விபுலாநந்த அடிகளாரின் தமிழ் உரைநடை ........ 83

13. பாரச்சிலுவை ........ 93

14. காப்பு ........ 96

15. தமிழ்சினிமாவும் இலக்கியமும் ........ 102

16. கம்பராமாயணம் - மண்டோதரி புலம்பல் ........ 110

17. சூழும் புயலிலிருந்து விடுபட்டார் ........ 118

18. மலைப்பாம்பு ........ 126

19. நளவெண்பா ........ 131

20. வீடற்றவன் (நாவல்) ........ 147

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ

அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை இழந்தாய்

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதைக் கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவனுடைய தாகின்றது

மற்றொரு நாள், அது வேறொருவனுடைய தாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
(பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்)

G. Jeevamangini

# 1. உலகம் உண்டு

1. அ. **உலகம் பொல்லாதது காலம் கெட்டுவிட்டது எனக் கூறுபவர்கள் எதனை உணர மறுக்கின்றனர் எனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது?**

ஆ. **கட்டுரை ஆசிரியர், எல்லோரும் காலம் எவ்வாறெல்லாம் கெட்டு விட்டது' எனக் குறை கூறுவதாகக் கூறுகிறார்?**

அ. உலகம் பொல்லாதது என முறையிடுபவர்கள் ஏன் உலகம் பொல்லாதது ஆயிற்று என எண்ணுவார் எவரும் இல்லை. காலத்தைக் குறை சொல்பவர்கள் காலம் ஏன் இப்படிக் கெட்டுவிட்டது என்பதை ஆராய ஒருவரும் இல்லை எனக் கட்டுரையில் உணர மறுப்பது பற்றி ஆசிரியர் கூறுகிறார்.

ஆ. உண்மைக்குக் காலம் இல்லை, நியாயத்திற்குக் காலம் இல்லை, நன்மைக்குக் காலமில்லை என்று குறை சொல்லிக் காலம் கெட்டுவிட்டது என எல்லோரும் கூறுவர் என்பார்.

2. **'உலகம் பொல்லாதது', 'உண்மைக்குக் காலமில்லை' போன்ற கூற்றுகளுக்குக் கட்டுரையாசிரியர் தரும் விளக்கங்கள் எவை?**

★ உலகம் பொல்லாதது என முறையிடுபவர்கள் ஏன் உலகம் பொல்லாதது ஆயிற்று என எண்ணுவார் எவரும் இல்லை.

★ காலத்தைக் குறை சொல்பவர்கள் காலம் ஏன் இப்படிக் கெட்டுவிட்டது என்பதை ஆராய ஒருவரும் இல்லை எனக் கூறுகின்றார்.

★ அறம், அமைதி ஒழுங்கு எல்லாம் கெடுவதற்குத் தாங்கள் காரணமாக இருந்துவிட்டு, உலகம் பொல்லாதது, காலம் கெட்டது எனப் பொருள் தெரியாமல் பழிக்கிறார்கள் எனக் கூறுகிறார்.

★ உலகம் என்பது ஒன்று, தனியாக எங்கோ இல்லை. காலம் என்பதும் ஒன்று, தனியாக இல்லை. மக்கள் வாழும் வாழ்க்கையைப் பொறுத்தே உலகத்தின் நிலைமையும் காலத்தின் நிலைமையும் மாறிமாறி அமைகின்றன. அதனால் **உலகம் பொல்லாதது** என்று உலகத்தைப் பழிப்பதை விட்டு வாழ்க்கையை நடத்தும் மக்களைப் **பழிக்க வேண்டும்** என்பார்.

★ காலம் கெட்டுவிட்டது என்று காலத்தைப் பழிக்காமல், மக்களின் வாழ்க்கையைப் பழிக்க வேண்டும் என விளக்கம் கூறுவதன் மூலம் குறை கூறுபவர்களுக்கு விளக்கம் அளிப்பார் கட்டுரை ஆசிரியர்.

**3. அ. 'நல்ல நிலம்' பற்றி ஔவையார் கூறியுள்ள கருத்து யாது?**

**ஆ. இக் கருத்து புறநானூற்றில் எவ்வாறு பாடப்பட்டுள்ளது?**

அ. நாடு அல்லது காடு, மேடு அல்லது பள்ளம் என்னும் இந்த வெளித் தோற்றத்தைக் கண்டு யாராவது நல்ல நிலம், கெட்ட நிலம் என்று பிரிக்கிறார்களா? அவ்வாறு பிரிப்பதுதான் பொருத்தம் ஆகுமா? மக்கள் எந்தப் பகுதியில் நல்லவர்களாக விளங்கிச் சிறந்த வாழ்வு வாழ்கிறார்களோ, அந்த நிலப்பகுதியை நல்ல நிலம் என்று கூற வேண்டும். எங்கே நல்ல மக்கள் இல்லையோ அந்த நிலப் பகுதியை நல்ல நிலம் எனக் கூறமுடியாது என ஔவையார் கூறுவார்.

ஆ. ***நாடா கொன்றோ காடா கொன்றோ***
***அவலா கொன்றோ மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவர் ஆடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நிலனே*** (புறநானூறு 187)

**4. அ. கட்டுரை ஆசிரியர் சட்டங்கள் ஏழைகளுக்கு ஒரு வடிவிலும், செல்வர்களுக்கு மற்றொரு வடிவிலும் பயன்படுவதை எவ்வாறு காட்டுகிறார்?**

**(அமைதியும் ஒழுங்கும் எங்கும் வாழ வேண்டுமென்றே சட்டங்கள் அமைந்தன. ஆனால் அச் சட்டங்கள் அழியாமல் இருக்க, அமைதி ஒழுங்கு முதலியவை அழிவதற்கான காரணங்கள் யாவை?)**

**ஆ. சட்டங்கள் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி உலகத்தைத் திருத்த முடியாது என்பதற்கு ஆசிரியர் எவ் அறிஞரின் சான்றுகளை ஆதாரம் காட்டி இதனை நிருபிக்கிறார்?**

அ. சட்டங்கள் சிலரிடம் செல்கின்றன. சிலரிடம் செல்வதில்லை. ஏழைகளை மட்டும் சட்டங்கள் அடக்கி நசுக்குகின்றன. செல்வர்களைக் கண்டதும் அந்தச் சட்டங்களே அடங்கி நசுங்குகின்றன. ஏழைகள் சட்டங்களுக்கு அஞ்சுகிறார்கள். செல்வர்கள் சட்டங்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஏழை மக்கள் கொண்டால் **திருட்டு** என்று பெயர், செல்வர்கள் செய்தால் **வியாபார முறை** என்று பெயர். ஏழைகள் ஒழுக்கம் கெட்டால் **விபச்சாரம்** என்று பெயர். செல்வர்கள் ஒழுக்கம் கெட்டால் **நாகரிகப் புதுமை** என்று பெயர். ஏழைகள் புழுகினால் **பொய்** என்று பெயர். செல்வர்கள் புழுகினால் **தந்திரம்** என்று பெயர். இவ்வாறு சட்டங்கள் ஏழைகளுக்கு ஒரு விதத்திலும், செல்வர்களுக்கு மற்றொரு வடிவிலும் பயன்படுகின்றன என ஆசிரியர் காட்டுகிறார்.

ஆ. இதனை அறிஞர் பெர்னார்ட்ஷா சிறைச்சாலைகளைச் சுட்டிக்காட்டி, அங்கெல்லாம் எழை மக்கள் நெடுங்காலம் இருப்பதையும், செல்வர்கள் மட்டும் நுழைந்தவுடனேயே விடுதலை பெற்று வெளியேறுவதையும் விளக்குகின்றார். எனவே பணம் இருக்கும் பக்கமாகச் சட்டங்கள்

திரும்புகின்றன. ஆகவே இப்படிப்பட்ட சட்டங்கள் எப்படி அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி உலகத்தைத் திருத்த முடியும். உலகத்தைத் திருத்த முடியாது எனக் கட்டுரையாசிரியர் கூறுவார்.

**5. முற்காலத்திலும், இக்காலத்திலும் 'சட்ட ஆக்கம்' பற்றிக் கட்டுரையாசிரியர் ஒப்பிட்டுக் காட்டும் முறைமையை விளக்குக?**

முன்பெல்லாம் அரசர்களும், அமைச்சர்களும் சட்டங்களைச் செய்து வந்தார்கள். அவர்கள் எல்லோருமே பொதுமக்கள் என்ன எண்ணுவார்கள் என்று ஆராய்ந்து பார்த்தே அந்தச் சட்டங்களை இயற்றினார்கள். முற்காலத்தில் சட்டங்களுக்கும் பொதுமக்களின் எண்ணங்களுக்கும் உறவு இருந்து வந்தது. அது மறைமுகமான உறவு.

இப்போது சட்டங்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள உறவு நேர்முகமான உறவு. இப்போது சட்டங்கள் இயற்றுகிறவர்கள் அரசர்களும் அல்ல; அமைச்சர்களும் அல்ல; பொதுமக்களே. இந்தப் பொதுமக்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்கள் ஒரு சபையாகக் கூட்டிச் சட்டங்களைச் செய்கிறார்கள். இச் சபைதான் சட்டசபை. இவ்வாறு சட்ட ஆக்கம் பற்றி ஆசிரியர் கூறுகிறார்.

**6. அ. குடியரசால் விளைந்த பயன் யாது?**

**ஆ. சட்டசபை எனப் பெயர் ஏன் ஏற்பட்டது?**

அ. முற்காலத்தில் சட்டங்களுக்கும் பொது மக்களின் எண்ணங்களுக்கும் இடையே மறைமுகமான உறவு இருந்து வந்தது. இப்போது சட்டங்களுக்கும், பொதுமக்களுக்கும் உள்ள உறவு நேர்முகமான உறவு. இதுவே குடியரசால் விளைந்த பயனாகும்.

ஆ. இப்போது சட்டம் இயற்றுபவர்கள் அரசர்களும் அமைச்சர்களும் அல்ல. பொதுமக்களே. அந்தப் பொதுமக்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்கள் ஒரு சபையைக் கூட்டிச் சட்டங்களைச் செய்கின்றார்கள், அதனால் தான் அந்தச் சபைக்குச் **'சட்டசபை'** என்று பெயர் என ஆசிரியர் கூறுகின்றார்.

7\. **அ. உலகம் உடனே திருந்திவிடும், அதுவரையும் அல்லல் இருந்தே தீரும் என்பதற்குக் கட்டுரை ஆசிரியர் கூறும் விளக்கம் எவை?**

**(நல்ல சட்டங்களை இயற்றி உலகத்தைத் திருத்தலாமே. அந்தப் பொறுப்பு பொதுமக்கள் கையில்தானே இருக்கிறது என்பதற்கு ஆசிரியர் கூறும் விளக்கம் என்ன)**

**ஆ. தற்காலத்தில் ஊழல் மலிந்திருப்பதற்கு (இருந்து வருவதற்கு) ஆசிரியர் காட்டும் விளக்கம் என்ன?**

**இ. பொதுமக்கள் மனம் இன்னும் ஆற்றல் பெறவில்லை என்பதை எவ் எடுத்துக்காட்டினால் ஆசிரியர் உணர்த்துகிறார்?**

அ. பொதுமக்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இல்லை. அதனால்தான் ஊழல் இருந்து வருகிறது. பொதுமக்கள் இன்னும் தாங்களாக எண்ணிப் பார்க்கும் திறமை பெறவில்லை. நாளைக்கு என்ன நடக்கும் என்று அப்பால் எட்டிப் பார்க்கும் பார்வையும் பொதுமக்களுக்கு இன்னும் வரவில்லை. வருமானால் உலகம் உடனே திருந்தி விடும். இந்நிலை வரும்வரை அல்லல் இருந்தே தீரும் என ஆசிரியர் விளக்கம் கூறுவார்.

ஆ. பொதுமக்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இல்லை. அதனால் தான் ஊழல் இருந்தே வருகிறது என ஆசிரியர் காரணம் காட்டுகிறார்.

இ. ஒருவன் ஏழை மக்கள் பலருக்கு பல தீமைகள் செய்கிறான். ஆனால் அவனே நிறையச் செல்வம் சேர்த்துப் பணக்காரன் என்று புகழும் பெற்று அவனே ஒரு பொதுநிலையக் கட்டடம் கட்டிவிடுவானானால், பொதுமக்கள் எல்லோரும் அவனைப் புகழ்கிறார்கள். இதன்மூலம் பொதுமக்களின் மனம் இன்னும் ஆற்றல் பெறவில்லை என்பதை ஆசிரியர் உணர்த்துவார்.

**8. அ. உலகம் திருந்த வழியில்லை என எந்நிலையில் சோர்வடையக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.**

**ஆ. இயக்கங்களும் கிளர்ச்சிகளும் வேண்டியிருக்கின்றன என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் எவை?**

**இ. குடியரசின் இயல்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது.**

**ஈ. "உலகம் நல்லது. காலமும் நல்லது எனக் காணமுடியும்" என்ற புதிய நம்பிக்கை எப்போது ஏற்படும்?**

அ. ★ சட்டங்களுக்கு வலிமை இழந்த நிலையிலும், பொதுமக்கள் ஆற்றல் பெறாத நிலையிலும், உலகம் திருந்த வழியில்லை என்று சோர்வடையக் கூடாது எனக் காட்டப்பட்டுள்ளது.

★ முற்காலத்திலும் அறிஞர்கள் உலகத்தைக் காப்பாற்றினார்கள். இக் காலத்திலும் அறிஞர்கள் அவ்வாறு காப்பாற்ற முயல்கிறார்கள். அதன் பயன்தான் அங்காங்கே நடக்கும் இயக்கங்களும், கிளர்ச்சிகளும் ஆகும். எனவே இவ் இயக்கங்களும் கிளர்ச்சிகளும் வேண்டியிருக்கின்றன.

★ முற்காலத்தில் அறிஞர்களின் கடமை எளியது. அப்போது சிலர் அமைச்சர்களாக அமைந்துவிட்டால் போதும், சட்டங்களையும் ஏற்படுத்தி அந்தச் சட்டங்களை நேர்மையாக ஆளும்படியாகவும் செய்ய அவர்களால் முடிந்தது. இப்போது அவர்களால் பொதுமக்களைத் தட்டி எழுப்பித் தூண்டிவிட்டு, இயக்கம் அமைத்து, கிளர்ச்சி விளைவிக்க வேண்டி இருக்கிறது.

★ ஏனென்றால் முற்காலத்தில் ஆளுவோர் சிலர், ஆளப்படுவோர் பலர், இக்காலத்தில் எல்லோரும் ஆளுவோர். எல்லோரும் ஆளப்படுவோர். எல்லோரும் குடிமக்கள். எல்லோரும் முடிமன்னர்கள். இது தான் குடியரசின் இயல்பு, இதனால் தான் இயக்கங்களும், கிளர்ச்சிகளும் வேண்டியிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. குடியரசின் இயல்பு இவ்வாறு காட்டப்படுகிறது.

இ. எல்லோரும் உரிமை பெற்றால்தான் எவரும் ஏமாறாமல் வாழ வழி உண்டு என்கிறார்கள். எல்லோரும் வல்லவர்களாக ஆனால்தான், எவரும் ஏங்காமல் வாழமுடியும் என்று விளக்குகிறார்கள். எல்லோரும் வல்லமை பெற்றால்தான், எல்லோரும் நல்லவர்களாக வாழக்கூடும் எனத் தெளிவாகக் கூறுகிறார்கள். அப்போது **உலகம் நல்லது. காலம் நல்லது** எனக் காணமுடியும் என்பது புதிய நம்பிக்கையாகும்.

**9. அ. அறிஞர்கள் மனச்சான்றின் வழி உறுதியோடு நின்றார்கள் என்பதை ஆசிரியர் எவ்வாறு காட்டுகிறார்?**
**(சான்றோர்களால் தான் உலகம் திருந்தப் போகிறது என்பதற்கு ஆசிரியர் காட்டும் விளக்கங்கள் எவை?)**

**ஆ. உலக வாழ்க்கையைக் கெடுக்கவும், எடுக்கவும் ஆற்றல் பெற்றவை என ஆசிரியரால் காட்டப்படும் மூன்றும் எவை?**

அ. ★ எல்லோரும் வல்லமை பெற்றால் தான் நல்லவர்களாக வாழக்கூடும். இந்த முயற்சியில் சட்டங்கள் தோற்றபிறகும், பொதுமக்கள் சோர்ந்த பிறகும், அறிஞர்கள் சிலர் பின் வாங்கவில்லை. அவர்களிடம் தளராத உறுதி இருந்து வருகிறது. அதுதான் அவர்களின் மனச்சான்றின் உறுதி. சட்டங்கள் பணத்துக்குப் பணிந்துவிட்டன, பொதுமக்கள் பணத்துக்குப் பணிந்து விட்டார்கள். ஆனால் இந்த அறிஞர்கள் பணியவில்லை. பணம் பெரியது அல்ல. குணமே பெரியது எனத் தொன்றுதொட்டு இவ் அறிஞர் சொல்வர். இவர்கள் "**அறத்தை வணங்கு அதிகாரத்தை வணங்காதே**" என்டர். சட்டங்கள் குணத்தை விட்டுப் பணத்தின் பின்னே சென்றன.

பொதுமக்கள் அறத்தை வணங்காமல் அதிகாரத்தை வணங்கினார்கள். இந்த அறிஞர்கள் மட்டும் மனச்சான்றின் வழியில் உறுதியோடு நின்றார்கள். இந்தச் சான்றோர்களால் தான் உலகம் திருந்தப் போகிறது எனக் கூறுவார்.

ஆ. உலக வாழ்க்கையைக் கெடுக்கவும், எடுக்கவும் ஆற்றல் பெற்றுள்ளவை மூன்று, அவை சட்டம், பொதுமக்களின் போக்கு, சான்றோர்களின் மனச்சான்று என்ற மூன்றுமாகும்.

**10. 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' எனக் கட்டுரை ஆசிரியர் துணிந்து கூறக் காரணம் என்ன?**

★ சட்டம், பொதுமக்களின் போக்கு, சான்றோர்களின் மனச் சான்று இம் மூன்றும் இவ் உலக வாழ்க்கையைக் கெடுக்கவும், எடுக்கவும் ஆற்றல் பெற்றவையாகும். இம்மூன்றும் மூன்றுவகை வேலிகள். சட்டம் உளுத்தால் பொது மக்கள் ஏமாந்து கலங்கினால் சான்றோர் தாங்குவது திண்ணம். சான்றோரின் மனச்சான்றே உண்மையான வேலி. இதனால் தான் திருவள்ளுவர் பண்புடையவர்கள் இல்லையானால், **'உலகம் எப்போதோ மண்ணாய் மறைந்து அழிந்து போயிருக்கும்'** என்றார்.

★ சட்டங்கள், பொதுமக்கள் தோற்ற பின்பும் அறிஞர்கள் பின்வாங்கவில்லை. அவர்களிடம் தளராத உறுதி இருந்து வருகிறது. அதுதான் அவர்களின் மனச் சான்றின் உறுதி. சட்டங்களும், பொதுமக்களும் பணத்திற்குப் பணிந்து விட்டன. இந்த அறிஞர்கள் பணியவில்லை. **'பணம் பெரிதல்ல. குணமே பெரிது', 'அறத்தை வணங்கு அதிகாரத்தை வணங்காதே'** என இவர்கள் வலியுறுத்துகின்றனர். பொதுமக்கள் பணத்தின் பின் சென்றுவிட்டனர் அறத்தை வணங்கவில்லை, அதிகாரத்தை வணங்கினார்கள், இந்த அறிஞர்கள் மட்டும் மனச்சான்றின் வழி உறுதியோடு நின்றார்கள். இவர்களால் இந்த உலகம் திருந்தப் போகிறது. இதுகாறும் கூறிய காரணங்களை நோக்கும்போது **"பண்புடையார் பட்டுண்டு உலகம்"** என ஆசிரியர் துணிந்து கூறுவதை நாம் உணரலாம்.

# 2. திருக்குறள்

## 1. அன்புடைமை

1. **அன்புடைமை என்னும் அதிகாரத்தில் பின்வருவன பற்றி வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளவற்றை விளக்குக.**

   **அ. அன்பின் உண்மை (அன்புடைமையை எல்லோரும் அறியச் செய்வது)**

   **ஆ. அன்பிலார், அன்புடையர் என்போருக்கான வேறுபாடு.**

   **இ. உயிருக்கு உடம்போடு உண்டாகிய தொடர்பு. (அன்புடைமையின் பயன்)**

அ. அன்பிற்குப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாள் உள்ளதோ எனக் கேட்டபின், அன்பு கொள்ளப்பட்டாரது துன்பம் கண்டபோதே அன்புடையவர்களின் கண்களில் இருந்து பொழிகின்ற புல்லிய கண்ணீரே உள்ளிருக்கும் அன்பினைக் காட்டிவிடும். எனவே அன்பிற்குப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாள் இல்லை. காட்சியளவைக்கு எய்தாதாயினும், அனுமான அளவையான் வெளிப்படும். இதனால் அன்பின் உண்மை வெளிப்படும்.

ஆ. அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர், இவர்கள் பிறருக்குப் பயன்படாமையினால் எல்லாப் பொருளானும் தமக்கே உரியவர்கள். ஆனால் அன்புடையார் அவ்வாறானே அன்றித் தம் உடம்பாலும் பிறருக்கு உரியவர்கள் எனலாம். இவற்றால் இவர்களின் வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளலாம்.

இ. அறிந்தோர், பெறுவதற்கு அரிய மக்கள் உயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துவதற்கு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர்.

2. **பின்வருவன பற்றித் திருவள்ளுவர், அன்புடைமை அதிகாரத்தில் எவ்வாறு கூறுகிறார்?**

**அ. இல்வாழ்க்கையில் பொருந்திய அன்பின் பயன்.**

**ஆ. மறத்திற்கும் எது துணை.**

**இ. அன்பில்லாத உயிர் காய்தல் (வருந்துதல்) எவ்வாறானது.**

அ. அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயன் என்று அறிந்தோர் கூறுவது, இவ்வுலகத்தில் இல் வாழ்க்கையின் கண் நின்று, இன்பம் நுகர்ந்து அதன் மேல் துறக்கத்துக்குச் சென்று எய்தும் பேரின்பத்தினை ஆகும். இதுவே இல்வாழ்க்கையில் பொருந்திய அன்பின் பயனாகும்.

ஆ. அறத்திற்கு மட்டுமே அன்பு துணையானது என்று கூறுவர் சில அறியார். ஆனால் ஏனைய மறத்திற்கும் அவ் அன்பே துணையாக அமைகிறது.

இ. என்பு இல்லாத உடம்பு வெயிலில் காய்ந்து வருந்துவதுபோல அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்துவான்.

3. **"அன்புடைமை" என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

**அ. அன்பினது சிறப்பு**

**ஆ. அன்பிலாவிடத்து ஏற்படும் குற்றம்.**

அ. அன்பிலாதார் பிறருக்குப் பயன்படாமையினால் எல்லாப் பொருட்களும் தமக்கே உரியவர். ஆனால் அன்புடையவர் அவற்றானே அன்றித் தம் உடம்பாலும் பிறருக்கு உரியவர் எனலாம். எனவே தான் **'என்பும் உரியர் பிறர்க்கு'** எனப்பட்டார்.

★ பெறுவதற்கரிய மக்கள் உயிருக்கு உடம்போடு உண்டாகிய உறவினை அன்போடு பொருந்துவதற்கு வந்த பயன் என்று கூறுவர்.

★ ஒருவனுக்குத் தொடர்புடையாரிடத்துச் செய்த அன்பு அத் தன்மையால் பிறரிடமும் விருப்பமுடைமையைத் தரும். அவ் விருப்பமுடைமைதான் யாவருக்கும் நட்பு என்று சொல்லப்படும் சிறப்பைத் தரும்.

★ இவ் உலகத்தில் இல்வாழ்க்கையின் இடத்து நின்று இன்பம் நுகர்ந்து அதன் மேல் துறக்கத்துக்குச் சென்று எய்தும் பேரின்பத்தினை, அறிந்தோர் அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயன் என்று சொல்லுவர்.

★ அன்பு துணையாவது அறத்திற்கே என்று சில அறியார் கூறுவர். ஆனால் ஏனைய மறத்திற்கும் அவ் அன்பே துணையாக அமைகின்றது எனலாம்.
இவ்வாறு அன்பின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

ஆ. ★ என்பு இல்லாத உடம்பை (புழுக்கள் போன்றவற்றை) வெயில் வருத்துவது போல, அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் வருத்துவார்.

★ மனத்தின்கண் அன்பு இல்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல் **'பாலைவனத்தில் பட்டமரம் தளித்தாற் போன்றது'** எனலாம்.

★ உடம்பின் அகத்தின்கண் நின்று இல்லறத்துக்கு உறுப்பாகிய அன்புடையர் அல்லாதாருக்கு, ஏனைய புறத்து உறுப்புகள் எல்லாம் அறம் செய்வதற்கு என்ன உதவியைச் செய்யும்.

★ அன்பு முதலாக அதன்வழி நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அவ் அன்பு இல்லாதாருக்கு உள்ள உடம்புகள் என்பினைத் தோலால் போர்த்த உயிரற்ற உடம்பாகும் இவ்வாறு அன்பு இல்வழிப்படும் குற்றம் கூறப்படுகிறது.

4. **"விருந்தோம்பல்" என்னும் அதிகாரத்தில் கூறப்பட்ட குறட்பாக்களை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

**அ. விருந்தோம்பலின் சிறப்பு.**

**ஆ. விருந்தோம்பலின் இம்மை, மறுமைப் பயன்கள்**

**இ. இருமையும் பயத்தற்குக் காரணம்.**

**ஈ. விருந்தோம்பாவிடின் ஏற்படும் குற்றம்.**

**உ. விருந்தோம்புவார்க்கு முதலில் இன்முகம் வேண்டும்.**

அ. ★ மனைவியோடு வனத்திற்குச் செல்லாது இல்லின் கண் இருந்து பொருட்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம், விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உபகாரம் செய்தற் பொருட்டே ஆகும்.

★ தன்னை நோக்கி வந்த விருந்தினர் தன் இல்லத்தின் புறத்தே இருக்க வைத்துவிட்டு, உண்ணப்படும் பொருள் அமிர்தமேயாயினும் தான் உண்ண விரும்புதல் முறைமை உடையது அன்று.

இவ்வாறு விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

ஆ. ★ தன்னை நோக்கி வந்த விருந்தை நாள்தோறும் விரும்பிப் புறந்தருவானது இல்வாழ்க்கையானது வறுமையால் வருந்திக் கெடுதல் இல்லை. பொருள் தொலையாது, மென்மேலும் கிளைக்கும் எனலாம்.

★ இன்முகத்துடன் தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லத்தின் கண்ணே திருமகள் மகிழ்ச்சியுடன் வசிப்பாள்.

★ முன்னே வந்த விருந்தினரைப் போற்றி உணவளித்தபின், எஞ்சியதைத் தான் உண்டு வாழ்பவனது விளை நிலத்தில் விதை விதைக்க வேண்டுமா? வேண்டியதில்லை என்பதாகும். இவ்வாறு விருந்து ஓம்புவார் இம்மைப் பயன்கள் கூறப்பட்டுள்ளது.

**மறுமைப் பயன்**

தன்னிடத்தே வந்த விருந்தினரைப் பேணிப் பின், வரும் விருந்தாளியை எதிர்பார்த்து இருப்பவன் தேவர்களுக்கு நல்ல விருந்தினனாக அமைவான்.

இ. **இருமையும் பயத்தற்குக் காரணம்**

விருந்தோம்பல் ஆகிய வேள்வியின் பயன் இன்ன அளவினது என்ற அளவுடையது அல்ல. அதற்கு அவ் விருந்தின் தகுதியளவே அளவாக அமையும்.

ஈ. ★ விருந்தோம்பும் வேள்வியில் ஈடுபடாதார் நிலையில்லாப் பொருட்களை வருந்திக்காத்து, பின்பு வருந்திக்காத்த பொருளை இழந்தபின்பு பற்றுக்கோடு இழந்தோமே என்று வருந்துவர் என்பதாம்.

★ பொருள் உடைமைக் காலத்து இன்மையான விருந்தோம்பலை இகழுகின்ற பேதமையானது அறிவில்லாதவர் இடத்திலேயே உண்டு. அதாவது செல்வத்துள் வறுமையாவது விருந்தினரை உபசரியாமை ஆகும். இது அறிவில்லாதவர் இடத்தில் உண்டு.

இவ்வாறு விருந்தோம்பாவிடின் வழிப்படும் குற்றம் கூறப்பட்டுள்ளது.

உ. ★ அனிச்சம் பூ மோந்த உடனேயே வாடும். அன்றேல் வாடாது. ஆனால் விருந்து அளிப்போர் முகம் வேறுபட்டு நோக்க விருந்தினர் வாடுவர். எனவே விருந்தோம்பலுக்கு முதற்கண் இன்முகம் வேண்டும். அப்போது விருந்தினரின் இன்முகம் வாடாது, மகிழ்வடைவர் எனக் கூறலாம். எனவே விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும்.

# 3. ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்

1. **கிராமத்துப் பையனின் வறுமைச் சூழல் எவ்வாறு ஆசிரியரால் புலப்படுத்தப்படுகிறது?**

★ நேரத்தை வானத்தில் அளக்கும் நிலை. இது அவன்வாழும் சுற்றாடல் நிலையைக் காட்டும்.

★ வயல்களையும், பிரதான வீதியையும் இணைக்கும் ஒழுங்கற்ற வரப்புப் பாதை, சேறும் சகதியுமாகக் காணப்படுதல்.

★ கந்தல் சேலையை இழுத்து, உடம்பைப் போர்க்கிறான். இங்கே போர்க்கும் சீலையின் கோலம் காட்டப்பட்டுள்ளது.

★ வீட்டின் கோடிக்குள் ஈர விறகுடன் எரியாமற் போராடிக் கொண்டிருக்கும் தாயின் பரிதாபநிலை. ஈரவிறகு என்னும்போது காய்ந்த விறகு வேண்டமுடியாத நிலை.

★ "வழியில்லாதவை எல்லாம் பிள்ளைகளை ஏன் பெற வேண்டும்? பெற்றுப் போட்டு இப்படிச் சீரழிய விடுகின்ற நிலை...." எனக் கூறும் சின்னையாவின் கூற்று.

★ சுருக்கங்கள் விழுந்த, சதா போராட்டங்களினால் களை இழந்த முகம் எனக் காட்டப்பட்டுள்ள சின்னையாவின் முகத்தோற்றம்.

★ "போய். தரவையிலே மாட்டுச் சாணம் அள்ளு போ... போ..." என்ற அதிபரின் கூற்று.

★ "ஊத்தை உடுப்புப் போட்டு பள்ளிக்கூடம் வராதையென்று எத்தனை தடவை சொல்லியிருப்பன்.." என்ற அதிபரின் கூற்று.

★ உடுப்புத் தோய்க்கத் தாயிடம் அவன் சவர்க்காரத்துக்குப் பணம் கேட்டிருந்தான்: கிடைக்கவில்லை... என்ற கூற்று.

★ அவனுக்கு அவனது தோற்றம் அலங்கோலமென்று தெரியத்தான் செய்கிறது என்ற வார்த்தை.

★ **"கல்லூரிக்கு அவன் வரவேண்டுமென்றால் அந்த உடுப்பில்தான் வரவேண்டியிருக்கிறது."**

**"தனது உடையின் அலங்கோலத்தைக் காணக் காண.."** என்ற கூற்றுக்கள் வறுமைக் கோலத்தைக் காட்டி நிற்கின்றது.

★ சின்னையா வளர்த்த ஆட்டுக் கிடாய் விற்ற பணத்தில் ஒரு சித்திரை வருஷப் பிறப்பன்று புதுச்சட்டை தைப்பித்தமை படமாகத் தெரிகிறது.

இது நிகழ்ந்து ஒருவருடத்துக்கு மேலாகி இன்று சருகாகியும் விட்டது. அதிலிருந்து இன்றுவரை ஏதாவது ஒருநாள் ஒரு சேர்ட், காற்சட்டை எடுக்க வசதி வரவேயில்லை என்ற வார்த்தைகள்.

★ தாயிடம் தனக்குப் புது உடுப்புத் தேவையெனக் கூறிப் பார்த்தான். பார்ப்போமே என்ற பதில் கிடைத்தது. நெடுக இப்படித் தான் **"பார்ப்போமே"** என்று பதில் கிடைக்கும். அவன் கேட்பதை நிறுத்திக் கொள்கிறான் என்ற கூற்று வறுமையைத் தெளிவுறுத்துகிறது.

★ இருக்கும் ஓரிரு உடுப்புகளுடன் வாழ்க்கைச் சிக்கனத்தை அவன் பயின்று வருதல்.

★ அந்தத் தலைமை வாத்தியார் காற்சட்டை, சேர்ட் படு ஊத்தையாயிருக் கெண்டு உசிரெடுத்துப் போடுவான்.. என்ற சின்னையாவின் கூற்று.

★ ஒரு சன்லையிற்றாவது வாங்கித்தாவன்.. தோய்ப்பம் என்ற சின்னையாவின் வேதனையான***வார்***த்தைகள்.

★ "புத்தகமில்லை, கொப்பியில்லை, உடுப்பில்லை." என்ற மாணவன் ஒருவனின் வார்த்தை சின்னையாவின் வறுமை நிலையைக் காட்டுகிறது.

★ "இந்த ஊத்தை உடுப்போடை நான் என்னெண்டு பள்ளிக்கூடம் போவன்..."

"கொடியிலை இருந்து உடுப்பை எடுத்துக் கொண்டந்து காட்டட்டே.. சரியான ஊத்தையாய்ப் போச்சு.. அதைத் தோய்க்கப் போறன்" என்ற சின்னையாவின் வார்த்தைகள்.

★ "என்னணை... ஒரு சன்லையிற் சோப்பாவது வாங்கித் தரமாட்டியே?"

"கடைசியாகக் கேட்கிறன் ஒரு சவர்க்காரம் வாங்கித் தரமாட்டியே... உடுப்பெல்லாம் நாற்றம் அடிக்குது... தோய்க்க வேணும்" ஒரு சவர்க்காரம் கூட வாங்க முடியாது தாயிடம் கெஞ்சுகிற நிலை.

★ தாய் சேலைத் தலைப்பை அவிழ்த்த போது வெறுமை தவழப் பார்க்கும் நிலை அவர்களின் வறுமை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

★ "...நாளைப் பாட்டுக்குப் போ... சத்தியமாக நாளைக்கு வேண்டி வைக்கிறன். ...என்னட்டை இருக்கிறதே ஐந்து சதம் தான்.." என்ற தாயின் கவலை கலந்த வார்த்தைகள் அவர்களது வறுமை நிலையையும், சவர்க்காரம் ஒன்று வேண்ட முடியாத நிலையில் உள்ளமையையும் தெளிவுபடுத்துகிறது.

★ "பக்கத்து வீட்டுச் செல்லத்தட்டை ஒரு இருபத்தைஞ்சு சதம் கடன் வேண்டி இப்பத்தான் தங்கச்சியை மண்ணெண்ணெய் வாங்குவிச்சனான்..... முந்திச் சொல்லியிருந்தா விளக்கு எரியாட்டியும் பரவாயில்லையெண்டு தந்திருப்பன்... ஆரட்டை நான் கடனுக்குப் போறது." என்ற தாயின் கூற்றுக்கள் அவர்களின் வறுமை நிலையைக் காட்டுகிறது.

★ குடும்பக் கஷ்டம் அறிந்து புது உடுப்புக் கேட்டதை நிறுத்திக் கொள்கிறான் என்ற கூற்று.

★ "இண்டைக்காவது எப்படியாவது சவுக்காரம் வாங்கித் தோய்ச்சுப் போட வேணும்...

அவனவன்ரை கஷ்டம் அவனவனுக்கு... உம்.." என்ற சின்னையாவின் வார்த்தைகள்

★ சன்லையிற் பெட்டி மேல் தான் புத்தகங்கள் இருக்கும் நிலை. படிக்கும் மேசை சன்லையிற் பெட்டிதான்... என்ற சின்னையாவின் கூற்று.

★ சின்னையா வாழுகின்ற இடம் சேரி என்பதும் அவனது வறுமை நிலையைக் காட்டுகிறது.

★ லாந்தர் சிம்மினி உடைந்து காணப்படுகிறது. கடுதாசி ஒட்டல்கள் போடப்பட்டுள்ளன. உடைஞ்ச சிம்மினியிலை எத்தனை நாளைக்கென்று படிக்கிறது...

மேலே தரப்பட்டுள்ள பலதரப்பட்ட செய்திகள், கூற்றுகளின் அடிப்படையில் பார்க்கும்போது சின்னையாவின் வறுமை நிலை மிகத் தெளிவாக ஆசிரியரால் புலப்படுத்தப்படுவதைக் காணலாம்.

**2. "ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்" என்ற கதையில் இடம் பெறும் பிரதான பாத்திரங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவர்களின் குணவியல்புகளை எடுத்துக் காட்டுக.**

இக் கதையில் வரும் பிரதான பாத்திரங்களும் அவர்களின் குணவியல்புகளும் வருமாறு,

### அ. சின்னையா

★ பாடசாலைக்கு நேரத்துடன் செல்ல வேண்டும் என்ற ஆசை அவனுக்கு இருந்துள்ளது. நேரத்திற்குப் பாடசாலைக்குப் போக விருப்பமுடையவன். ஆனால் முடியவில்லை. இதனை அவன் பாடசாலைக்கு அவதிப்பட்டுச் செல்வதன் மூலம் அறிய முடிகிறது.

"...**பள்ளிக் கூடத்துக்கு நேரம் போயிடும்.. அது தான் யோசிக்கிறன்.**" சதா போராட்டம்... சுருக்கம் விழுந்த களையிழந்த முகம் அவன் துன்பத்தை மனதில் அடக்கி வைத்திருப்பதைக் காட்டுகிறது. தந்தையின் சொற்கேட்டு, தோட்டத்தில் வேலைசெய்யும் இயல்பினன்.

★ அதிபர் மட்டரகமாகப் பேசுவதையும் பொருட்படுத்தாத குணமுடையவன். மட்டரகமாகப் பேசியபோது போகட்டும் பரவாயில்லை. எனக் கூறியமை இதனை உறுதிப்படுத்தும்.

★ அதிபரிடமிருந்து தனக்கு அடி விழக்கூடாது என்று பிரார்த்திப்பவன். பயந்தவன். பிரம்பால் மட்டும் அவனை ருசிக்கக் கூடாது என்று அவனுள் கோடி கோடி உச்சரிப்புகள் இதனை வெளிப்படுத்தும்.

★ வாழ்க்கைப் போராட்டத்தை இளமையில் தாங்கும் சக்தி படைத்தவன்.

★ வேலைகளை உரிய வேளையில் செய்ய எண்ணுபவன். ஆட்டுக்குக் குழை வெட்டணும், படிக்க வேண்டும், பாடசாலை செல்ல வேண்டும் என்ற நோக்கமுடையவன். தாயின் சொற்களுக்கு மதிப்பளிப்பவன்.

★ குடும்பச் சுமைகள், கஷ்டங்களை உணரும் தன்மை படைத்தவன்.

★ சகமாணவர்களாலும் அதிபராலும் பழிக்கப்பட்ட போதும் பொறுமையுடன் எதையும் தாங்கும் இயல்பு படைத்தவன்.

★ பன்னைப் பழக் கொப்புளங்கள் கைகளில் தெறித்தெழுந்த பொழுதும் பொறுமையுடன் தந்தை சொற்கேட்டுத் தோட்டத்தில் வேலை செய்யும் இயல்புடையவன்.

★ படிக்க விரும்பமுடையவன் வீட்டுப் பின்னணி தடையாக அமைதலை எண்ணிக் கவலைப்படுபவன். (விளக்கு, படிப்புமேசை, பாடசாலைக்குத் தாமதித்து செல்லல், உடுப்பு என்பன இவற்றைப் பிரதிபலிக்கும்)

## ஆ. பாடசாலை அதிபர்

★ சென்ற் போல்ஸ் கல்லூரி அதிபர் மிகவும் பொல்லாதவர். கல்லூரி அதிபருக்குத் தெரியாமல் ஓடி மறைய வேண்டும்.

★ அற்ப காரணங்களுக்காக மாணவர்களைத் தண்டிப்பவர்.

★ **"அதிபர் காரியாலயத்தைக் கடந்தால்... நிம்மதி . செருமக்கூடத் தைரியம் வருகிறது."** என்பதன் மூலம் அதிபரின் கொடூரத்தன்மை காட்டப்படும்.

★ அதிபரின் வளைந்து, கிழிந்து, சிராய்ந்து தொங்கும் பிரம்பு என்பதில் இருந்து, இப் பிரம்பு மாணவர்களைப் பதம் பார்த்திருக்கிறது என்பதை அறிவதுடன், கிழிந்த பிரம்பு என்பதன் மூலம் தண்டனையின் மிகையும் காட்டப்படுவதால் அவரின் இரக்கமற்ற தன்மை காட்டப்படும்.

★ கையடங்கலும் பச்சைத் தழும்புகள், தழும்புகள் வரக்கூடிய அளவுக்குத் தண்டனை வழங்கும் கொடூர மனம் படைத்தவராக அதிபர் காட்டப்படுகிறார். **"அதிபரைப் பிள்ளையில்லாப் பாவி எனத் திட்ட வேண்டும் போலிருந்தது..."** என்ற வார்த்தை இதை உறுதி செய்யும்.

★ மாணவர் தொடர்பான உளவியல் பின்னணிகளை அறியாத உள்ளம் படைத்தவராக ஆசிரியர் காட்டப்படுகிறார்.

★ சிலர் மீது வெறுப்புக்காட்டும், பாரபட்சம் காட்டும் இயல்பினன். இப்பத் தாண்டா: நீ வரக்கு ஒரு நிமிஷம் முந்தி உன்னைப் போல நேரம் பிந்திச் சந்திரன் வந்தான், ஒரு வார்த்தை பேசவில்லை. மெல்லிய சிரிப்போடு "**போய் உட்காரு**" என்று சொல்கிறார் என்ற கூற்று இதனைத் தெளிவுபடுத்தும்.

★ உயர்ந்த பதவி வகிப்பவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு மாதிரியும், ஏழைகளின் – பிள்ளைகளுக்கு ஒரு மாதிரியும் நடக்கும் பண்பு கொண்டவர்.

சந்திரனைப் போல ஒரு "**டாக்குத்தர்**" மகனாக நீயுமிருந்தா உனக்கு ஏன் அடிக்கப்போகிறார் என்ற கூற்று இதை விளக்கும்.

★ மரியாதைக் குறைவாக மாணவர்களைத் திட்டும் இயல்புடையவர். "**போடா போய் தரவையிலே மாட்டுச் சாணம் அள்ளு. போ.. போ.. உனக்கேன் படிப்பு**"

★ சின்னையா ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் பிந்தி வருவதற்கான வீட்டுச் சூழல் பின்னணியை அறிய முடியாத இயல்புடையவர்.

★ மாணவருடன் அன்புடன் பழகாதவர். "**டேய் வரமாட்டியா.. உம்... கிட்ட கிட்ட... பிடிச்சனெண்டால் தோல் உரிச்சுப் போடுவன்.**"

★ மாணவ உளவியல் பற்றிய அறிவு அற்றவர். தண்டிக்கப்படுபவரின் உடல்நிலை பாராது தண்டிப்பவர். "**.. காது கன்னம் பாராமல் அந்தக் கொதிகுடலன் அடிக்கப் பிடிச்சானெண்டால். உலையிலை பிறகு அரிசி போடத் தேவையில்லை. கொண்டு போட்டு விட்டுடுவான்**" என்ற கூற்று இதனை உறுதிப்படுத்தும்.

## இ. சின்னையாவின் தாய்

★ வீட்டு வறுமை நிலையைத் தாங்கும் இயல்பு படைத்தவள், பொறுமையுடையவள்.

"...வீட்டில் ஒரு கோடிக்குள் ஈரவிறகுடன் எரியாமல் போராடிக் கொண்டிருக்கும் தாய்...." என்பதன் மூலம் அவளின் வறுமைப் போராட்டம், பொறுமை தெளிவுபடுத்தப்படுகிறது.

★ குடும்பக் கஷ்டங்களை எல்லாம் எண்ணிக் கவலைப்படும் உள்ளம் கொண்டவள்.

"..அந்தப் பாழ்பட்ட கடவுள். இந்தப் பாவியின்ர வயித்திலை உங்களைப் பிறக்கச் சொல்லி எழுதி வைச்சிட்டான்..." என்ற கூற்று.

★ மகனின் மனம் நோகாது சமாதானம் செய்யும் மனோநிலை உடையவள். ஓரிரு சந்தர்ப்பங்களில் அவன் தாயிடம் தனக்குப் புது உடுப்புத் தேவையெனக் கூறிப் பார்த்தான். "பார்ப்போமே" என்ற பதில் கிடைத்தது. வாங்கக் கஷ்டம் எனக் கூறி மகனைக் கவலைப்பட வைக்காது சமாதானம் கூறும் இயல்பு உடையவள்.

★ "ஒரு சன்லையிற் றாவது வாங்கித் தாவன்... தோய்ப்பம்.. " என்ற வார்த்தை மகனின் மனத்தில் உள்ள வேதனையைக் காட்டுகிறது. வேதனை மிகுந்தவளாகவும், அவற்றை மனத்துள் வைத்துப் போராடுபவளாகவும் காட்டப்படும் நிலை இதனைக் காட்டும்.

"அவளுக்கு மகனைப் பார்க்கவே வெட்கமாய். ...அவள் ஒன்றும் சொல்ல இயலாதவளாய். காதிலே விழுந்தது போலக் காட்டிக் கொள்ளாதவளாய். ஸ்தம்பிக்கிறாள்." என்ற கூற்று இதனை உறுதி செய்யும்.

★ உள்ளத்தில் போராட்டம், கொந்தளிப்பு, மௌனத்துக்குள்ளே உணர்ச்சிகளை அடக்கி வைக்கும் இயல்பு உடையவள். அவளது மௌனத்துக்குள்ளே அடைத்து வைத்த உணாச்சிகளெல்லாம் வெளியில் ஒரு நதியின் அமைதி. உள்ளே

பயங்கரச் சுழிகள் நிறைந்த நதியின் வேகமான சுழல். கடல்களின் வேகமான கொந்தளிப்பு எனக் கூறுவதால் அறியலாம்.

★ கைகாவலாக அவசரத்திற்குத் தேவைப்படுவதற்கான பணம் வைத்திருக்க விருப்பமுடையவள். ஆனால் முடியவில்லை.

★ அவிழ்த்த சேலைத் தலைப்பினை வெறுமைதவழப் பார்க்கும் பொழுது.. சிரிப்பது போன்ற அழுகை கலந்த ஜீவ ஓட்டம் அற்ற சிரிப்பு அது. இது அவளது மனப் போராட்டத்தைக் காட்டும் துன்பங்களை வெளிக்காட்டாத மனோநிலை.

★ சமாதான சமரஸம் தெரிந்தவள் அவள்.
**"என்ரை குஞ்சல்லே.. என்ரை ராசா"**

★ உள்ளதை ஒழிக்காது கூறும் மனப் பாங்கு உடையவள்.
**"வேணுமென்டாப் பார்... என்னெட்டை இருக்கிறதே ஐந்து சதம் தான்."**

★ கொதிநீரை ஆறவைக்கும் இதமான சொற்கள் அவளிடம் இருக்கின்றன.
**"நீ கூட உணராவிட்டால் நான் என்னடா செய்வன்.."**

★ குடும்ப நிலையை மகனுக்குக் கூறிச் சமாதானம், கூறும் குணநிலை.
**"..பக்கத்து வீட்டு செல்லத்தட்டை ஒரு இருபத்தைஞ்சு சதம் கடன் வேண்டி இப்பதான் தங்கச்சியை விட்டு மண்ணெண்ணெய் வாங்குவிச்சனான்.."**

★ ஆரிட்டக் கடனுக்குப் போறது? என்ற ஏக்க மனோநிலை கொண்டிருந்தவள்.

★ மகனைச் சமாதானப்படுத்த **"சத்தியம்"** கூறும் மனோநிலை.

இவ்வாறு இச் சிறுகதையில் மேலே காட்டப்பட்ட பாத்திரங்களின் குணவியல்புகள் காட்டப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

# 4. நடிப்புச் சுதேசிகள்

## பழித்தறி வுறுத்தல் - கிளிக் கண்ணிகள்

1. **பாரதியார் நடிப்புச் சுதேசிகள் என யாரைக் குறிப்பிடுகிறார்?**
பாரதியார் நடிப்புச் சுதேசிகள் என நடிக்கும் பாவனை கொண்டவர்கள் பாரத மக்கள் என்பதைக் காட்டுவார். இப்பாரத மக்களின் இழிந்த இயல்புகளை இப்பகுதியில் காட்டி அவர்களின் நடிக்கும் பாங்கைக் காட்டுவார்.

2. **நடிப்புச் சுதேசிகளின் இயல்புகளைப் பாரதியார் இழித்துக் கூறுமாற்றை விளக்குக.**

★ நெஞ்சில் உரமற்றவர், நேர்மையற்றவர், வஞ்சனை செய்பவர், வாய்ச் சொல்லில் வீரம் காட்டுபவர், செய்யவேண்டியதைச் செய்யாதவர், பிதற்றுபவர், கண்ணிருந்தும் குருடர், தம்மிடம் பல இருப்பதாகத் தம்பட்டம் அடிப்பவர், தாம் சொன்னபடி செய்யார், நம்ப முடியாதவர் (இயந்திரசாலை என்பார். துணிகள், உப்பு, உள்நாட்டுச் சேலை, சீனி, தேவியர் மானம், தெய்வத்தில் பக்தி எனப் புழுகுவர்)

★ பெண்களின் மானம், தெய்வத்தின் சக்தி என்றெல்லாம் கூறுவர், நம்பாத இயல்புடையவர். மாதரைக் கற்பழித்துக் கொடியதுன்பம் பிறர் விழைவிக்க, மூடர்கள் போல் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்.

★ கோயிலில் பிறர் தீமைகள் செய்ய அதைத் தடுக்காது தமது உயிர் பெரிது என எண்ணுபவர்கள்.

★ அச்சம், பேடிமை, அடிமைச் சிறுமதி என்பவற்றை அதிகளவில் கொண்டவர்கள்.

★ ஊக்கம், உள்வலி, உண்மை என்பவற்றில் பற்று இல்லாதவர்கள்.

★ மானத்தைச் சிறிதாக எண்ணுபவர்கள். வாழ்வைப் பெரிதென எண்ணுபவர்கள். இவர்கள் ஈனர்கள்.

★ 'வந்தே மாதரம்' எனப் போற்றுபவர். ஆனால் உள்ளத்தில் அந் நாட்டுப் பற்று இல்லை.

★ பழமை விரும்பிகள், அவமதிப்பைப் பற்றி எண்ணாது இழிந்த செல்வம் தேடுவதில் விருப்பம் உடையவர்.

★ சொந்தச் சகோதரங்கள் துன்பத்தில் மூழ்கி இறப்பது கண்டும் இரங்காத உள்ளம் படைத்தவர்கள், வாழவேண்டிய நெறியை மறந்தவர்கள்.

★ பாரத மக்கள், பஞ்சத்தாலும், நோயாலும் துன்பப்பட்டு நித்திரை கொள்வதைக் கண்ணால் கண்டும் செயற்படாது சோம்பலுடன் கிடப்பவர்கள்.

தாயைக் கொல்லுகின்ற பஞ்சத்தைக் கூடத் தடுக்க முயற்சி எடுக்கமாட்டார்கள்.

ஆனால் வாயைத் திறந்து வந்தே மாதரம் எனக் கூறுவர் என்று இழிவாகப் பாரதியார் குறிப்பிடுகிறார்.

**3. நடிப்புச் சுதேசிகள் "வாய்ச் சொல்வீரர்" எனக் கூறப்பட்டிருப்பது எக் காரணங்களால் காட்டப்படுகிறது?**

பாரத நாட்டு மக்கள் உள்ளத்தில் வலிமை இல்லாமலும், நேர்மையற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் தீங்கு பொருந்திய வார்த்தைகளைச் சொல்கிறார்கள். இவ்வாறானவர்கள் அப்படிச் செய்வோம், இப்படிச் செய்வோம் என வாய்ச் சொல்லால் தம்பட்டம் அடிப்பவரே அல்லாமல் செயல் வீரர் அல்ல என்பதைக் கூற "வாய்ச் சொல்லில் வீரர்" என்றார் பாரதியார்.

**4. பாரதமக்கள் "ஊமைச் சனங்கள்" எனப் பாரதியாரால் இழிவாகச் சொல்லப்படுவதற்கான காரணம் யாது?**

★ பாரத மக்களின் இழிநிலை கண்டு பாரதியார் பொங்கி எழுகிறார். பாரத மக்களை ஊமைச் சனங்கள் எனக் கூறும் அளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் காணப்பட்டன.

★ பயமும் பேடிமைத் தன்மையும் கொண்டவர்களாக வாழ்கின்றனர். எதற்கும் துணிந்து முன் செல்ல அஞ்சுகின்றனர், தயங்குகின்றனர். அடிமை வாழ்க்கையை விரும்புபவர்களாக உள்ளனர். சுதந்திர எழுச்சி பெறவும், தனித்து நிற்கும் உரம் படைத்தவர்களாகவும் இவர்கள் இல்லாது இருக்கிறார்கள் என்பதால் **ஊமைச் சனங்கள்** எனக் கூறினார்.

**5. நடிப்புச் சுதேசிகள், வாழத் தகுதி அற்றவர்கள் என்பதற்குப் பாரதியார் காட்டும் காரணங்கள் யாவை?**

பாரத மக்கள் முயற்சியற்றவர்களாக வாழ்கின்றனர். உள்ளத்தில் வலிமை கொண்டவர்களாக அவர்கள் இல்லை. நேர்மை வழிகளை அணுகுபவர்களாக இம் மக்கள் இல்லை.

எனவே, முயற்சி, உளவலிமை, உண்மையுடன் கூடிய நேர்மையான வாழ்வு என்பனவற்றில் விருப்பம் இல்லாத பொய் நடிப்புடன் வாழுகின்ற இந் நாட்டு மக்கள் ஒவ்வொரு கணமும் இந்நாட்டில் வாழ்வதற்குத் தகுதி கொண்டவர்களா? இல்லை என்பதாகும். எனவே, இவற்றில் பற்றுக் கொண்டவர்களே இந்நாட்டில் வாழத்தகுதி கொண்ட பாரத மக்கள் என்பதைப் பாரதியார் வெளிக்காட்டுகிறார். எனவே இவ்வாறான காரணங்களால் இவர்கள் இந்நாட்டில் வாழத் தகுதி அற்றவர்கள் என்பார்.

**6. கீழே உள்ளவற்றை உள்ளடக்கி நடிப்புச் சுதேசிகளைப் பழித்துரைப்பதன் மூலம் பாரதியார் உணர்த்த விரும்புவன யாவை என்பதை விளக்குக.**

**அ. வாய்ச் சொல் வீரம்** **ஆ. நாட்டத்திற் கொள்ளார்**
**இ. அஞ்சிக் கிடத்தல்** **ஈ. பழமை பேசல்**
**உ. சிந்தையிரங்காமை.**

அ. ★ சுதேசிகள் தாம் சொல்வதைச் செய்பவர்களாக இருக்க வேண்டும் எனப் பாரதியார் விரும்புகிறார். பாரத மக்கள் உள்ளத்தில் வலிமை இல்லாதவர்களாகவும், நேர்மையற்றவர்களாகவும், தீங்கு வார்த்தைகளைச், செயல்களைச் செய்பவர்களாக இருக்கக் கூடாது என அறைவார்.

★ சொன்னதைச் செய்யும் வல்லமை படைத்தவர்களாக நாம் பாரத நாட்டில் வாழ வேண்டின் நெஞ்சில் உரம், நேர்மைத் திறன், வஞ்சனை அற்ற செயல், சொல் என்பன உடையவர்களாக இருக்கவேண்டும். எனவே இவை பேணப்படுவதன் மூலம் வாய்ச் சொல்லைச் செயலில் காட்டுபவர்களாக ஆகலாம் எனக் கூறுவார்.

ஆ. ★ கூட்டங்களில் கூடிநின்று எல்லோருடனும் கூடி, அர்த்தமற்ற செயற்பாடற்ற விதத்தில் பயனற்றுப் பிதற்றுவதை விடுவோமாக. நாம் கூட்டங்களில் கூடித் தேவையற்றனவற்றைப் பற்றிப் பேசுவதை விடுத்துச், செயலில் இறங்குவோம். அதாவது நாட்டத்தில் பங்கேற்போம் என்பார்.

இ. ★ இறைவனின் கோயில்களில் வஞ்சனை மிக்கவர்கள் சென்று பலவித தீமைகளை ஆற்றுகின்றனர். இதனைப் பிழை எனக் கண்டும் கூறும் திறமை அற்றவர்களாக வாய்மூடி மௌனியாக அஞ்சிப் பாரத மக்கள் வாழ்கின்றார்கள் எனப் பொங்குவார் பாரதியார்.

★ தவறைத் தட்டிக் கேட்கப் பயப்படுகிறார்கள். தமது உயிர் மட்டுமே தமக்குப் பெரிது. யாரும் எதுவும் செய்யலாம் என எண்ணித் தீமைக்கு உந்துதல் அளித்து வாழ்பவர்களாகப் பாரதமக்கள் பயந்து காணப்படுகின்றனர் என்பதைப் பாரதியார் விளக்குகிறார்.

எனவே அஞ்சாமையுடன் தீமையை எதிர்த்துப் போராடுபவர்கள், அறத்தைப் போற்றுபவர்க்ள், தவறைச் சுட்டிக் காட்டுங்கள், திருத்துங்கள் என்பன போன்ற கருத்துக்களைப் பாரதியார் எடுத்துக் கூறுவார்.

ஈ. ★ பழமை பேசுபவர்களாகப் பாரத மக்கள் வாழ்கின்றனர். பழமையில் பாரதம் அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்து சீரழிந்த இந் நிலையை எண்ணிப் பாருங்கள்.

★ அடிமைகளாக வாழ எண்ணாதீர்கள், சுதந்திரம் மிக்கவர்களாக, நவீனம் போற்றுபவர்களாக, காலத்திற்கேற்ப வகைகள் செய்பவர்களாக நாம் மாற வேண்டும். நவீனத்தைப் போற்றுபவர்களாக நாம் மாறுவது அவசியம் என்பதைப் பாரதியார் ஆணித்தரமாகக் கூறுவார்.

★ எனவே தான் தமிழ் இலக்கியமும், பாரதமும் நவீனத்துக்குள் நுழையப் பாரதியார் பங்காற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, பழமை பேசி வீணே காலத்தைப் போக்காது, புதுமை பேசுபவர்களாகவும், புதுமை விரும்பிகளாகவும் நாம் மாறுவது அவசியம் என்பார்.

உ. ★ நாம் பிறர் துன்பம் கண்டு இரங்குபவர்களாகவும், பிறருக்கு ஏற்படும் துன்பம் எமக்கு ஏற்பட்டதாக எண்ணும் உள்ளம் கொண்டவர்களாகவும் நாம் வாழ வேண்டும்.

★ சொந்தச் சகோதரங்கள் துன்பத்தில் மூழ்கி இருப்பது கண்டும், அவர்கள் துன்பத்தினால் இறக்கும் அளவுக்கு அவதிப்படுவது

கண்டும் உள்ளம் இரங்காதவர்களாகப் பாரத மக்கள் உள்ளனர். இவ்வாறானவர்களால் எவ்வாறு பிறர் துன்பம் துடைக்க முடியும்.

★ எனவே பாரதமக்கள் முதலில் பிறர் துன்பம் கண்டு இரங்குபவர்ளாகவும் அவர்களின் துன்பம் தன் துன்பம் என எண்ணும் உள்ளம் கொண்டவர்களாகவும் மாற வேண்டும். அவ்வாறு மாறி அவர்களின் துன்பம் துடைக்க முன்வரல் வேண்டும்.

★ இம் மனோநிலை ஏற்படும் இடத்தே பாரதியார் காண எண்ணுகின்ற செம்மையைக் காணமுடியும். எனவே பிறர் துன்பம் போக்கும் உளப் பண்பு பாரத மக்களிடையே வளர வேண்டும், வளர்க்கப்பட வேண்டும் என்பது பாரதியாரின் ஆதங்கம் ஆகும்.

# 5. மானவீரன்

**1. கும்பகர்ணன் ஒரு மானவீரன் என்பதை நிரூபிக்கக் கட்டுரை ஆசிரியர் காட்டும் நியாயங்களைத் தெளிவுறுத்துக.**

★ மாற்றரசன் தேவியை விடுத்து ஆவியைக் காக்குமாறு தமையன் இராவணனை அவன் வேண்டினான். இலங்கை வேந்தன் அவ்வுரை கொள்ளாதபோது தன்னை ஆதரித்து வளர்த்த தமையனுக்காக அமர்புரிந்து ஆவி துறக்கத் துணிந்தான். இது கும்பகர்ணன் மானவீரன் என்பதைக் காட்டுகிறது.

★ தம்குல மானத்தை விரும்பியே தீநெறியில் தலைப்பட்ட தலைவனைத் தடுத்துத் திருத்த முயல்வது அவனைச் சார்ந்த கடன் என எண்ணுகிறான்.

★ அயோத்தி மன்னன் மனைவியை நயந்து அம்மங்கையை அசோக வனத்தில் நீ சிறை வைத்த செயல் நீதியோ? முறையோ? இதனிலும் பெரும்பழி உண்டோ? என்ற நீதியுரைகள் தம் குலமானத்தைக் காத்து, தமையனைத் திருத்த வேண்டும் என்ற கும்பகர்ணனின் மான உணர்வைக் காட்டி நிற்கிறது.

★ **தான் செய்வது தவறு என உணர்ந்தும் தவறு செய்தாரைத் தட்டிக் கேட்கிறான்.** முடியாத போது **செஞ்சோற்றுக் கடன்** கழிக்குமாறு அமர்க்களம் செல்கிறான். இங்கு செய்ந்நன்றி மறவாத மானவீரனாகக் கும்பகர்ணனை ஆசிரியர் காட்டுகின்றார்.

★ இராமன் கும்பகர்ணனைத் தன்னோடு சேர்த்துக் கொள்ள விரும்புகிறான். ஆனால் நன்றி மறவாத மானவீரன் தமையனைத் துறந்து பகைவரைச் சேர்ந்து வாழ இசைந்தானல்லன். இங்கு தான் மான உணர்ச்சியைக் காட்டுபவனாகக் கும்பகர்ணன் காட்டப்படுகிறான்.

★ அறநெறி துறந்த அரக்கர்கோனைக் கைவிட்டு இருமையுந் தரும் பெருமானாகிய இராமனைச் சேர்ந்து வாழ்தலே ஏற்றதாகும் என விபீடணன் எடுத்துக் கூறுகிறான்.

அப்போது கும்பகர்ணன் கூறும் வார்த்தைகள் மானவீரன் என்பதை நிரூபிக்கின்றன.

"ஐய! நிலையற்றதாகிய இவ்வுலக வாழ்வை விரும்பி இராவணன் செய்த பெருநன்றியை மறப்பேனோ?"

"பன்னாள் போற்றி வளர்த்துப் போர்க்கோலம் புனைந்தனுப்பிய மன்ன - னைத் துறந்து மாற்றாருடன் சேர்வேனோ? உன்செயல் உனக்குத் தக்கதேயாம். மலரோன் வரத்தால் நீ மாயா வரம் பெற்றாய். உன் செயல் உனக்குத் தக்கதேயாம்.. புலையுறு மரணம் எய்தலே எனக்குப் புகழாகும். அரணமைந்த இலங்கையின் அளவிறந்த செல்வத்தை விரும்பி. என் தமையனைக் கொல்ல வந்த பகைவனை வாழ்த்தி அவன் அடிபணிந்து வாழ்வேனோ? ..."

எனக்கூறும் கும்பகர்ணனின் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் மானத்தின் ஊற்றுக்கள் செறிந்துள்ளனவாகவும், அவன் மானவீரன் என்பதை நிரூபிப்பனவாகவும் அமைந்துள்ள மையைக் காணலாம்.

★ அமர்க்களத்தில் அநுமன் தோள்களில் ஏறிவந்த இலக்குவனைக் கும்பகர்ணன் காண்கிறான். தன் தங்கையின் மூக்கரிந்த வீரனைக் கண்டபோது அரக்கன் மனம் மானத்தால் கொதித்தது என்று கூறுவதன் மூலம் அவன் மானவீரன் என்பது புலப்படுகிறது.

"குற்றமற்ற நங்கையின் நாசியைக் கொய்து அவளின் கூந்தலை இழுத்த உனது கொடுங்கையை இப்பொழுதே அறுத்தெறிவேன்"

என நெடும்போர் தொடுத்தான் இச் செயல் அவன் மானவீரன் என்பதை எடுத்து இயம்புகிறது.

★ கும்பகர்ணனின் மூக்கினை வானரத் தலைவன் சுக்ரீவன் கடித்தெடுத்துச் சென்றான். மூக்கிழந்த முகத்தை வானத்தவர் கண்டு நகுவரென்று கும்பகர்ணன் புழுங்குகிறான். எனவேதான் மானத்தைக் காப்பாற்ற எதிரே வந்த இராமனை நோக்கி,

**"ஐயனே! உன்னிடம் யான் ஒன்று வேண்டுகிறேன். மூக்கிலா முகம் என்று முனிவர்களும், அமரர்களும் என்னை நோக்கி ஏளனம் செய்வர். அவ்வாறு செய்ய இடமின்றி என் கழுத்தை உன் கணையால் அரிந்து கடலுள் ஆழ்த்திவிட வேண்டும்"**

எனக் கூறுகின்ற கவலை தோய்ந்த வார்த்தைகள் பிறர் பழிக்காது மானத்துடன் இறக்க வேண்டும் என்ற கும்பகர்ணனின் விருப்பம் அவன் மானவீரன் என்பதை நிரூபிப்பதாக அமைகிறது.

★ எனவே உலக வாழ்வில் மானமே வீரர்க்கு அணியென்று கருதிய கும்பகர்ணன் மரணத்தின் பின்னும் மானங் காக்கக் கருதிய முறையானது மாண்புடையது.

★ நன்றியறிதல் என்னும் நல்லறத்தில் வழுவாது நின்று, மாற்றானைத் தொழுது வாழ்வதிலும், மாண்டொழிதல் நன்று என்னும் மான வாழ்க்கையின் மணிக்கொழுந்தாக ஆவி துறந்து அழியாப் புகழ் எய்தினான் மானவீரன் கும்பகர்ணன்.

இவ்வகையில் கும்பகர்ணன் மானவீரன் என்பதை ஆசிரியர் பல்வேறு சான்றுகள் மூலம் பல இடங்களில் எடுத்துக் காட்டி நிரூபிக்கிறார்.

**2. கும்பகர்ணனை அறிமுகப்படுத்தும் வகையில் அவனது பெருமையைக் கம்பர் கூறியுள்ளமை எவ்வாறு கட்டுரையில் தரப்பட்டு உள்ளது?**

★ வலிமை சான்ற பெரு வீரன், கும்பகர்ணனைக் கண்டு கூற்றுவனும் நடுங்கினான். அமரர் அஞ்சி அயர்ந்தார்கள். கடுங்காற்று, கொடுங்கனல் என்பவற்றைப் பிழிந்து சாறு கொள்ளும் வெற்றி வாய்ந்தவன்.

★ அறத்தாறுணர்ந்த அறிஞனாக விளங்கினான். அயோத்தி மன்னன் மனைவியைக் கவர்ந்து சிறை வைத்த அரசன் செயல் அடாதென்று கூறியவன். இது நீதியோ? முறையோ? என்று கூறித்தடுத்தவன்.

★ அறம் உலகில் வெல்லும் என உரைத்தவன். மறம் எஞ்ஞான்றும் மாண்டு ஒழியும் என்று எண்ணியவன்.

★ கற்புடை மங்கையின் கண்ணீரே இலங்கை காவலன் ஆக்கத்தை அழிக்கும் என எண்ணியவன்.

★ மாற்றரசன் தேவியை விடுத்து ஆவியைக் காக்குமாறு இராவணனை வேண்டியவன்.

★ இராவணன் தன் உரை கொள்ளாதபோது தமையனுக்காக அமர்க்களம் சென்று உயிர் விடத் துணிந்தவன். இது அறநெறி என எண்ணியவன்.

★ செஞ்சோற்றுக் கடன் கழிக்க அமர்க்களம் போந்த வீரன் கும்பகர்ணன்.

★ பிறர் செய்த நன்றியைப் பொன்போற் போற்றும் பெற்றிவாய்ந்தவன்.

★ உண்மைக்குச் சான்றாய் அமைந்தவன்.

★ **"இராவணன் செய்த பெரு நன்றியை மறப்பேனோ?**
**மன்னனைத் துறந்து மாற்றாருடன் சேர்வேனோ?**
**புலையுறு மரணம் எய்தலே எனக்குப் புகழாகும்."**

என்ற வார்த்தைகள் கும்பகர்ணனின் புகழை விசேடித்து நிற்கின்றன.

★ **"தமையனைக் கொல்ல வந்த பகைவனை வாழ்த்தி அவன் அடிபணிந்து வாழ்வனோ?"** என மானவீரனைக் காட்டுவார்.

★ விடை பெற்றுப் போர்க்களம் செல்லும்போது கூடத் தமையனின் அடி பணிந்து வணங்குபவனாகவும், பாசம் மிக்கவனாகவும் காணப்பட்டான்.

★ தான் செய்த பிழைகளைப் பொறுக்குமாறும், தான் இறந்த பின்னாகிலும் சீதையை விடுதல் உனக்கு நன்றாகும் கொற்றவ! என எதிர்வு கூறியவன்.

★ தங்கையின் மூக்கரிந்த இலக்குவனைக் கண்டபோது மானத்தால் துடித்தமை, வீரமொழி வழங்குதல். அவனின் மான வேட்கையை வெளிக்காட்டுகிறது.

★ **"மூக்கிலா முகம் என முனிவர். அமரர் பழிக்குமுன் என் கழுத்தை உன் கணையால் அரிந்து. கடலில் ஆழ்த்துக"**

என்ற வார்த்தைகள் மரணத்தின் பின்பும் மானம் காக்க கருதினான் என்பதை எடுத்து இயம்புகின்றன. என்ற பல்வேறு படித்தரங்கள் மூலமாக ஆசிரியர் கும்பகர்ணனின் பெருமையினைக் கட்டுரையில் அடுக்கிச் செல்வதைக் காணலாம்.

★ கும்பகர்ணன் வலிமை சான்ற பெருவீரனாக விளங்கினான். குரைகழலணிந்த கும்பகர்ணனைக் கண்டு கூற்றுவனும் குலைந்து நடுங்கினான். அமரர் அஞ்சி அயர்ந்தார்கள். கடுங்காற்றையும், கொடுங்கனலையும் பிழிந்து சாறு கொள்ளும் வெற்றி வாய்ந்தவன் கும்பகர்ணன். இதனைக் கம்பர் பின்வருமாறு கூறுவார்.

***ஊறுயர்ந்த உரத்தினான்.***
***மேனி மிர்ந்த மிடுக்கினான்***
***தாறுயர்ந்த தவத்தினான்***
***வாறுயர்ந்த வரத்தினான்.***

இவ்வீரன் நீல கண்டன் அருளால் பெற்ற சூலத்தின் வலியால் காலனுக்கும் காலனாக அமைந்தான். எனக் கும்பகர்ணனின் வெற்றிவாகைச் சிறப்பானது கட்டுரையில் படித்தரமாகக் காட்டப்படுகிறது.

**3. விபீடணன், கும்பகர்ணனை நோக்கிச் சோகத்தைத் தரும்வகையில் எடுத்துரைத்த வார்த்தைகளையும், கும்பகர்ணன் கூறிய பதிலையும் தருக?**

★ அறநெறி துறந்த அரக்கர் கோனைக் கைவிட்டு, இருமையும் தரும் பெருமானாகிய இராமனைச் சேர்ந்து வாழ்தலே ஏற்றதாகும் என விபீடணன் எடுத்துரைத்தான்.

★ அப்போது விபீடணனை நோக்கிக் கும்பகர்ணன்.
"ஐய! நிலையற்றதாய் இவ்வுலக வாழ்வை விரும்பி இராவணன் செய்த பெரு நன்றியை மறப்பேனோ? பன்னாள் போற்றி வளர்த்துப் போர்க்கோலம் புனைந்தனுப்பிய மன்னனைத் துறந்து மாற்றாருடன் சேர்வேனோ? மலரோன் வரத்தால் நீ மாயா வரம் பெற்றாய். உன்செயல் உனக்குத் தக்கதேயாம். புலையுறு மரணம் எய்தலே எனக்குப் புகழாகும். அரணமைந்த இலங்கையின் அளவிளந்த செல்வத்தை விரும்பி. என் தமையனைக் கொல்ல வந்த பகைவனை வாழ்த்தி அவன் அடிபணிந்து வாழ்வேனோ?"

என மானத்துடன் கூறுகின்ற மொழிகளில் மானவீரம் கமழ்கின்றது. இவ்வாறு ஆசிரியர் காட்டுவார்.

**4. "..போனதோ புகுந்ததோ பொன்றும் காலமோ" எனக் கும்பகர்ணன் பேசிய மொழிகளில் இடம்பெற்றுள்ள கருத்து யாது?**

கற்புடைய மங்கையின் கண்ணீரே இலங்கைக் காவலன் ஆக்கத்தை அறுக்கும் படை என்பதைக் கும்பகர்ணன் உணர்கிறான். அவன் நெடுந்துயில் நீத்து எழுந்தபோது பேசிய மொழிகளில் "**சானகி துயரினம் தவிர்ந்த தில்லையோ**" அவ்வாறு சீதையின் துயர் நீங்கவில்லையாயின் இந்த உலகத்தில் வானளாவ உயர்ந்து வளர்க்கப்பட்ட வானுயர்ந்த அரக்கர்களின் புகழ் எல்லாம், இராவணனின் அரும் புகழ் எல்லாம் அழியும் என்றும், இராவணனின் ஆவி பிரியும் என்றும் கும்பகர்ணன் அறிவிலே தோன்றுகின்றன.

எனவே "அறநெறி பிழைக்கும் காலத்தில் அவ் அறநெறி பிழைக்கக் காரணமாக இருந்தவர் அழிவுறுவர்" என்ற கருத்து அங்கு இலங்குவதைக் காணலாம்.

5. **கும்பகர்ணன் தன் தமையன் இராவணனை நோக்கிக் கூறிய அறிவுரை வார்த்தைகள் எவ்வாறு கட்டுரையில் காட்டப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துக.**

★ "ஐயனே அரசியல் சிறந்ததென்று அலமருகின்றாய்; அழகிய நகரம் அழிந்ததென்று வருந்துகின்றாய்; அயோத்தி மன்னன் மனைவியை நயந்து அம் மங்கையை அசோக வனத்தில் நீ சிறை வைத்த செயல் நீதியோ? முறையோ? இதனிலும் பெரும்பழி இவ்வுலகில் உண்டோ?" என்று இராவணனை நோக்கிக் கும்பகர்ணன் நீதியுரை கூறுவான்.

*"ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடை*
*சானகி துயரினம் தவிர்ந்த தில்லையோ*
*வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்*
*போனதோ புகுந்ததோ பொன்றும் காலமே"*

மாசற்ற கற்புவாய்ந்த மங்கையின் துயரால் அரக்கர் கோன் அரும்புகழ் அழியுமென்றும் அவன் ஆவி பிரியுமென்றும் கும்பகர்ணன் அறிவிலே தோன்றின. மாற்றரசன் தேவியைவிடுத்து ஆவியைக் கேட்குமாறு தமையனை அவன் வேண்டினான்.

★ "ஐயனே! இன்று நிகழும் பெரும் போரில் யான் வென்று வருவேன் என்று தோற்றவில்லை. விதியானது பிடர் பிடித்துத் தள்ளுகிறது. யான் இறந்த பின்னாகிலும் சீதையை விடுதல் உனக்கு நன்றாகும்... இது காறும் செய்த குற்றங்களைப் பொறுப்பாயாக.
என்பன போன்ற அறநெறி வார்த்தைகளால் இராவணனுக்கு நீதியுரை கூறுவான் என்பதைக் கட்டுரை ஆசிரியர் காட்டுகின்றார்.

**6. கும்பகர்ணன் வறிதாகி வாழ்ந்த நிலை எவ்வாறு வீபீடணன் கூறுவதாகக் காட்டப்பட்டுள்ளது என்பதைக் காட்டுக.**

★ தருமம் குன்றிக் காணப்படும் இவ்வுலகை வென்று நீதியை நிலை நாட்டும்படி வாழ்ந்தாயில்லை.

★ இவ் அளப்பரிய உலகினை ஆளும் ஆசையின்றி மண்ணின் மேல் இதுவரைக்கும் இறங்காது இருக்கின்றாய்.

★ இது காலவரைக்கும் இளமையும் பயனற்றுக் குன்றும் படியாக எதுவுமே செய்யாது நித்தமும் உறக்கமே கொண்டுவிட்டாய்.

★ இவ்வாறு உறங்கியதை விட; ஏதாவது உன்னால் செய்ய முடிந்த தொன்று இருந்துள்ளதா? இல்லை விபூடணன் இரங்கிக் கும்பகர்ணன் வாழ்நாளை வறிதே கழித்ததைக் கூறுவான்.

★ கலைமகள் கும்பகர்ணன் நாவில் நின்று அவன் ஊக்கமாகக் கேட்ட வரத்தைத் தூக்கமாக மாற்றினாள். இது வானோரிழைத்த வஞ்சனையால் கும்பகர்ணன் வலிமையும், இளமையும் வறிதாக உறங்கி வாழ்ந்தான்.

★ உலகெலாம் கலக்கி வெல்லுதற்குரிய வீரன் ஒருவன் உறக்கத்தில் அயர்ந்து கிடக்கும் நிலை இரக்கத்திற்கு உரியதன்றோ? என விபீடணன் கும்பகர்ணன் பற்றிக் கூறுதலைக் காணலாம்.

**7. "மானவீரன்" என்னும் கட்டுரையின் ஊடாக உணர்த்தப்படும் உயர்ந்த விழுமியக் கருத்துக்கள் யாவை?**

★ பிறர் மனைவியை விரும்புதல், கவர்தல் அடாத செயல் என்பதைக் காட்டுகிறது. அது நீதியற்ற, முறையற்ற செயல், இதைவிடப் பெரும்பழி இவ் உலகில் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

★ அறமே உலகில் வெல்லும். மறம் எஞ்ஞான்றும் மாண்டு ஒழியும் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

★ கற்புடைய மங்கையின் கண்ணீர் ஆக்கத்தை அறுக்கும் படை என்பது தெளிவுறுத்தப்படுகிறது.

- ★ அறநெறி பிழைத்தவர் அழிவர்.
- ★ கற்புடை மங்கையின் துயரால் அரும்புகழ் அழியும்.
- ★ பிறர் செய்யும் கொடுமைகளை விடும்படி தடுத்துரைத்தல் அறமாகும்.
- ★ மாற்றான் தேவியை விடுத்து ஆவியைக் காக்குமாறு தமையனைக் கும்பகர்ணன் வேண்டிய நிகழ்வு.
- ★ தீநெறியில் தலைப்பட்டவனைத் தடுத்துத் திருத்த முயல்வது அவனைச் சார்ந்த அன்பர் கடன் ஆகும்.
- ★ செஞ்சோற்றுக் கடன் கழித்தல், செய்ந்நன்றி மறவாமை போன்ற உயர் விழுமியங்கள்.
- ★ பிறர் செய்த நன்றியைப் பொன்போன்று போற்றும் பண்பு.
- ★ தினைத்துணை நன்றியையும் பனைத் துணையாகக் கொள்ளும் பண்பு இருத்தல்.
- ★ குற்றங்களை மன்னிக்கும் பண்பு, பணிவு, பாசம், அடிபணிதல், விடைபெறல் என்ற ஒழுக்கங்கள் போற்றப்படல்.
- ★ பிதிர்கடன் செய்தல். (நீத்தார் கடன்)
- ★ மானம் காக்கும் பண்பு இவை போன்ற உயர்ந்த விழுமியக் கருத்துக்கள் உணர்த்தப்படுவதை இக் கட்டுரையில் காணமுடிகின்றது.

**8. கும்பகர்ணன் தன் வாழ்நாளை வறிதே தூக்கத்தில் கழிக்க நேர்ந்த நிகழ்வு எவ்வாறு காட்டப்படுகிறது?**

கும்பகர்ணன் தேவர் இழைத்த மாயத்தால் தன் வாழ்நாளை வறிதே கழிப்பானாயினான். நீரிலும் நெருப்பிலும் நின்று நெடுந்தவம் செய்த கும்பகர்ணன் நிலைகண்டு நெஞ்சம் தளர்ந்த தேவர் அயனிடம் சென்று தம் அச்சத்தை அறிவித்தார்கள். அமரர் அச்சந்தீர்க்கப் போந்த அயன் ஏவலால் கலைமகள், கும்பகர்ணன் நாவில் நின்று அவன் ஊக்கமாகக் கேட்ட வரத்தைத் தூக்கமாக மாற்றினாள். இவ்வாறு வானோர் இழைத்த வஞ்சனையால், வலிமையும், இளமையும் வறிதாக உறங்கி வாழ்ந்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

# 6. உமர்கையாம் பாடல்கள்

**1. பாரசீகக் கவிஞர் உமர்கையாம் அவர்களின் சிறப்புக்களையும், அவரது பாடல் சிறப்புக்களையும் குறிப்பிடுக.**

★ உமர்கையாம் அவர்கள் பாரசீகப் பெருங்கவிஞன் ஆவார்.

★ இவரால் எழுதப்பட்ட கவிதை நூலே 'றுபாயாத்' ஆகும்.

★ 'றுபாயாத்' என்ற நூலின் சிறப்புகளைக் கண்ட அறிஞர்கள் பலர் இதனைப் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்தனர்.

★ 'றுபாயாத்' என்ற நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பே கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

★ 'றுபாயாத்' என்ற நூல் பல்வேறு அறிஞர்களாலும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ உமர்கையாம் பாடல்கள் சாதாரண வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதுபோல் வெளிப்படையில் படிக்கும்போது காணப்படுகிறது. ஆனால் உள்ளார்ந்தமாக உன்னதமான தெய்வீகம் கலந்த உண்மைப் பொருள் காட்டப்பட்டுள்ளது.

★ மண்ணில் இருந்து தோன்றிய மனிதன் மண்ணுக்கே இரையாகின்ற வாழ்க்கைக் கோலத்தைப் படம் பிடித்துக் காட்டும் சிறப்புமிக்கது இவர் பாடல்கள்.

★ வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள் யாவும் மனிதனால் விரும்பிப் பெற்றுக் கொள்ளப்பட்டதல்ல. அது இறை படைப்பின் மகிமை என்ற உயர் தத்துவத்தைக் காட்டுவன என்பது இவர் பாடல்கள் மூலம் காட்டப்படுகின்றன.

★ நாங்கள் செய்கின்ற செயல்களே, எம்மை வீழ்த்தும் சக்தியாக மாறி மீண்டும் உருவெடுத்து எம்மிடம் வருகிறது.

★ எம்மால் வேறொருவருக்கு வெட்டப்படும் குழியுள் நாமே விழுகின்றோம்.

இவ்வாறான உயர் விழுமியங்கள் கொண்டனவற்றை இவர் பாடல்கள் விளக்கும். இவ்வாறு சிறப்புக்கள் காணப்படுகின்றன.

**2. "திகைத்து மறுகி நின்றேனே" எனக் கூறப்பட்டமைக்கான காரணங்கள் எவை?**

★ உமர்கையாம் அவர்கள் இஸ்லாமியப் பெருங்கவிஞன். அவர் தனது பாடலில் நாம் செய்கின்ற தவறுகளே மீண்டும் எம்மை வந்தடைந்து வருத்துகின்றன என்ற உயர்கருத்தைக் காட்டுகிறார்.

இதனைப் பிறர் ஒருவனுக்குக் கேடு செய்வதற்காக வழியிலே குண்டு வெட்டி, அதனை மாயமாக வலையினால் மறைத்து வைத்து அவன் அக்குழியினுள் விழுந்துவிடுவான் என்று மதுவுண்டு சந்தோஷமாக இருக்கின்ற அந்நாள் ஆனது, நான் எனக்கு வெட்டிய குழியாக அமைந்து, அழியாத பாவத்தை எனக்கு ஏற்படுத்தி விடுகிறது எனக் காரணம் காட்டப்படுகிறது.

★ நாங்கள் செய்கின்ற செயல்கள்தான் எம்மை அதனுள் விழுத்தும் கருவியாக அமைந்து விடுகின்றன. பிறருக்குத் துன்பம் செய்வதற்காகச் செய்யப்பட்ட செயல்கள் மீண்டும் எமக்கே திரும்ப அவை கெடுதல் செய்வனவாக அமைந்து விடுகிறது. பிறர் விழ வெட்டிய குழியினுள்ளே நாமே விழுகின்ற நிலையை ஏற்படுத்துகிறது. இதனை அறியாது இந்த உலகத்திலே மயங்கி நிற்கின்றேன் எனக் கவிஞன் கூறுகிறார்.

★ எனவே நாம் பிறருக்குத் தீமையை ஏற்படுத்துதற்காகச் செய்யும் செயல்கள் மீண்டும் எம்மைத் துன்பப்படுத்துவனவாகவும், அக் குழியினுள் நாம் வீழ்ந்து விடுவதையும் நீ அறியாது, இந்த உலகச் செயற்பாட்டில்மயங்கி நிற்கின்றாய் என ஆசிரியர் காரணம் கூறுகிறார்.

எனவேதான் 'திகைத்து மறுகி நின்றேனே" என்கிறார்.

3. **"இற்ற மண்ணால் மனிதனையும்**
**எழுப்பி ஈடன் ஆளவிட்டுச்**
**சுற்றும் அரவும் அவ்விடத்தே!**
**சூதாய்ப் பதுங்க வைத்தவனே!....."**

**இப் பாடல் குறிப்பிடும் சம்பவம் யாது?**

★ இப் பாடலிலே உமர்கையாம் அவர்கள் மனித தோற்றத்தின் விந்தையை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுவார். உமர்கையாம் அவர்கள் இஸ்லாமியக் கவிஞர். எனவே அவரது பாடல்களில் இஸ்லாமிய ஆன்மீகக் கருத்துக்கள் செறிந்திருப்பது தவிர்க்க முடியாததே.

★ இஸ்லாமிய, கிறீஸ்தவ மறை நூல்களின் கருத்துப்படி மண்ணில் இருந்தே மனிதன் தோன்றினான் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. இக் கருத்துக்களின் அடிப்படையில் முதன்முதலில் ஆதம்நபி அவர்கள் மண்ணிலிருந்தே படைக்கப்படுகிறார். இதற்குத் துணை கொடுக்கவே ஆதம்நபியின் மார்பெலும்பு ஒன்றிலிருந்தே ஹவ்வா - HAWWA ('ஏவாள்') படைக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது. இவர்கள் சுவர்க்கத்தில் ஈடன் எனும் இடத்தில் ஆளவிடப்பட்டனர் எனப்படுகிறது. இதனையே இங்கு ஆசிரியர்

**"இற்ற மண்ணால் மனிதனையும்**
**எழுப்பி ஈடன் ஆளவிட்டு....."**

எனக் கூறப்பட்டுள்ளது.

★ இங்கே முதல் மனிதனாகப் படைக்கப்பட்ட ஆதம்நபியும், ஹவ்வாவும் - Hawwa ('ஏவாள்') ஒருவருக்கொருவர் இன்பம் பயக்குமுகமாகச் செய்வதற்காகச் சாத்தான் பாம்பாக வருகிறான். இதனால் விலக்கப்பட்ட கனியை இருவரும் உண்டனர். இன்பத்தில் மூழ்கினர். இதனால் சுவர்க்கப் பிரதேசம் அசிங்கப்பட்டது. இவ்வாறு இவர்கள் விலக்கப்பட்ட கனியை உண்டதால் சுவர்க்கத்தில் இருக்க வேண்டிய பக்குவத்தில் இருந்து விலகி மனிதனுக்கு உள்ள பசி, கோபம், தாகம், ஆசை போன்ற உணர்ச்சிகள் ஏற்படுகின்றது. இவை

மலக்குகளுக்கு (தேவர்கள்) இருக்காது. எனவே இவர்கள் சுவர்க்கத்தில் இருக்கத் தகுதியற்றவர்கள். எனவே சுவர்க்கத்தில் இருந்து பூமிக்குத் தூக்கி வீசப்படுகிறார்கள்.

★ இவ்வாறு மண்ணால் படைக்கப்பட்ட மனிதன் சுவர்க்கத்தில் ஆளவிட்டுப் பின்னர் சாத்தானின் செயலால், விலக்கழிக்கப்பட்ட கனியுண்டு, சுவர்க்கத்தில் இருக்கத் தகுதியை இழந்து பூமிக்குத் தூக்கி ஏறியப்பட்ட அதாவது முதல் மனிதனின் படைப்பின் விந்தைச் சம்பவத்தை ஆசிரியர் இப் பாடலடியால் எடுத்துக் காட்டுகின்றார்.

(வீசப்பட்டபோது ஆதம்நபி அவர்கள் இலங்கையில் ஆதம்மலையில் வீழ்ந்தார் எனவும், ஏவாள் ஆபிரிக்காவில் வீழ்த்தப்பட்டார் எனவும், மீண்டும் இவர்கள் சந்தித்த இடம் ஆபிரிக்காவில் அடம்ஏவாள் மலை என வழங்கப்படுவதாகவும் கதைகள் கூறுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

4. **"மண்ணில் உடைந்து மண்ணாக**
**மாறி மண்ணில் மறைந்திடுமே**
**மண்ணில் இருந்து மண்ணெடுத்து**
**வனைந்து வைத்தான் இவ்வுடலை..."**

**என்னும் பாடல் அடிகள் உணர்த்தும் கருத்து யாது?**

★ இப்பாடல் அடிகள் ஆழ்ந்த ஆன்மீகத் தத்துவக் கருத்துக்களை விளக்கி நிற்கின்றது.

★ இஸ்லாமிய மறை நூல்களின் கருத்துப்படி உக்கல் மண்ணில் இருந்தே மனிதன் முதலில் தோற்றுவிக்கப்படுகிறான். இவ்வாறு மண்ணில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட மனிதன் சுவர்க்கத்தில் இருந்து மண்ணுக்கே (பூமிக்கு) தூக்கி வீசப்படுகிறான். அங்கு அவன் சஞ்சரிக்கும் காலத்தில் அவன் அனுபவிக்கும் அனைத்தும் மண்ணை அடிப்படையாகக் கொண்டே விளைவிக்கப்பட்டவை.

தோற்றுவிக்கப்பட்டவை. எனவே மண்ணில் இருந்து கிடைத்த அம் மண்ணையே (பொருட்களையே) அவன் அனுபவிக்கிறான். உண்கின்றான். இவ்வாறு மண்ணாலே படைக்கப்பட்டு, மண்ணையே உண்கிறான்; பின் இறப்பது மண். அவனும் மண்ணுக்குள்ளேயே மறைந்து அழிந்து விடுகிறான். மண்ணோடு மண்ணாகி விடுகின்றான். இதனையே ஆசிரியர்

**"மண்ணில் உடைந்து மண்ணாக**
**மாறில் மண்ணில் மறைந்திடுமே"**

எனக் கூறுவதன் மூலம் மனிதன் மண்ணுள்ளேயே மறைந்து அழிவதையும்;

**"மண்ணி லிருந்து மண்ணெடுத்து**
**வனைந்து வைத்தான் இவ்வுடலை..."**

என்பதன் மூலம் சுவர்க்கத்திலே உக்கல் மண்ணில் இருந்து மனிதன் தோற்றுவிக்கப்பட்ட விந்தையையும் காட்டுகிறார். இங்கே படைக்கப்பட்டது மண், அம்மண் மண்ணையே உண்டது. பின் அம்மண், மண்ணுக்குள் மறைந்து மண்ணாகி விடுகிறது என்ற உயர் இஸ்லாமிய ஆன்மீகத் தத்துவக் கருத்தை இவ்வடிகள் காட்டி நிற்பதைக் காணலாம்.

**5.** **அந்த நாள் அக் குயவன் கை**
**ஆட்டத்தால் நேர்ந்த பிழைக்கு**
**இந்த நாளில் ஏழை எனை**
**ஏனோ குறைகள் கூறுவரே!**

**மேற்கூறப்பட்ட பாடல் அடிகள் மூலம் ஆசிரியர் காட்டவிழையும் விழுமியக் கருத்துக்கள் எவை?**

மனிதனைத் தோற்றுவித்த இறைவனைக் குயவனாக இங்கே காட்டுகிறார் ஆசிரியர். மனிதன் தோற்றுவிக்கப்பட்ட அந் நாளிலே குயவன் சுவர்க்கத்தில் மண்ணெடுத்து மனிதனைப் படைத்தான்.

அவனது படைப்பு ஆட்டத்தில் பல்வேறுபட்ட மனிதத் தோற்றம் உண்டாகின. இங்கு மனிதன் விரும்பி நிறம், அழகு, தோற்றம், ஏற்றத்தாழ்வு, பெருமை, சிறுமை போன்றவற்றைப் பெறப்பட்டதல்ல. இவை குயவனின் படைப்பின்போது கையாட்டத்தின் போது, ஏற்பட்ட தவறினால் நிகழ்ந்தவையே. இக் குயவன் தவறுக்காக இந் நாளில் எம்மை ஏற்றத்தாழ்வாகக் கூறிக் கொள்ளல் எவ்வாறு பொருந்தும்.

★ இது மனிதன் விரும்பிப் பெற்றதல்ல. குயவனின் வனைதல் பிழையினால் ஏற்பட்டதே. இக்குறைபாட்டை பழிப்பது என்ன நியாயம். இறைவன் ஏதோ ஒரு காரணத்திற்காக இவ்வாறெல்லாம் செய்துள்ளான். மனிதக் கலம் இறைவனால் கொடுக்கப்பட்டது. எனவே இறைவனால் படைக்கப்பட்டவனே மனிதன் என்ற கொள்கை பேணப்பட வேண்டும் எனவும் ஏற்றத்தாழ்வுகள், வேறுபாடுகள், ஊனம், பலம், பலவீனங்கள் இறைவனால் வழங்கப்பட்டவையே ஒளிய மனிதன் விரும்பிப் பெற்றவை அல்ல என்பதை விளக்கும் உயரிய விழுமியக் கருத்து இங்கே காட்டப்பட்டுள்ளது.

★ மேலும் குயவனால் செய்யப்பட்ட பானையை குறை கூறுவது தவறு. அது குயவனிடமே வினவப்படவேண்டும் என்ற க்ருத்து ஆழமாக இங்கு பதிந்துள்ளதைக் காணலாம். எனவே இறை படைப்பு அனைத்தும் போற்றப்பட வேண்டும் அனைத்து மனிதர்களும் சமம் என்ற தத்துவம் மேலோங்கி இப்பாடலில் நிற்கின்றது எனலாம்.

**6. உமர்கையாம் பாடல்கள் உயர்ந்த ஆத்மீகத் தத்துவத்தையும், விழுமியக் கருத்துக்களையும் விளக்கி நிற்கின்றன. இதனைத் தெளிவுபடுத்துக.**

★ முதல் மனிதன் மண்ணில் இருந்தே தோற்றுவிக்கப்படுகிறான் என்ற கருத்தும், விலக்கழிக்கப்பட்ட கனியை உண்டதால் அவன் பூமிக்குத் தூக்கி வீசப்பட்டான் என்ற சம்பவத்தையும் ஆன்மீக தத்துவ அடிப்படையில் காட்டி நிற்கிறது இப் பாடல்கள் ஆகும்.

★ பூமிக்குத் தூக்கி வீசப்பட்ட மனிதன், மீண்டும் அம் மனிதன் பாவி என இறைவனால் மன்னிப்பு வழங்கும் உயர்தத்துவம் இங்கு காட்டப்படுகிறது.

★ மண்ணினால் தோன்றிய மனிதன், மண்ணையே உண்கிறான். மண்ணிலே ஆளுகிறான். மண்ணுக்கே இரையாகின்றான். மண்ணோடு மண்ணாகி விடுகிறான் என்ற தத்துவக் கருத்துகள் காட்டப்பட்டுள்ளன.

★ இஸ்லாமிய உயர்தத்துவங்கள் பொதிந்து நிற்கும் இப்பாடல்கள் ஊடாக ஆசிரியர் விழுமியக் கருத்துக்களையும் காட்டி நிற்கத் தவறவில்லை.

★ மண்ணிலே பிறந்த மனிதன் ஏற்றத்தாழ்வுகள், வேற்றுமைகள், ஊனம், நிறம் என்பவை பற்றிப் பேசுகின்றனர். இறைவனே மனிதனைப் படைத்தான். எத் தோற்றத்தையும், பலவீனத்தையும் மனிதன் விரும்பித் தேடிப் பெறவில்லை.

**"மண்ணிலிருந்து மண்ணெடுத்து**
**வனைந்து வைத்தான் இவ்வுடலை..."**

எனக்கூறும் உமர்கையாம் அவர்கள்.

இவ்வாறு வனைந்த மனிதனை;

**"வந்த வந்த மனித ரெல்லாம்**
**வளைவும் நெளிவும் கண்டெனைச்**
**சந்த மில்லாப் பானையெனத்**
**தள்ளி வைத்துச் சென்றனரால்....."**

இவ்வாறு மனிதனிடம் ஏற்றத்தாழ்வு கொண்டு பிரித்து, வாழ்தல் எவ்வாறு நீதி உடையது ஆகும். இதனால் நான் ஒழுங்கில்லாப் பானையென மனிதரால் தள்ளி வைக்கப்படுகிறேன்.

**"அந்த நாள் குயவன் கை**
**ஆட்டத்தாலே நேர்ந்த பிழைக்கு**
**இந்த நாளில் ஏழை எனை**
**ஏனோ குறைகள் கூறுவரே?"**

என அந்நாளில் இறைவனின் படைப்பில் ஏற்பட்ட பிழைக்கு இந் நாளில் என்னை விலக்குதல் எவ்வாறு பொருந்தும்? இது நான் தேடிப் பெற்றுக் கொண்ட உடல் அமைப்பா? என்ற கருத்துக்கள் இறைவனின் படைப்புக்கள் அனைத்தும் சமம், அவர்கள் போற்றப்பட வேண்டும் என்ற உயர் கருத்தைத் தெளிவுறுத்தி நிற்கின்றன.

★ ரம்ஸான் மாதத்தின் சிறப்பும், அம்மாதத்தில் பெறும் நன்மைகளின் பெருக்கமும், இறைபொருள் பாடுதல் சிறப்பும் மிகத் தெளிவாகப் பாடல்களில் காட்டப்பட்டுள்ளது.

★

**"எமக்கு முன்னே சென்றவர்கள்**
**கருது கோடி கோடியின் மேல்**
**கணக்கில் லாதான் ஆயிடினும்**
**அரிய வழியை நாமும் இனி**
**அளந்து காண வேண்டுமடா!"**

எமக்கு முன்னே பல்கோடிகள் பிறந்து விட்டார்கள். அவர்கள் அழிந்து விட்டார்கள். நாமும் சுவர்க்கத்திற்கான நல்வழிகளைக் காணவேண்டும், இறைவழிகள் எப்பொழுதும் பேணப்படவேண்டும் என்ற உயர் விழுமிய, ஆன்மீகத் தத்துவக் கருத்துக்கள் உமர்கையாம் பாடல்கள் மூலம் வெளிக்காட்டப்பட்டிருப்பதை எம்மால் அறிய முடிகிறது.

# 7. வாயும் நாவும் எதற்கு?

**1. அ. வாய் என்பது நாவைக் குறிக்கும். இந்த வாயைப் பற்றி வந்துள்ள முதுரைகள் சிலதருக.**

**ஆ. வாய் பாதுகாக்கப்படவேண்டும் என்பது பற்றித் திருவள்ளுவரின் திருக்குறள், இலத்தீன் பழமொழி எவ்வாறு கூறுகிறது.**

அ. வாயுள்ள பிள்ளை பிழைக்கும். வாய் நல்லதானால் ஊரும் நல்லது; யாராலே வந்தது வாயாலே வந்தது; மதுரைக்கு வழி வாயிலே என்பனவற்றைக் கூறலாம்.

ஆ. வாயைப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமை. இதனைத் திருவள்ளுவர்

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு"**

**"உன்நாவிற்கு விலங்கிடு. இன்றேல் அஃது உனக்கு விலங்கிட்டுவிடும்"** என இலத்தீன் பழமொழி கூறுகின்றது.

**2. நாக்கு எத்தகைய கோட்டைக்குள் இருக்கிறது எனக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது?**

உதடுகளாகிய திண்ணிய கதவுகளுக்கு உள்ளே நாக்குப் பூட்டப் பட்டிருக்கிறது. உள்ளே வெட்டும் எந்திரம், குத்தும் எந்திரம், அரியும் எந்திரம், அரைக்கும் எந்திரம், கடிக்கும் எந்திரம், புடைக்கும் எந்திரம், நசுக்கும் எந்திரம், நொறுக்கும் எந்திரம், ஒடிக்கும் எந்திரம், பிடிக்கும் எந்திரம், போன்ற பல பொறிகள் நிறைந்த தந்தக் கோட்டை இருக்கிறது. அதனுள்ளே நாக்கை உள்ளழுத்தி வைத்திருக்கிறான் இறைவன். இவ்வாறு கட்டுரையில் நாவிருக்கும் கோட்டை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

3. அ. "யாகாவா ராயினும் நாகாக்க" என்பதன் கருத்து யாது?

ஆ. நாவைக் கட்டுப்படுத்துவதனால் எதனைப் பெறலாம்?

இ. நா எக் குற்றங்களைச் செய்யும்? நாவைக் கொண்டு ஒருவரைப் பற்றி எவற்றை அறிய முடியும் எனக் கட்டுரையிற் கூறப்பட்டுள்ளது.

அ. ★ நீ எதனைக் கட்டுப்படுத்தாது விட்டாலும் நாவை நீ கட்டுப்படுத்திக் கொள்க. அதாவது எதனைக் கட்டுப்படுத்தாது நடந்து கொள்ளினும், நாவை உன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் காப்பாற்று என்பது பொருளாகும்.

ஆ. ★ நாவை ஒருவன் நன்கு கட்டுப்படுத்தினால் அவனுக்கு வரக்கூடிய எத்தனையோ துன்பங்கள் தவிர்க்கப்பட்டுவிடும்.

இ. ★ பயனில் கூறுதல், கடுஞ்சொற் கூறுதல், இன்னா கூறுதல், புறங்கூறுதல், தீமை கூறுதல், பொய் கோள் கூறல், குறளை ஏசல், எள்ளல், இகழல், போன்ற பல குற்றங்கள் நாவால் நிகழக் கூடியன.

★ மேலும் நா அறுசுவை உணர்ச்சி மீதூண் விரும்பி, நன்மை பயவா உண்டிகள், பானங்களை உட்கொண்டு துன்பம், நோய்க்கு உள்ளாகுதல் நாவால் நிகழக் கூடியன.

ஒருவனுடைய அறிவும் மேன்மையும், குணமும், குலமும், சால்பும், ஒழுக்கமும் அவன் வாயைத் திறந்தவுடனே தெரிந்து விடும் என்பதாகும். எனவே நாவைக் கொண்டு ஒருவரைப் பற்றி அறிய முடியும் எனலாம்.

4. **நாவைப்பற்றி வந்துள்ள பொன்மொழிகள், குறள்கள் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளன. அவற்றினைத் தருக?**

**"யாகாவா ராயினும் நாகாக்க"** (குறள்)

**"உன் நாவிற்கு விலங்கிடு இன்றேல் அஃது உனக்கு விலங்கிட்டு விடும்"** (பழமொழி - லத்தீன்)

**"ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல்"** (குறள்)

**"நிலத்திற் கிடந்தது கால் காட்டும் காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"** (குறள்)

**"பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு"**

**"தீயினாற் சுட்டபுண் கூட ஆறிவிடும் நாவினாற் சுட்டவடு ஆறவே செய்யாது."** (குறள் - பொருள்)

என்பதைக் கூறலாம்.

5. **நாவின் பயன்பாடு குறித்து நாவுக்கரசரும், மணிவாசகரும் எக் கொள்கையுடையவராக வாழ்ந்தனர் என்பதைக் கட்டுரை ஆசிரியர் எவ்வாறு தெளிவுபடுத்துகிறார் என்பதை விளக்குக.**

★ ஒரு பேரரசன் தனது நாட்டைக்காப்பது போல் அப்பர் தமது நாவைக் காத்து வந்தார் இதனால் நாவரசர் ஆனார்.

★ இவர் பிறரைப் பரிகசிப்பதற்கும் மீதூண் புசிப்பதற்கும் சுவை கண்டு ருசிப்பதற்கும் அன்றி; இறைவனைப் பூசிப்பதற்கே வாயைப் பயன்படுத்தினார்.

★ **'இறைவனை வாழ்த்துவதற்கே வாய்த்தது வாய்'** என்று வந்தித்தார் அப்பர் அவர்கள்.

★ இறைவன் வாயைக் கொடுத்தது அவனை வாழ்த்து வதற்குத்தான் என்று அவர் திட்டவட்டமாக கூறினார்.

***"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்***
***தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்***
***சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே***
***வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"***

இவ்வாறு அப்பர் சுவாமிகள் நாவின் பயன்பாடு குறித்து விளக்குவார்.

★ பிறரை வசைமாரி பொழிவதற்கும், வைவதற்கும் வஞ்சகமாய்ப் பேசுவதற்கும் வழங்கப்படும் வழக்குடைய வாயை நோக்கி இறைவனை வாழ்த்திக் கொண்டு இரு என்று சொன்னால் அஃது எளிதில் வழிக்கு வருமா? வராது. முரண்டு பிடிக்கும் முரட்டுக் குழந்தையைத் தட்டிக் கொடுத்து இங்கிதமாகப் பேசி இசைய வைப்பதுபோல் நாவுக்கரசர் வாயைக் கெஞ்சிக் குறையிரந்து வேண்டுகின்றார்.

***"வாயே வாழ்த்து கண்டாய்***
***மதயானை யுரி போர்த்துப்***
***பேய்வாழ் காட்டகத் தாடும்***
***பிரான்தன்னை – வாயே வாழ்த்து கண்டாய்"***

இங்கே வாய் இறைவனை வாழ்த்த வேண்டுமென நாவுக்கரசர் காட்டுவதைக் காணலாம்.

மாணிக்கவாசகப் பெருமான் நாவின் பயன்பாடு பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்.

★ இறைவன் தலையை, வணங்குவதற்குத் தந்தான், வாயை வாழ்த்துவதற்கு வழங்கினான் என்ற கொள்கையைத் திறம்படக் கூறியுள்ளார்.

**"வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து...."**

★ இவ்வகையில் நோக்கும்போது நாவுக்கரசரும், மணிவாசகரும் வாயைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும்; அதுவும் இறைவனை வாழ்த்தப் பயன்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் ஒன்றுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதைக் கட்டுரை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

★ பிறரை வசைமாரி பொழிவதற்கும், வைவதற்கும் வஞ்சகமாய்ப் பேசுவதற்கும் வழக்குடைய வாயை இகழுவார்.

★ இவ்வகையில் நோக்கும் போது நாவுக்கரசரும் மணிவாசகரும் வாயைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தவேண்டும். அதுவும் இறைவனை வாழ்த்த வாய் பயன்பட வேண்டும் என்ற விடயத்தில் ஒன்றுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர் என்பதைக் கட்டுரையாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

6. **"வாயும் நாவும் எதற்கு"** என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு **"யாகாவாராயினும் நாகாக்க..."** என வள்ளுவர் ஏன் எச்சரித்துள்ளார் என்பதுபற்றிக் கருத்துரை வழங்குக.

★ **"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு"**
என வள்ளுவர் கூறுவார்.

இங்கே உன்னால் எதனைக் காக்கா விட்டாலும் உன் நாவில் எச்சரிக்கையாக இரு. நீ வாயை (நாவை) பயன்படுத்தும் இடமெல்லாம் நன்கு அறிந்து பயன்படுத்துக.

அன்றேல் அந் நாவைத் தவறாகப் பயன்படுத்தின், அச் சொல்லால் இழுக்குப்பட்டு நாம் கவலையில் ஆழ்ந்து விடுவோம்.

★ இதனாலேயே வாய் நல்லதானால் ஊரும் நல்லது! என்பர் மனித உடலில் உள்ள உறுப்புக்களில் நாவைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பது போல் இறைவன் எந்த உறுப்பையும் பத்திரப்படுத்தவில்லை. இந் நாவைப் பாதுகாக்க வேண்டியது எம் கடமை. எனவே நாகாக்க... என்றார்.

★ **'உன் நாவிற்கு விலங்கிடு. இன்றேல் அஃது உனக்கு விலங்கிட்டு விடும்'** என்ற லத்தீன் பழமொழி கூட நாவை அளவுடன் பயன்படுத்துக. அன்றேல் அது உன்னைத் துன்பத்துள் ஆழ்த்திவிடும் எனக் கூறுகிறது. எனவே பேசும் வாயைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எமக்கு ஏற்பட இருக்கும் துன்பத்தைத் தவிர்க்கலாம்.

★ பயனில கூறுதல், கடுஞ்சொற் கூறுதல், இன்னா கூறுதல் போன்ற குற்றங்கள் நாவால் நிகழக்கூடியன. எனவே நாவைக் காப்பதன்மூலம் இக்குற்றங்களைத் தடுத்து இன்பம் பெறலாம்.

★ நாவின் அறுசுவை உணர்ச்சியால் மீதூண் விரும்பி, நன்மை பயவா உண்டி, பானங்களை உட்கொண்டு நோய்கள். துன்பங்களுக்கு ஆளாவதுண்டு.

எனவே இத் துன்பங்களுள் உட்படாமல் இருக்கவே நாகாக்க.. என்றார் வள்ளுவர் பெருமான்.

★ **"....காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"**
**"...நாவினாற் சுட்டவடு ஆறவே செய்யாது"**
என்பவை போன்ற கூற்றுக்கள் எம்மை நாகாக்க என்பதை வலியுறுத்துகின்றன.

★ இறைவனைப் பூசிப்பதற்கே வாயைப் பயன்படுத்திய அப்பர் பெருமான் **'இறைவனை வாழ்த்துவதற்கே வாய்த்தது வாய் என்று வந்தித்தார்'** இதன் மூலம் பார்க்கும்போது நாவுக்கரசர் நாவைக் காத்தார் என்பது தெரிகிறது.

★ **"வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்..."** என்றார் அப்பர் எனவே நா காக்க என வள்ளுவர் பொருந்தக் கூறுவார்.

★ மாணிக்கவாசகப் பெருமான் இறைவன் தலையை வணங்குவதற்கும், வாயை வாழ்த்துதற்கும் தந்தார் என்பார். **"வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து"** என கூறுமுகத்தால் நாவின் பயன்பாடு பற்றி அறியலாம்.

எனவே நாம் நாவைக் காக்க வேண்டும். நாவைக் காப்பதன் மூலம் நிகழவிருக்கும் துன்பத்தில் இருந்து எம்மைப் பாதுகாப்போம். எனவே தான் வள்ளுவர் **'நாகாக்க'** என்றார்.

**6. பின்வருவனவற்றைப் பற்றி விளக்குக**

**அ.** ***'யாகாவா ராயினும் நாகாக்க'***

**ஆ.** ***'உன் நாவிற்கு விலங்கிடு – இன்றேல்***
***அஃது உனக்கு விலங்கிட்டு விடும்'***

**இ.** ***'ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே***
***தீய வழுக்கியும் வாயாற் சொல்லல்'***

**ஈ.** ***'நிலத்திற் கிடந்தது கால்காட்டும்***
***காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்'***

**உ.** ***'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு'***

ஊ. *'தீயினாற் சுட்ட புண்கூட ஆறும்.*
*ஆறாதே நாவினாற் சுட்ட வடு'*

எ. *'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை'*

அ. உன்னால் எதனைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் உனது நாவைக் கட்டுப்படுத்திக் கொள் என்பதாகும்.

ஆ. உன் நாவினைப் பாதுகாத்துக் கொள். கட்டுப்படுத்திக் கொள். அவ்வாறு பாதுகாக்காவிடில் அந்த நாவே உன்னைத் துன்பத்தில் ஆழ்த்திவிடும்.

இ. தீய சொற்களைத் தவறியும் தம்முடைய வாயால் சொல்லும் குற்றம், ஒழுக்கம் உடையவர்களுக்குப் பொருந்தாதது ஆகும்.

ஈ. இன்ன நிலத்தில் இருந்து முளைத்தது என்பதை முளைகாட்டும். அதுபோல் ஒருவரது வாய்ச்சொல் அவர் எக்குடியில் பிறந்தவர் என்ற குடிப்பிறப்பைக் காட்டி நிற்கும்.

உ. பிறரைப் பற்றி இன்னா சொல்லாமல் இருத்தல் ஆகிய நன்மையானது மாட்சிமை பொருந்தியது ஆகும்.

ஊ. நெருப்பினால் சுடப்பட்ட புண் கூட சிறிது காலத்தில் மாறிவிடும். ஆனால் ஆறாமல் மனத்தில் இருந்து துன்பம் தந்துகொண்டிருப்பது வாயினால் சொல்லப்பட்ட குற்றம் ஆகும். நாவினால் சொல்லப்பட்ட குற்றம் ஆறாது.

எ. கேட்காத செவி, பார்க்காத கண் முதலியனபோல் எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவர்களின் தலைகள் பயனற்றவைகளாகும் என்பதாகும்.

# 8. மக்கத்துச் சால்வை

1. **அ. "மக்கத்துச் சால்வை" என்ற சிறுகதையில் பையென்னா ஹோட்டெல் எவ்வாறு அறிமுகம் செய்யப்படுகிறது?**

   **ஆ. ஹோட்டலுக்குக் குளிரூட்டி நின்ற பூவரச மரத்தில் ஒட்டியிருந்த கடதாசியில் என்ன எழுதப்பட்டிருந்தது?**

   **இ. நூகுத்தம்பியின் தோற்றம் எவ்வாறு கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது.**

அ. கண்ணாடி 'ஷோட்கேஸ்' இரண்டும் 'பளிச்சென்று' உள்ளே தின்பண்டங்கள். கண்சிமிட்டும் பசு நெய்யில் பையென்னாவின் கைபட்டுப் பக்குவப்பட்ட 'மஸ்கெற்' வாசம் ஒரு துண்டின் விலை இருபது சதம் 'ரீ' ஒன்று பத்துச் சதம் எனக்கூறி ஆசிரியர் ஹோட்டலை அறிமுகம் செய்வார்.

ஆ. 'ஹஜ் பெருநாளை முன்னிட்டு நாளை அசர் தொழுகையின் பிறகு மாபெரும் கம்பு விளையாட்டுப் போட்டி பிரபல சீனடி வாத்தியார் நூகுத்தம்பியுடன் மோதுபவர்கள் முன்வரலாம். பரிசாக ஒரு மக்கத்துச் சால்வையும் பறங்கி வாழைப்பழக் குலையும் வழங்கப்படும்.' எனக் கடதாசியில் எழுதப்பட்டிருந்தது.

இ. கருங்காலி போன்ற உடல்வாகு. வீச்சுத் தொழில் உரம் ஏறிப்போன விசைகொண்ட கைகளும், கால்களும் கட்டுக்கடங்காத காளையின் தோற்றம் விம்மிப் புடைத்த நெஞ்சு, வெட்டு வாளாகக் கைகள் இரண்டு என நூகுத்தம்பியின் தோற்றம் காட்டப்படுகிறது.

**2. அ. கம்பு விளையாட்டுப் போட்டியில் போட்டியிட்ட இருவரும் யாவர்?**

**ஆ. போட்டியில் பங்குபற்றுபவர்களின் குரு யாவர்?**

**இ. நூகுத்தம்பியின் கையிலுள்ள பிரம்பு பறந்தலைந்தது எவ்வாறு காட்டப்பட்டுள்ளது.**

**ஈ. அகமது லெவ்வை அண்ணாவியாரின் மனைவியாரை எவ்வாறு ஆசிரியர் அறிமுகம் செய்கிறார்.**

அ. ஒருபக்கம் அகமது லெவ்வை அண்ணாவியார். மறுபக்கம் நூகுத்தம்பி வாத்தியார். என்போர் போட்டியில் பங்குபற்றினர்.

ஆ. அகமது லெவ்வை. அண்ணாவியாரின் குரு வெலிகாமத்து மவுலானா வாப்பா அவர்கள்.
நூகுத்தம்பி வாத்தியாருக்குக் குரு இந்தியக்கார நானா அவர்கள்.

இ. இடக்கை அசையாமல் இருக்க வலக்கை மட்டும் சுற்றிச் சுழன்றது. அந்த நுட்பம், லாவகம் அவருக்கே கைவந்த வித்துவம். ஒரு வெள்ளிப் பறவை தனது பரிவாரங்களுடன் தாளநயம் தப்பாது சிறகடித்துப் பறந்து பாயுமே, அவ்வாறு நூகுத்தம்பியின் கையில் இருந்த வெள்ளிப் பூண் பிரம்பு பறந்தலைந்தது எனக் காட்டப்பட்டுள்ளது.

ஈ. ஐம்பதைத் தாண்டியும் கட்டுக் குலையாத அழகு. அத்தனை பல்லும் முத்துப்போல அங்கொன்றும் இங்கொன்றுமாக, முடியில் மட்டும் வெள்ளிக் கோடுகள்.. என அறிமுகம் செய்வார்.

3. **அ. 'மக்கத்துச் சால்வை' சிறு கதையில் பெறும் முக்கியத்துவம் என்ன?**

**ஆ. 'மக்கத்துச் சால்வை' என்ற சிறுகதை மூலம் நாம் அறிந்து கொள்ளும் படிப்பினைகள் என்ன?**

அ. **'மக்கத்துச் சால்வை'** கம்படி விளையாட்டில் வெற்றி பெறுபவருக்கு வழங்குவதாகக் கூறப்பட்டது.

★ தவறான வழியில் **'மக்கத்துச் சால்வை'** பயன்படாமல் சங்கைக்குரியவருக்கே சால்வை வழங்கப்பட்ட சிறப்பை உடையது.

★ **'மக்கத்துச் சால்வை'** பெறவேண்டும் என்ற ஆர்வமே கதையில் இழையோடிக் காணப்படுகிறது.

★ **'மக்கத்துச் சால்வையின்'** மேன்மை அதனைப் பெற விரும்புவதன் மூலம் காட்டப்படுகிறது.

★ **'மக்கத்துச் சால்வை'** கதையில் எல்லாப் பகுதிகளிலும், ஊடுருவி, இரண்டறக் கலந்து, கதைக் கருவுக்குரிய பொருளாகக் காணப்படுகிறது. இவ்வாறு சால்வை முக்கியம் பெறுகிறது எனலாம்.

ஆ. ★ விளையாட்டில் வெற்றி, தோல்வி பெறுவது இயல்பு. வெற்றி தோல்வியைச் சமமாக மதிக்கும் பண்பு இங்கு பேணப்பட்டுள்ளது. தவறு நடந்து தோல்வி அடைந்த போதும் அண்ணாவியார் எதுவும் கூறவில்லை.

★ நீதியற்று வழங்கப்படும் தீர்ப்புக்கள் மனித உள்ளத்தை உறுத்திக் கொண்டிருக்கும் என்பதை உணரலாம்.

★ என்றோ ஒருநாள் நாம் செய்யும் தவறுகளைத் திருத்தி நடக்க வழிபிறக்கும் என்பதை அறியலாம்.

★ நூகுத்தம்பி வாத்தியார் தாம் செய்த தவறுகளை எண்ணுகிறார். தவறுகளுக்குப் பிராயச்சித்தம் வேண்டுகிறார். எனவேதான் சங்கைக்கு உரியவருக்கே **மக்கத்துச் சால்வையை** வழங்கிவிடும் செயல் மூலம் தவறை உணர்தல், திருந்துதல், மனம் சமாதானம் அடைதல் போன்ற பண்புகளை அறிய முடிகிறது.

★ கடவுளை வணங்கல், கடவுள் கொடுத்த நன்மைகளுக்கு நன்றியாத இருத்தல் என்பன போன்ற பண்புகளை நூகு வாத்தியார் மூலம் காட்டுகிறார்.
இவ்வாறான பண்புகளை, படிப்பினைகளை இச்சிறுகதை மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

**4. 'மக்கத்துச் சால்வை' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவோரின் குணப்பண்புகளைத் தெளிவு படுத்துக?**

**அகமது லெவ்வை அண்ணாவியார்.**

★ தனது வீரத்தையும், தன் வலிமையையும் சிலம்படி மூலம் காட்டும் விருப்பமுடையவர்

★ வெற்றிபெற வேண்டும், என்ற விருப்பமுடையவர்.

★ குருபக்தி உடையவர் (குருவிடமிருந்து கையால் தொட்டுத்தடியை வாங்கியவர்)

★ தனக்கு அநீதியாகக் கிடைத்த வெற்றியை எண்ணிக் கவலைப்பட்டவர்.

★ தனக்குக் கிடைத்த அநீதியான தீர்ப்புக்கும், தான் செய்த பிழைக்குமாக கழிவிரக்கம் கொண்டு, அதை நீக்கி நூகுத்தம்பி வாத்தியாருக்கு மக்கத்துச் சால்வையை வழங்கிப் பிராயச்சித்தம் செய்யும் மனம் படைத்தவர்.

## நூகுத்தம்பி வாத்தியார்

★ தனது வீரத்தையும் வலிமையையும் காட்டிக் கொள்ள விருப்பம் உடையவர். (தடியடி விளையாட்டில் பங்கு பற்றுதல்)

★ போட்டியில் வெற்றி பெற வேண்டும் என விருப்பம் உடையவர்.

★ குருபக்தி மிக்க உள்ளம் கொண்டவர்.

★ சிலம்படிப் போட்டியில் தனக்குக் கிடைத்த தவறான அநீதியை இட்டுக் கவலைப்பட்ட போதும், அதற்கு எதிராகக் கிளம்பாது மனத்தை அடக்கும் பண்பு கொண்டவர்.

★ அநீதி நிகழ்ந்ததைத் தாங்க முடியாது ஊரை விட்டே கிளம்பும் எண்ணம் கொண்டவர்.

★ வயது முதிர்ந்த காலத்திலும் வெற்றி பெறவேண்டும் என்ற உள்ளத்துடன் திரும்பவும் போட்டியில் பங்குபற்ற விரும்பும் எண்ணம் கொண்டவர்.

★ நீதியுடன் நடக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர். அகமது லெவ்வை அண்ணாவியாரின் கண்ணாடி கழன்று அவர் கண் தெரியாத நிலையில் தடுமாறியபோது அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாத நல்ல உள்ளமுடையவர். அவ்வேளையில் அண்ணாவியருடன் தடியடிக்குச் செல்ல விரும்பாதவர்.

★ இறைபக்தி உடையவர். தனக்கு இறைவன் தந்த நல்ல உடல் உறுப்புக்களுக்காக இறைவன் மேல் நன்றி மிக்க உள்ளம் உடையவராக இருந்தார். (ஊராண்மை மிக்கவர்)

★ போட்டிக்கு வந்தவருடன் இணைந்து 'முசாபாச்' செய்யக் கட்டிப்பிடித்தார். இது அவரது நல்ல பண்பைக் காட்டுகிறது.

இவ்வாறாக நூகுத்தம்பி வாத்தியாரின் குணப் பண்புகளைக் கூறலாம்.

# 9. புள்ளி அளவில் ஒரு பூச்சி

1. அ. **"புள்ளி அளவில் ஒரு பூச்சி" என்ற கவிதையை இயற்றியவர் யார்?**

ஆ. **புள்ளி அளவில் ஒரு பூச்சி எனும் கவிதை உணர்த்தும் முக்கிய கருத்து யாது?**

இ. **பிற உயிர்கள்மீது இரக்கம் காட்டும் பண்பு இக் கவிதையில் எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது என்பதைத் தெளிவு படுத்துக.**

அ. இக் கவிதையை உருத்திரமூர்த்தி (மஹாகவி) அவர்கள் இயற்றினார்.

ஆ. மெய் பொய்யானது. எப்போது எமது உயிர் எம்மைவிட்டுப் பிரியும் என்பது தெரியாது. கூடுவிட்டு உயிர்போனபின் மெய்யே பொய்யாகி விடும் என்ற முக்கிய கருத்தை இக் கவிதை விளக்கி நிற்கிறது.

இ. ★ பூச்சி இறந்தவுடன், தட்டி உன்னைக் கொன்ற என் நெஞ்சம் நெருக்கென்றது.

★ பூச்சி வலியால் வாய்திறந்து கத்தியது, தாயே! என அழுதசத்தம் கேட்கவில்லை எனக் கூறுவார்.

★ காட்டெருமை காலடியில் பட்ட தளிர்போல் பூச்சி கிடந்தநிலை பற்றிக் கூறுதல்.

★ நான் செய்தது நீதியற்றது. தீதை மறந்துவிடு என்பன போன்ற கூற்றுக்கள், வார்த்தைகள் பிற உயிர்கள் மீது இரக்கத்தைக் காட்டி நிற்பதைப் புலப்படுத்துகிறது.

**2. "நீ மறைந்தாய்" என்பதற்குக் கவிஞர் காட்டும் உவமைகள் யாவை?**

★ நீட்டு ரயிலில் எறும்பு நெரிந்தது போல் நீ மறைந்தாய்.

★ பூட்டாத நம் வீட்டுப் பொருள் மறைந்தது போல் நீ மறைந்தாய் என்ற உவமைகள் மூலம் காட்டுவார்.

# 10. உணவளிப்போர் உயிர்காப்போர்

**1. அ. பண்டைய நூல்கள் உணவளிப்போர் தொடர்பாக என்ன கூறுகின்றது?**

**ஆ. மணிமேகலை தனது கடமையாக எதனைக் கொண்டாள்.**

**இ. மக்களுக்கு உணவு அளிப்பது எவ்வாறானது எனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

அ. "பசித்தோருக்கு உணவு கொடுக்க வேண்டும்" என்னும் நல்லறத்தையே பண்டை நூல்கள் எல்லாம் வலியுறுத்துகின்றன.

ஆ. மணிமேகலை பசித்த உயிர்களுக்கெல்லாம் உணவிட்டுக் காப்பதையே தனது கடமையாகக் கொண்டாள். தன் ஆயுள் முழுவதும் இவ் அறத்தையே ஆற்றிவந்தாள்.

இ. "மக்களுக்கு உணவளிப்பதே சிறந்த தர்மம். உயர்ந்த சமூக ஊழியம். தேசத் தொண்டு. மக்கள் சமுதாயத்தை அமைதியுடன் வாழச் செய்யும் வழி" எனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**2. அ. மக்களுக்கு உயிர்கொடுத்துக் காப்போர் யாவர் எனக் கூறப்பட்டுள்ளது.**

**ஆ. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” எனும் அடி இடம் பெற்றுள்ள இலக்கியங்கள் எவை?**

**இ. புறநானூறில் உண்டி கொடுப்போர் பற்றி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?**

அ. இவ்வுலகில் வாழும் அனைவருக்கும் அவர்கள் பட்டினியால் வருந்திச் சாகாமல் உணவளிக்க வேண்டும். இவ்வாறு உணவளிப்பவர்கள் தான் மக்களுக்கு உயிர் கொடுத்துக் காப்போர் ஆவர் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆ. இவ் அடி இடம் பெற்றுள்ள இலக்கியங்கள் **“மணிமேகலை”** (காதை 11 வரி 95-96) **“புறநானூறு”** (18 வது செய்யுள்.)

இ. ‘உணவால்தான் உயிர்வாழ முடியும். உணவின்றேல் உயிர்வாழ முடியாது. உணவு கொடுப்போர்தான் உயிரைக் கொடுப்போர் ஆவார்” எனப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

**3. அ. மணிமேகலை ஆசிரியர் யார்? அவர் உணவுக்கு அமைத்திருக்கும் பெயர் யாது? இந்நூலில் எத்தனை இடங்களில் அப்பெயரைக் கூறியுள்ளார்?**

**ஆ. அறவண அடிகள் அறம் எவ்வாறானது என மணிமேகலைக்குக் கூறினார் என்பதைத் தருக.**

**இ. ‘தெய்வக் கடிகை’ எனப்படுவது யாது? இதன் சிறப்பியல்புகள் யாவை?**

அ. மணிமேகலை ஆசிரியர் “சாத்தனார்”. உணவை “ஆருயிர் மருந்து” எனக் குறிப்பிடுவார். மணிமேகலையில் ஏழு இடங்களில் உணவைக் குறிப்பிட ஆருயிர் மருந்து என்பார்.

ஆ. “மக்கள் தேவர் என்ற இருவருக்கும் ஏற்ற ஒரு முடிவான அறம் இன்னது என்பதைக் கூறுகிறேன் கேள். அவ்வறம்

உயிர்களின் பசிப்பிணியை நீக்குவதுதான்" இதனைச் சாத்தனார் பின்வருமாறு கூறுவார்.

*"மக்கள் தேவர் என இரு சார்க்கும்*
*ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்"*
*"பசிப்பிணி தீர்த்தல்' என்றே அவரும்*
*தவப்பெரு நல்அறம் சாற்றினர்"*

இவ்வாறு அறவண அடிகள் மணிமேகலைக்குக் கூறினார்.

இ. தெய்வக்கடிகை எனப்படுவது **"அமுத சுரபி"** ஆகும். பசியால் வருந்தி வந்தோரின் கொடிய பசியைப் போக்கும். பசித்தோரின் துக்கம் நிறைந்த சோர்ந்த முகத்தின் நிலையை மாற்றும். இன்புற்று மகிழும் முகத்தை எமக்குக் காட்டும். இத்தகைய சிறப்புடையது அமுதசுரபி ஆகும். இதனை

**"வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்**
**திருந்து முகம் காட்டும் என் தெய்வக் கடிஞை"**

(காதை 14)

என மணிமேகலையில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

**4. அ. மணிமேகலையில் அறத்திலே சிறந்தது எதுவெனவும், அது எவ்வாறு சிறப்பித்தும் காட்டப்பட்டுள்ளது.**

**ஆ. "வறியோர்க்கு உதவுதலே உண்மை அறம்" என்பதை மணிமேகலை எவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளது?**

**இ. 'ஆபுத்திரன்' பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி உணவுண்ண வாருங்கள் என எவ்வாறு கூறியழைப்பான் எனக் கூறப்பட்டுள்ளது?**
**(வறியோருக்குப் பசிப்பிணி நீக்கும் போது உதவி பெறத்தக்கவர்கள் யாவர் எனக் கூறப்பட்டுள்ளது?)**

**ஈ. எவ்வாறானவர்களுக்கு உதவுதல் அறம் என்ற துறையுள் அடங்காது எனக் கூறப்பட்டுள்ளது.**

அ. **'அறம்'** என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று கேட்டால் சொல்கிறேன். நான் சொல்லும் இதனை மறவாமல் கேட்டு மனதில் வைத்துக்கொள். உலகில் உறையும் உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறையுள் இவைகளைக் கொடுத்து உதவுவது தான் சிறந்த அறம். இதைத்தவிர உயர்ந்த அறம் ஒன்று இருப்பதாக அறிந்ததில்லை.

> **"அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்**
> **மறவாது இதுகேள். மன்உயிர்க் கெல்லாம்**
> **உண்டியும். உடையும். உறையுளும் அல்லது**
> **கண்டது இல்"** (காதை 25)

என எழுதப்பட்டிருத்தல் தலைசிறந்த தருமம் உணவழித்தலே என்பதை 'மணிமேகலை தெளிவாக்குகின்றது.

ஆ. உணவில்லாமல் தவிக்கும் வறியோர்க்கே உணவளிக்க வேண்டும். வேறு வேலைகள் செய்து பிழைக்க முடியாத நோயாளிகள், அங்கம் பழுதடைந்தோர் போன்றவர்களைக் காப்பாற்றுவதுதான் உண்மையான நல்லறம் என மணிமேகலை தெளிவுபடுத்துகிறது.

இ. ஆபுத்திரன் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்திக் கொள்வான், குற்றமற்றோர் வாழும் சிறந்த வீடுகள் தோறும் சுற்றித் திரிந்து பிச்சை எடுப்பான்.

**"கண் தெரியாதவர்களே! காது கேளாதவர்களே! பிணியால் வருந்துகிறவர்களே! அனைவரும் உணவுண்ண வாருங்கள் எனக் கூவி அழைப்பான்'.**

அவனிடம் வந்து கூடுகின்றவர்களுக்கு எல்லாம் அன்னம் இடுவான். மீதப்பட்ட உணவைத் தான் உண்பான். அந்தப் பிச்சைக் கலனைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு படுத்து உறங்குவான். இதனைக்

"...காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர். பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருக. என்று இசைத்து உடன் ஊட்டி..!"

என மணிமேகலை ஆசிரியர் கூறிச் செல்வார்.

ஈ. நாம் செய்யும் உதவிக்கு, மாற்றுதவி செய்யும் ஆற்றல் படைத்தோர்க்கு உதவுவது அறம் என்ற துறையுள் அடங்காது எனலாம்.

5. **அ. மணிமேகலை அமுதசுரபியைக் கொண்டு அனைவருக்கும் உணவழிக்க எவ்வாறு அழைத்தாள் எனக் கூறப்பட்டுள்ளது?**

**ஆ. மணிமேகலையிடம் உணவு உண்ணுவதற்காகச் சூழ்ந்த உயிரினங்கள் எவ்வாறானவை எனக் காட்டப்பட்டுள்ளது? அவ் உணவு எதனைக் காப்பதாக அமைந்திருந்தது.**

**இ. மணிமேகலை பசித்தோர்க்கு உணவ ித்த தன்மையை விளக்குவதற்குக் கட்டுரை ஆசிரியர் கையாண்ட எடுத்துக் காட்டுகள் எவை?**

**ஈ. நாலாதிசைகளிலும் இருந்து வந்த பசித்தோர்க்கு மணிமேகலை எவ்வாறு அன்னமிட்டாள் எனக் கூறப்பட்டுள்ளது. உணவு பெற்று உண்டவர்கள் என்ன கூறினார்கள்?**

அ. மணிமேகலை அமுதசுரபியை உள்ளங்கையிலே ஏந்தி நிற்பாள். எல்லா உயிர்களும் உணவுண்ண வருக. என்று அழைப்பாள்.

"அங்கை யின் ஏந்திய அமுதசுரபியை வைத்து நின்று"
"எல்லா உயிரும் வருக என..." என்ற அடிகள் இதனை விளக்குகிறது.

ஆ. அவ்வூரிலே பதினெட்டு மொழிகளைப் பேசும் பலநாட்டு மக்களும் இருந்தனர். அவர்களிலே கண் தெரியாதவர்கள், காது கேட்காதவர்கள், கால் இல்லாதவர்கள், மற்றும் கால் நொண்டியானவர்கள், அநாதைகள், ஊமைகள், நோயாளிகள், தவக்கோலமும் விரதமும் உடையவர்கள், பசி நோயால் வருந்தியவர்கள், சோம்பலால் வறுமையுற்றவர்கள் யாவரும் வந்து கூடுவார்கள்.

பல நூறாயிரம் விலங்கினங்களும் வந்து சூழும். ஏனைய உயிர்களும் வந்து சுற்றிக்கொள்ளும். இவைகளுக்கெல்லாம் மணிமேகலை உணவிடுவாள்.

*"..மொய்த்தமூவ வறு பாடை மாக்களில்*
*காணார். கேளார். கால்முடம் பட்டோர்.*
*பேணா மாக்கள். பேசார். பிணித்தோர்*
*படிவ நோன்பியர் பசிநோய் உற்றோர்*
*மடிநல் கூர்த்த மாக்கள். யாவரும்*
*பல்நூறு ஆயிரம் விலங்கின் தொகுதியும்*
*மன்உயிர் அடங்கலும் வந்து ஒருங்கு ஈண்டி.."*

என மணிமேகலை ஆசிரியர் உணவுகளுக்கு கூடிய உயிரினங்களைக் கூறுவார்.

★ அவள் அளிக்கும் அவ் உணவு அவர்களின் உயிரைக் காக்கும் மருந்தாக இருந்தது.

**"..மன்உயிர் அடங்கலும் வந்து ஒருங்கு ஈண்டி**
**அருந்தியோர்க் கெல்லாம் ஆர்உயிர் மருந்தாய்.."**

என உணவானது **ஆருயிர்** மருந்தெனக் கூறப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

இ. ★ பெரிய தவசிகளுக்கும் பிச்சையிட்டால் அதன்பயன் பெருகிவளரும்.

★ சிறந்த முறையறிந்து விதைத்த விதை நன்றாக முளைத்து வளர்ந்து, பெரும் பயனைத் தரும்.

நாட்டிலே சிறந்த செல்வம் கொழிக்க வேண்டுமெனில் மழை பெய்ய வேண்டும். மழை பெய்தால் எல்லா வளமும் பெருகும். இது போல, மணிமேகலை நாலாதிசைகளிலும் வந்து குவிந்து கொண்டிருக்கும் பசித்தோர்க்கு முறையறிந்து வேண்டுமட்டும் அன்னமிட்டுக் காத்தாள் எனக் காட்டப்பட்டுள்ளது.

ஈ. நாலா திசைகளிலும் இருந்து வந்து குவிந்த பசித்தோர் அனைவருக்கும் வேண்டுமட்டும் அன்னம் இட்டுக் காத்தாள் மணிமேகலை எனக் கூறப்பட்டுள்ளது. சோறு கொடுப்பதில் அவள் சோர்வு அடையவே இல்லை.
அவளிடம் உணவு பெற்று உண்ட அனைவரும் அவளைப் புகழ்ந்து விட்டுப் போனார்கள்.

"**பசிப்பிணி தீர்த்த பாவையை ஏத்திச் செல்லும்...**" என்ற கூற்று இதனைத் தெளிவு படுத்தும்.

★ மேலும் அங்கையில் ஏந்திய அமுத சுரபியை வைத்து நின்று "**எல்லா உயிரும் வருக என**" "**.மன் உயிர் அடங்கலும் வந்து ஒருங்கு ஈண்டி அருந்தியோர்க் கெல்லாம் ஆர்உயிர் மருந்தாய்**" அமைந்திருந்ததெனத் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

★ மேலும் மணிமேகலை நாடு, மொழி வேறுபாடு இல்லாமல் வறியோர் அனைவருக்கும் உணவளித்தாள் விலங்கு முதலிய உயிர்களுக்கும் உணவிட்டாள் என்பது கூறப்பட்டுள்ளது.

6. **அ. யாருக்கு உணவளிப்பது உண்மையான அறம் எனக் காட்டப்பட்டுள்ளது?**

**ஆ. உணவளிப்பதன் பயன் யாது என மணிமேகலை கூறுகிறது?**

அ. தாம் செய்த உதவிக்கு எதிர் உதவி செய்யும் இயல்புள்ளவர்களுக்கு உணவளிப்பது உண்மையான அறமாகாது. அது அறம் என்னும் பெயரால் செய்யப்படும் வியாபாரம் ஆகும்.

ஏழை மக்களின் கொடிய பசியைப் போக்குவதே உண்மையான அறம் ஆகும். இத்தகைய ,அறத்தைச் செய்கின்றவர்களால்தான், உலகிலே உண்மையான ஒழுக்கநெறி காப்பாற்றப்படுகிறது.

**"ஆற்று நர்க்கு அளிப்போர் அறிவிலை பகர்வோர்**
**ஆற்றா மக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றா உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"**

என மணிமேகலையில் உண்மையான அறம் கூறப்பட்டுள்ளது.

ஆ. பசித்தோர்க்குச் சோறு கொடுப்பவர்களே மறுபிறப்பில் நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோராகப் பிறப்பார்கள். அவர்கள் எல்லாப் பிறவிகளிலும் நல்லறங்களையே புரிவார்கள். இறுதியில் பிறவா நெறியை அடைவார்கள் என உணவளிப்பதன் பயன் பற்றி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது.

7. அ. **மணிமேகலை சாதுசக்கரன் என்ற முனிவனை உபசரித்து, உணவிட்டதால் கிடைத்த பயன் யாது? (அன்னதானத் -தின் பயன் மணிமேகலைக்கு எவ்வாறு கிடைத்தது)**

ஆ. **மணிமேகலை பிறப்பின்றி முத்திபெறுவதற்கான கதையைக் கூறியவர் யார்?**

அ. சாதுசக்கரன் என்ற முனிவனை உபசரித்து உணவளித்தமையால் கிடைத்த பயன் பின்வருமாறு.

★ மணிமேகலைக்குப் புண்ணியம் கிடைத்தது. அப் புண்ணியம் அவளைத் தொடர்ந்து நின்று இறுதியில் அவள் பிறப்பின்றி முத்தி பெறுவதற்கும் மூலமாயிற்று எனக் கூறப்பட்டுள்ளது.

> **"அந்நாள் அவன் உண்டு அருளிய அவ்வறம்**
> **நின் ஆங்கு ஒழியாது. நின் பிறப்பு அறுத்திடும்.."**

என மணிமேகலையில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது.

★ மேலும், வேறோர் இடத்தில் மணிமேகலை தனக்குக் கிடைத்த பயனைப்பற்றித்தானே கூறுவதாகக் கூறப்படுகிறது.

★ மணிபல்லவத் தீவிலே, தீவதிலகை என்னும் தெய்வத்தை மணிமேகலை சந்தித்தாள். அவள் தனக்கு அமுதசுரபி என்னும் பிச்சைப் பாத்திரம் கிடைத்ததற்குக் காரணம் முற்பிறப்பிலே செய்த அன்னதானம் தான் எனக் கூறபபடுகிறது. அப்பயனால் அரிய உயிர்களைக் காக்கும் மருந்தாக இவ் அமுதசுரபி என்கையில் புகுந்தது எனக் கூறப்படுகிறது.

> **"அங்கதன் பயனே ஆர்உயிர் மருந்தாய்**
> **ஈங்கு இப்பாத்திரம் என் கைப் புகுந்தது"**

என மணிமேகலை கூறுவது நோக்கத்தக்கது.

இவ்வகையில் பார்க்கும்போது முனிவனுக்கு உணவளித்ததன் பயனை மணிமேகலை பெற்றாள் என்பதை அறியலாம்.

ஆ. மணிமேகலைத் தீவிலே மணிமேகலையின் முன் தோன்றிய மணிமேகலா தெய்வம் இக்கதையை உரைத்தது.

8. "அற்றா ம.க்காள் அரும்பசி களைவோர்
மேற்றேயுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"
**என்னும் தொடர் உணர்த்தும் பொருள் யாது?**

செய்த உதவிக்கு எதிர் உதவி செய்ய முடியாத இயல்பு அற்றவர்களுக்கு உணவளிப்பதே உண்மையான அறமாகும். அதாவது ஏழை மக்களின் கொடிய பசியைப் போக்குவதே உண்மையான அறம் ஆகும். இத்தகைய அறத்தைச் செய்பவர்களால் தான், உலகிலே உண்மையான ஒழுக்கநெறி காப்பாற்றப்படுகிறது.

எனவே ஆற்றாத மக்களுக்கு ஏற்பட்டுள்ள கொடிய பசியைக் களைய வேண்டும். இதனால் உலகில் உண்மை பொருந்திய ஒழுக்கநெறி காப்பாற்றப்படும், போற்றப்படும் என்பதாம்.

9. **தெய்வக் கடிகை எனப்படும் அமுதசுரபியின் சிறப்பியல்பு யாது?**

**"பசியால் வருந்தி வந்தோரின் கொடிய பசியைப் போக்கும் அவருடைய துக்கம் நிறைந்த சோர்ந்த முகத்தின் நிலையை மாற்றும். இன்புற்று மகிழும் முகத்தை எனக்குக் காட்டும். இதைக் கேட்டு யானும் மகிழ்ச்சியடைவேன்."**

என்ற ஆபுத்திரனின் கூற்றின் மூலம் தெய்வக் கடிகையின் சிறப்பியல்பு இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
**"வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்
திருந்துமுகம் காட்டும் என் தெய்வக் கடிஞை"**
என்றபாடல் இதனை உறுதிசெய்து நிற்கிறது.

# 11. பொருளோ பொருள் (நாடகம்)

1. அ. **கார்த்திகேசு, வடிவேலுவை முன்னர் எவ்வாறு இகழ்ந்து பேசினான் என நாடகத்தில் காட்டப்பட்டுள்ளது?**

வடிவேலு போன சிவில் சேவிஸ் பெயில் பண்ணிப் போட்டாராம். இரண்டு வரியம் முடிஞ்சுது, ஸ்கொலஷிப் காசும் நிப்பாட்டிப் போடுவார்கள். இனிமேல் உவர் என்ன செய்யிறது? இப்ப பரிஸ்டருக்குப் படிக்கிறாராம். காசுக்கென்ன செய்யிறாரோ? அப்படித்தான் ஒரு விதமாய்ப் படித்துப் பாசு பண்ணினாலும் இஞ்சை வந்து என்ன, மட்டையடிக்கப் போறாரோ? மடையன், மூளை இருந்தால் தானே. அதென்ன, "**மெத்தயில வைச்சாலும் சருகுக்கை போறது சருகுக்கைதான்.**" பாவக்கொட்டை போட என்ன சுரக்கொட்டையே முளைக்கிறது என வடிவேலுவைக் குறைவாகவும், என்ன படிக்கப் போனாலும், படிக்காது திரும்பவும் அவர்கள் வறுமை நிலையே அடைவார்கள். இவர்களை மெத்தையிலே வைத்தாலும், குறைவான இழிந்த சருகுக்குள்ளே போவது போல, எளிமையிலேயே கிடப்பர் என நையாண்டியுடன் கார்த்திகேசு கூறுவது நாடகத்தில் உணர்ச்சியுடன் காட்டப்படுகிறது.

2. **கார்த்திகேசு வறுமை நிலையில் உள்ள சின்னத்தங்கம் வீடு சென்று உறவைப் புதுப்பித்த காரணத்தைக் கார்த்திகேசுவின் பொடிவைத்துப் பேசும் தந்திர வார்த்தைகள் மூலம் ஆசிரியர் எவ்வாறு நாடகத்திலே காட்டுகிறார் என்பதைத் தெளிவுறுத்துக.**

★ மோனை, தங்கச்சி என உறவு கொண்டாடுவதைக் காட்டுவார்.

★ கார்த்திகேசு ஒரு நாளும் வறுமைப்பட்ட தங்கச்சி வீட்டுக்கு வரமாட்டார் என்பதை அதென்னண்ணை? ஒருநாளும் வராதனீங்கள், என்னவும் தொந்தறவோ? ஆருக்கும் வருத்தம் கிருத்தமோ? என்ற வார்த்தை விளக்கி நிற்கிறது.

★ எப்படி உன்ரைபாடு எனக் கார்த்திகேசு சுகம் விசாரித்தல். இதேன் இந்த வீடு ஏன் மேயயில்லை? மழை பெய்ஞ்சால் இக்கணம் ஒழுகப் போகுது என்று விசாரித்தல்.

★ ஒரு வாய்க்கு வெத்திலை தா என உரிமையுடன், உறவுகாட்டி வேண்டி உண்ணல்.

★ சின்னத்தங்கத்தின் மகன் வடிவேலு சிவில் சேவிஸ் சோதனையில் சித்தியடைந்ததை அறிந்த கார்த்திகேசு வறுமையினால் பீடிக்கப்பட்டிருந்தபோதும் தங்கச்சி வீட்டுக்கு வராதவர் இப்போது வருகை தந்துள்ளார் என்ற கூற்று.

★ ஏதுங் காசுகீசு அனுப்ப வேணுமெண்டால் சொல்லு தங்கச்சி, தாறன் இல்லாவிட்டால் நானே அனுப்பிவிடுறன். அதைப்பற்றி ஒண்டும் யோசியாதை.

★ சின்னத்தங்கம் மகனைப் படிப்பிப்பதற்காக காணியை ஈடுவைத்து அனுப்பியவள். அப்போது கொண்டாடாத அண்ணன், தங்கச்சி உறவு இப்போது வடிவேலு பரீட்சையில் சித்தியடைந்தபின் கார்த்திகேசுவால் தொடக்கப்படுகிறது. காரணம் வடிவேலுவைத் தன் மருமகனாக்கிக் கொள்ளும் திட்டமாகும்.

★ ஓ! அவன் கெட்டிக்காரன்தான். சின்னப் பிள்ளையிலும் அப்படித்தானே. இவனைப் படிப்பித்த சட்டம்பிமாரே விண்ணாதி விண்ணன்களெல்லே. அப்பவே சொன்னாங்கள் எனக்கு. அவன் ஒரு பெரிய கெட்டிக்காறனாய் வருவானெண்டு, அப்படியே வந்திட்டான். அவன் சிவில் சேவிஸ் பாஸ் பண்ணியது எங்கள் எல்லோருக்கும் பெரிய பெருமையும், சந்தோஷமுந்தான் என்ற வார்த்தைகள்.

★ உங்கினை உள்ளவங்கள் ஆரும் இஞ்சினை வந்துகிந்து தங்கச்சி அதுதாறன், இதுதாறன், அது செய்யிறன், இது செய்யிறன் எண்டு சொல்லி உன்னை ஏமாத்தப் பாப்பாங்கள். இடங்குடுத்திடாதை. நான்தானே எங்கட குடும்பத்துக்கை பெரியஆள் என்ன? எல்லாத்தையும் நானே கொண்டு நடத்திக் கொள்ளுவன். என்ன விளங்குதே?

★ உவன்ரை படிப்புக்கு ஏத்த விதமாய் வேறை ஒரு இடமும் பிறத்தியுக்கை கூட எடுக்க முடியாது. அதோட, எங்கை யெண்டாலும் வெளியிலே கொண்டு திரியிறத்துக்குத் தகுந்த பழக்க வழக்கங்கள் தெரிஞ்ச பொம்பிளையாய் வேணும். அதுக்கெல்லாம் தக்கபடி என்ரை பிள்ளையைக் கொழும்பிலே விட்டு நல்ல இங்கிலீசுப் பழக்கம் பழக்கியிருக்கிறேன். என்று கூறுவதன் மூலம் வடிவேலுவைத்தன் மருமகனாக்கிக் கொள்ளத் திட்டம் இடுவதையும், பொடிவைத்துப் பேசும் பாங்கினையும் ஆசிரியர் காட்டுவார்.

★ என்ரை பணமெல்லாத்தையும் ஏன் பிறத்தியுக்கை விடுவான். அதுக்காகத்தான் என்ரை பிள்ளையையும் உவ்வளவு செலவிட்டு மெத்த மேலான படிப்புப் படிப்பிச்சனான். நான் நினைச்சது போல எல்லாம் சரிவந்திட்டுது.

★ ஒரு வீடும் கொழும்பிலை வாங்கி நானும் பிள்ளையும் போய் இருக்கப்போறம். பிள்ளை கெதியாய் இடாக்குத்தருக்குப் பாசு பண்ணிவிடுவாள். தம்பியும் அதுக்கிடையிலை வந்திடுவான். இரண்டு பேரையும்**சேர்**த்து விட்டால் எல்லாருக்கும் ஒரு பெருமையும், நன்மையும் தான் தங்கச்சி. இனிமேல் இரண்டு பேருஞ் சேந்து உளைச்சுக் கொள்ளுவினம். அவளுக்கும் நெடுகக்கூட அவனிலான் ஒரு வாரப்பாடு. என்ன உனக்குத் தெரியாதே தங்கச்சி.

★ அவையை ஏன் நாங்கள் பிரிச்சு வைப்பான்?
வறுமை நிலையிலும், எக்காலமும் சின்னத்தங்கம் குடும்பத்தை எட்டிப்பார்க்காத கார்த்திகேசு இப்போது தங்கச்சி உறவு கொண்டாடி வடிவேலுவை மருமகனாக்கிக் கொள்ளுவதற்காகக் கூறும் பசப்பு வார்த்தைகளை ஆசிரியர் நயம்பட நையாண்டியுடன் இவ்வாறாக எடுத்துக் காட்டுகிறார்.

**3. வறுமைநிலையில் இருக்கும் தங்கச்சி சின்னத்தங்கம் குடும்பத்துக்குத், தமையன் கார்த்திகேசு தனது பணத்தின் பெருமையையும், தன் குடும்பநிலையையும் உயர்த்திக் காட்டும் விதத்தை ஆசிரியர் கிண்டல் பொருந்த நையாண்டியுடன் எவ்வாறு எடுத்துக் காட்டுகிறார் என்பதைக் காட்டுக.**

★ என்ரை பணமெல்லாத்தையும் ஏன் பிறத்தியுக்கை விடுவான்.

★ அதுக்காகத்தான் என்ரை பிள்ளையையும் உவ்வளவு செலவிட்டு மெத்த மேலான படிப்புப் படிப்பிச்சனான்.

★ என்ர பிள்ளையைக் கொழும்பிலே விட்டு நல்ல இங்கிலீசுப் பழக்கம் பழக்கியிருக்கிறன்.

★ ஒரு வீடும் கொழும்பில வாங்கி நானும் பிள்ளையும் போய் இருக்கப் போகிறம்.

★ பிள்ளையும் கெதியாய் இடாக்குத்தருக்குப் பாசு பண்ணிவிடுவாள்.

★ நாடக ஆசிரியர் கொழும்பு கார்த்திகேய பிள்ளை வீடு எனக் கூறுவார். கார்த்திகேசு இப்போ கார்த்திகேய பிள்ளை ஆகிவிட்டார்.

★ தாமுவைக் கொண்டு வீட்டில் பூச்சாடிகளை அங்கு புதிதாக வைத்தல்.

★ தாமு, கோற்றுப் போட்டுள்ளான்.

★ உன்ர 'றிசல்ட்' வந்தது. விசிற்றுக்கு எத்தனையோ பேரெல்லாம் வருவினம். உவனை (இராமுவை) இண்டைக்கு மாத்திரம் இஞ்சினை ஆக்கள் வந்திருந்தால் வெளியில வரவிடாதை.

★ கொத்தான் வடிவேலு கப்பலில் வாறெனெண்டு உன்ரை மாமி ஒரு தவால் எழுதியிருக்கிறா.
அந்த முன்னறைக்கு ஒரு பெட்றூம் சூற்று 'டொன் கறோசிலை' ஓடர் பண்ணவேண்டும்.

★ கமலவேணி; எனக்கொரு ரெனிஸ் றாக்கற்றும், ஒரு கிமோனாவும், கோல்டு வாச்சும் வேணும்.

★ கமலவேணி கைப்பையைத் துறந்து பௌடர் போட்டு கண்ணாடி பார்த்துச் சொண்டுக்கு மை தீட்டுகிறாள்.

★ தம்பி இவ இப்ப இடாக்குத்தர் ஆகிவிட்டா.

★ கார்த்திகேசு; உத்தியோகம் எடுக்கிறது ரெம்பக் கஷ்டம். உங்கினை உள்ள ஆட்களைப் பிடிச்சு வேலை செய்து அவங்களுக்கு ஒருவிதமாய்க் கைப்பச்சை கட்டி உத்தியோகம் எடுத்துக் குடுத்திட்டன். இப்ப **"லயின் கோமில"** வேலை செய்யிறா.

★ கதிராமு உனக்குத்தானே தெரியும் என்ர வீடு? எவ்வளவு பெரிசு. அதின்ரை போட்டிக்கோவின்ர அழகென்ன. நல்ல பெரிய காடின்.

★ நான் வேண்டமுந்தி ஒரு வெள்ளைக்காறனுக்கு 450 ரூபாவுக்கெல்லே குடுத்திருந்தவங்கள். என்ரை மோளுக்கு அதிலை ஒரு கவர்ச்சி பிடிச்சிட்டுது. அதுதான் வேண்டினனான்.
அங்கை வீட்டை **பிளவர் பொற்சு** எல்லாம் வைக்க இடமில்லாமல் கிடக்கு.

★ கமலவேணி கிமோனா உடுப்போடு இருத்தல்.

★ சாப்பாட்டு மேசைக்குப் புதுச்சீலை விரிச்சுப்போடு.

★ இராசம்மா குடும்பம் வீட்டுக்கு வந்தவை. இஞ்சை நிண்டு கொண்டு ஆசுப்பத்திரிக்குப் போய்வரலாம் என்று. ஒரு விதமாய் ஆசுப்பத்திரிக்கே கலைச்சு விட்டிட்டன். **உந்த எளிய படையை இஞ்சை வீட்டில் வைச்சுக் கொண்டு என்ன செய்யிறது.**

★ கமலவேணி; அதுதான் நல்லது. இது என்ன மடமெண்டு நினைச்சுக் கொண்டினமே? சீலைகீலை சீராய் உடுக்கத் தெரியாது. மேசையிலை இருந்து சாப்பிடத் தெரியாது. ஆரும் உதுகளைக் கண்டால் என்ன நினைப்பினம் எங்களைப் பற்றி.

★ தாமு; உவருக்கு இப்ப கொஞ்சம் தலை பளுதாய்ப்போச்சு. சும்மா யாள்ப்பாணத்திலை சிவசிவா எண்டு கிடந்த என்னைப் பிடிச்சுக் கொண்ணுந்து இந்த வெய்யில் வேர்வையுக்கை கூடச் சட்டை, தொப்பி எல்லாம் போட்டுக் கொண்டு நிக்கச் சொல்லுகினம்.

★ ஐயா எண்டால் முன்னையப் போலை இல்லை. துரைக்கு விளையாடிறார். அம்மா ஒரு துரைச்சாணி.

★ காப்பற்றைப் புறம்மாறிப் போடுறான் தாமு. ஊரிலை சாக்குப் போட்டுப் பளகின எங்களுக்கு உதுகளை யெல்லாம் போடிறதெண்டால் என்னெண்டு சரிவரும்?

★ அந்தக் கொக்றெயிலைக் கொண்டாடா.

★ எவ்வளவு பொருளைச் சிலவளிச்சுப் படிப்பிச்சனான் தெரியுமே? இங்கிலீசு மாதிரிச் சமயல். நீ வந்தா வேணுமெண்டு. பின்னேரத்திலை இதுக்கெண்டு ஒரு குக்கிங் ஸ்கூலிலை எல்லே விட்டுப் படிப்பிச்சனான்.

★ கார்த்திகேசு தலைப்பாகையைப் போட்டிருத்தல்.

★ கார்த்திகேசு தன் சகோதரியின் தோட்டத்தை ஈடுவைத்து காசு வழங்கியமை.

★ வேறை பிள்ளைக்கு வாற இட்டல் இடைஞ்சல் எல்லாம் பார்த்துக் கொள்ளுவன்.

இவ்வாறாக கார்த்திகேசு தன் பணக்காரப் பெருமையைக் காட்டுவதுடன், தன்னை உயர்த்திக் காட்டுவதையும் நாடகத்தினூடாக ஆசிரியர் நையாண்டி தோன்றக் காட்டுவதைக் காணமுடிகிறது.

**4. "பொருளோபொருள்" என்ற நாடகத்தில் யாழ்ப்பாணத்து மண் வாசனையைக் கதாபாத்திரங்களின் உரையாடல் மூலமாக பிரதேசப் பேச்சு மொழியை ஆசிரியர் காட்டிச் செல்கிறார். இதனைத் தெளிவுபடுத்துக.**

பொருளோ பொருள் என்ற நாடகத்தின் மூலமாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண மண்ணுக்கு உரித்தான பேச்சுமொழியைத் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளார். இதனை அவர் நாடகத்தில் காட்டும் பாத்திரங்களின் கூற்றுக்கள் மூலமாகத் தெளிவுறுத்தலாம்.

★ அப்படியெண்டால் உன்னையும் கொழும்பிலை அடிக்கடி காணலாம், அது கிடக்க, மெய்யே கமலி, ஒவ்வொரு நாளும் தானே உப்பிடி நடக்குது. எப்ப உதெல்லாம் முடிஞ்சு இடாக்குத்தர் ஆகிறது. உனக்குத் தானே நல்ல கொளுத்தமாப்பிளை ஒண்டு இருக்கு சீமையிலே.

★ உங்கடை மருமோன்ரை சேதியளெல்லாம் எப்படியிருக்கு? வேறை ஆர்? சின்னத்தங்கச்சியாற்றை மோன்தான் இப்ப சீமையிலை இருக்கிறவர். இப்பென்ன செய்யிறாராம்?

★ என்பனபோன்ற மங்கையற்கரசியின் கூற்றுக்கள் மூலமாகக் கார்த்திகேசுவின் பேச்சில் யாழ்ப்பாணத்து மண்ணின் வாசனை கமழ்கிறது எனலாம்.

மேலும் கார்த்திகேசுவின் உரையாடல் மூலமும் யாழ்ப்பாணத்துப் பேச்சினை அறிந்து கொள்ளமுடிகிறது.

★ அதார் பிள்ளை என்ரை மருமோன்? மோனை, தங்கச்சி சின்னத்தங்கம், சாய் ஒண்டுமில்லை, இதாலே போனனான், ஒருக்கா உன்னையுங் கண்டு கொண்டு போவம் எண்டிட்டு வந்தன். எப்படி உன்ரை பாடு.

★ தம்பியின்ரை தவால்கிவால் வாற இல்லையே, அவரைப் படிப்பிச்ச சட்டம்பிமாரே விண்ணாதி விண்ணர்களெல்லே. அச்செளுவான்தான்

ஒரு நுள்ளுக் கிடக்குது, சாய் சாய் வேண்டாம். தங்கச்சி அதுக்கெல்லாம் தண்ணி வாத்தாச்சே.

★ உந்த மோடனாக்கும், இப்பென்னோ செய்தான் உங்கினை நிண்டுகொண்டு; கெதியாய் இஞ்சை ஓடியாடா; அந்த முற்றாகின விஷயத்தை ஏன் நெடுக இளுத்துக் கொண்டு கிடப்பான்; அப்ப நான் வாறன், பின்னேரத்திலை இதுக்கெண்டு ஒரு குக்கிங் ஸ்கூலிலை எல்லே விட்டுப் படிப்பிச்சனான்; ஆ, அப்படியும் ஆச்சோ? எனக்கு ஓம் எண்டு சொல்லிப்போட்டு இன்னம் ஒண்டைக் கட்டவோ என்பது போன்ற பல்வேறு கூற்றுக்கள் மூலமாக யாழ்ப்பாணப் பேச்சுமொழிக்கு ஆசிரியர் இந்நாடகத்தில் முழு இடத்தையும் கொடுத்து உள்ளார் எனலாம்.

★ மேலும் - காலமைதான் வந்தனான், இனியென்ன பைனல்தானே, அதாரப்பா உங்கை சிவில் சேவன்று? உதேன் உந்தக் குடையை வச்சிருக்கிறாய், அப்ப பின்னைக் கொஞ்ச மோர் குடியன், இப்ப கிட்டடியிலை நடந்த சோதினையிலை யாக்கும் என்பது போன்ற கமலவேணியின் உரையாடல் மூலமாகவும் யாழ்ப்பாண மண்வாசனை நாடகத்தில் இழையோடிக் காணப்படுவதை அறியலாம்.

★ வாறன் ஐயா, உவையோடை அண்டலிக்கிறது பெரிய கயிட்டமாய்க் கிடக்கு தம்பி, உன்னைக் கண்டு கனநாளாய்ப் போச்சு என்பது போன்ற தாமுவின் கூற்றுக்கள் மூலமாகவும் இந்நாடகத்தில் யாழ்ப்பாணப் பேச்சுமொழிகள் நிறைந்து காணப்படுவதைக் காணலாம்.

★ மேலும், ஓமெணை மச்சாள், அப்பொருக்கா அந்த டாக்குத்தரெட்டைக் கவனமாய்ப் பாக்கச் சொல்லிவிடு மோனை. உனக்கு நூறு தறுமங் கிடைக்கும். சொன்னாப்போலை, குறை நினைச்சுக் கொள்ளாதை தம்பி என்ற வள்ளியம்மையின் வார்த்தைகள் மூலமாகவும், ஏனைய பாத்திரங்கள் வாயிலாகவும் பார்க்கும்போது பொருளோ பொருள் என்ற நாடகத்தை யாழ்ப்பாணத்து மண்வாசனை கமழும், பேச்சு மொழியில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் உயிரோட்டமாக ஆக்கியுள்ளார் எனக் கூறுவது மிகையாகாது.

**5. இராசம்மாவுக்கும், வள்ளியம்மைக்கும், இடையே இடம்பெற்ற உரையாடலில் இருந்து பெண்கள் கல்வி கற்பது பற்றி வள்ளியம்மை கொண்டிருந்த அபிப்பிராயம் பற்றிச் சுருக்கமாக எழுதுக?**

★ நல்லாய் இங்கிலீசு படிச்சவளும் காசுக் காறியுமல்லோ அவனுக்குச் சோடி. நீயென்ன தமிழ்தானே படிச்சிருக்கிறாய். கொஞ்ச இங்கிலீசு படிச்சாப்போல போதுமா? சீமைக்குப் போனவனை முடிக்க நல்ல இங்கிலீசு படிக்க வேண்டும் என வள்ளியம்மை எண்ணியவள்.

★ சும்மா படிப்புத்தான். உந்தப் படிப்பாலை இக்கணம் உன்ரை அருமந்த உடம்பை பளுதாக்கப்போகிறாய். பெரியையா கண்டாக்டர் அவற்றை மோள் உடம்பு பழுதாகி, கண்ணும் பளுதுபட்டு, அறுவது வயது செண்ட கிழவியள் போல ஒரு கண்ணாடியும் போட்டுக் கொண்டு திரியுது என்ற கூற்றில் இருந்து பெண்கள் படிப்பதனால் ஏற்பட்ட விளைவே இதுவென எண்ணுகிறாள்.

★ உண்ணாணை இந்தப் படிப்பெல்லாம் என்னத்துக்கு, படிச்சுப் போட்டு என்ன கால்ச் சட்டையுக்குள் பூரப் போகினமாமே. நாளைக்கு ஏசண்டர் வேலையும் தங்களுக்கு வேண்டுமெண்டு கேட்பினமாக்கும். நல்ல புதுமையான பெண்டுகளாக்கும். பெண்டுகள் உத்தியோகம் செய்வதை விரும்பாத போக்கு உடையவள்.

★ எனவே படிப்பைவிடக் காசு முக்கியம் என எண்ணுபவளாகவும்; தமிழை விட ஆங்கிலம் நிறையக் கற்ற பொண்ணுக்கு சீமைக்குப் போனவனைக் கட்டிவைக்கலாம் என்ற எண்ணம் கொண்டவளாகவும், பெண்கள் படிப்பதால் அவர்களின் உடல் பாதிப்படைந்து தாக்கம் உறுவதையும், பெண்கள் படித்தால் பெரிய வேலை கேட்பார்கள் எனவும் அதை விரும்பாத எண்ணம் கொண்டவளாகவும் வள்ளியம்மை பெண்களின் கல்வி பற்றி அபிப்பிராயம் கொண்டிருந்தாள் என்பது நாடகத்தின் மூலம் அறியமுடிகிறது.

**6. அ. கார்த்திகேசு, இராசம்மாவிற்கு விவாகம் செய்து வைக்க ஆர்வம் கொண்டது ஏன்?**

**ஆ. வடிவேலு கமலவேணியைத் திருமணம் செய்ய விரும்பாமைக்குக் காரணம் என்ன?**

அ. வடிவேலு இராசம்மாவைத் திருமணம் செய்ய விரும்புவதை அறிந்த கார்த்திகேசு, இராசம்மாவுக்கு வேறு திருமணம் செய்துவைக்க முனைகின்றார். இவ்வாறு இராசம்மாவுக்குத் திருமணம் வேறிடத்தில் செய்து வைத்தால், வடிவேலுவைத் தனது மகள் கமலவேணிக்கு திருமணம் செய்யத் திட்டம் இடுகிறார் கார்த்திகேசு. இதனால் இராசம்மாவுக்குத் திருமணம் செய்து வைக்க கார்த்திகேசு ஆர்வம் கொள்கிறார் எனலாம்.

ஆ. ★ வடிவேலுவின் குடும்பம் வறுமை நிலையடைந்தபோது உறவினைக் கார்த்திகேசு முடித்துக் கொண்டவர். வறுமையைத் தனக்கு மரியாதைக் குறைவாக எண்ணியவர்.

★ பணத்திற்கே முதலிடம் கொடுப்பவராகவும், எப்பொழுதும் பணப் பெருமையில் பேசுபவராகவும் காணப்பட்ட கார்த்திகேசு வீட்டில் திருமணம் செய்ய வடிவேலு -– விரும்பவில்லை.

★ வடிவேலு சிவில்சேவன்ஸ் படிப்பதற்காக வெளிநாடு செல்வதற்கு, காணியை ஈடுவைத்தே சென்றவன். அதே காலத்தில் கார்த்திகேசு வசதியானவராக இருந்தார். ஆனால் பணம் கொடுத்து உதவ முன்வரவில்லை. அவர்களின் உறவு கூறவே வெட்கப்பட்டவர். விலகி இருந்தவர். அது மாத்திரமின்றி வடிவேலுவின் வறுமை நிலையைப் பரிகாசமாகப் பழித்தாரே ஒழிய, அதனை நீக்க முன்வரவில்லை.

★ **“மெத்தையில் வைச்சாலும் சருகுக்கை போறது சருகுக்கைதான்”** பாவக்கொட்டை போட என்ன சுரைக்

கொட்டையே முளைக்கிறது. என்றெல்லாம் இகழ்ந்து பேசியவர் கார்த்திகேசு.

★ ஆனால் இன்று வடிவேலு சிவில் சேவன்ற் பரீட்சையில் சித்தியடைந்தவுடன் தனது மகள் மங்கையற்கரசிக்கு வடிவேலுவைத் திருமணம் செய்து வைக்கத் திட்டமிட்டு உறவு கொண்டாடுகிறார் பணத்திற்கும், நவ நாகரீகத்துக்கும் கார்த்திகேசு முதலிடம் கொடுத்தார். குடும்பபாசம், உறவு என்பவற்றிற்கு மதிப்புக் கார்த்திகேசு கொடுத்தது கிடையாது.

★ எப்பொழுதும் பணத்தை அடிப்படையாகவும்; உயர்வாகவும் கொண்டே கார்த்திகேசுவின் நடவடிக்கைகள் இருந்தன. வடிவேலுவை மருமகனாக எடுக்கக் கார்த்திகேசு போடும் கபட நாடகமும், பொய் உறவுக் கொண்டாட்டத்தையும் வடிவேலு விரும்பவில்லை.

★ வடிவேலு பணத்தை மதிக்கவில்லை. தான் வாழ்ந்த முறை தனது உறவினர்கள் பற்றிய பாசம் அவனுக்கிருந்தது. எந்தத் தருணத்திலும், தனது முன்னைய வாழ்வை மறந்தானல்லன்.

★ எனவே தான் ஏழ்மை நிலையில் இருக்கும் மாமி வள்ளியம்மை வீட்டில் திருமணம் செய்ய விரும்பினான். எனவே இராசம்மாவை வடிவேலு திருமணம் செய்தான். இதன் மூலம் பணத்திற்கு மதிப்புக் கொடுக்காது, பழைய உறவுக்கும், ஏழ்மைக்கும் மதிப்புக் கொடுக்கும் ஓர் உயர்ந்தவனாகவே வடிவேலுவை ஆசிரியர் நாடகத்தில் காட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

7. **"பொருளோ பொருள்" என்ற தலைப்பு பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் நாடகத்துக்கு எந்த வகையில் பொருத்தமாக அமையும் என விளக்குக?**

★ இந் நாடகம் பொருளை வைத்திருக்கும் கார்த்திகேசு பொருளே பெரியது என எண்ணுவதைக் காட்டுகிறது.

★ பொருளினால் எதையும் அடையலாம் என எண்ணுபவர்களுக்கு இந் நாடகம் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. பொருளினால் எதனையும் அடைய முடியாது என்பதை இந் நாடகம் விடையாகக் காட்டி நிற்கிறது.

★ பொருள் இருக்கும் செல்வ நிலையால் தனது சொந்தச் சகோதரங்களையே வெறுத்து நிற்கும் கார்த்திகேசுவையும், அவர்களிடம் உறவு கொண்டாடுவதே தனது தகுதிக்குப் பொருத்தம் அற்றது என எண்ணுகின்ற கார்த்திகேசுவையும் ஆசிரியர் அடிக்கடி காட்டுவார்.

★ பொருளை வைத்திருக்கும் கார்த்திகேசு தனது பொருட் செல்வச் செழிப்பினால் பழமையை மறந்து வாழ்பவனாகக் காட்டப்படுகின்றார்.

★ கார்த்திகேசு குடும்ப நடையுடை பாவனைகள் மட்டுமின்றி அவர்களின் பேச்சுக்கள் கூடப் பொருட் செல்வத்தால் மாற்றமடைந்து, போலி வாழ்க்கை வாழும் கார்த்திகேசுவின் செயற்பாடுகள் நாடகத்தில் எல்லா இடமும் புரையோடிக் காணப்படுகின்றன.

★ பொருள் வசதியற்ற நிலையிலும் பழமை மறக்காதவர் களாகவும், சிவில்சேவன்ற பதவி கிடைத்தும் சாதாரணமான வழமையான போக்குடன் இருக்கும் வடிவேலுவையும், தாயையும் காட்டும் ஆசிரியர்கள், தமது நிலையிலிருந்து மாறாதவர்களாகவும், பழமையை மறக்காதவர்களாகவும் இருப்பதைக் காட்டுவார்.

★ பொருட் செல்வத்தால் எதனையும் சாதிக்கலாம் என எண்ணுகின்ற கார்த்திகேசுவுக்கும் மகளாருக்கும் பாடம் படிக்கும் வகையில் வடிவேலு வறுமை நிலையில் இருக்கும் இராசம்மாவைத் திருமணம் செய்வது இதற்கு எடுத்துக் காட்டாக அமைவதுடன் கார்த்திகேசுவின் பணச்செருக்கை அடக்கும் ஒரு செயலாகவே அமைகிறது.

★ மேலும் 'பளைய மாதிரி சீவியம் சீவிச்சால் தான் எனக்கு மன ஆறுதலாய் இருக்கும்" என வடிவேலு கூறும் வார்த்தை பொருட் செல்வத்தை மதிக்காது, பழமை போற்றும் பண்பு அவனிடம் காணப்படுகின்றதை எடுத்துக் காட்டுகிறது.

★ இவ்வகையின் அடிப்படையில் பார்க்கும்போது பொருளை மூலக்கருவாக, கருத்தாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்நாடகம் **சொத்தின் அடிப்படையில் மக்களின் போக்கு எவ்வாறு மாற்றம் அடைகிறது** என்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

எனவே இந் நாடகத்துக்குப் **'பொருளோபொருள்'** என்ற தலைப்பு மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம்.

## 12. விபுலாநந்த அடிகளின் தமிழ் உரைநடை

1. **அ. சுவாமி விபுலாநந்தர் பிறந்த ஆண்டு, இறைவனடி சேர்ந்த திகதியைத் தருக.**

**ஆ. அடிகளார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளில் மகத்தானது எதுவெனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

**இ. அடிகளாரின் கல்வித் தகைமை எவ்வாறானது?**

அ. சுவாமி விபுலாநந்தர் 1892ம்ஆண்டிலே பிறந்தார். தனது 55வது வயதிலே, 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 19ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

ஆ. தமிழ் உரைநடைக்கு அடிகளார் ஆற்றிய தொண்டு மகத்தானது எனக் கூறப்பட்டுள்ளது.

இ. அடிகளார் விஞ்ஞான டிப்ளோமா பெற்றவர் பீ. எஸ். சி (லண்டன்) பட்டம் பெற்றவர். ஆசிரியப்பயிற்சியோடு மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் பட்டமும் பெற்றவர்.

2. **சுவாமி விபுலாநந்த அடிகளாரின் பணியானது தமிழ் உரை நடைக்கு எவ்வகையில் உயர்வு பெற்றதாக இருந்துள்ளது எனக் கட்டுரையில் காட்டப் பட்டுள்ளது?**
**(சுவாமி விபுலாநந்தர் உரைநடைக்கு ஆற்றிய பணி எவ்வகையானது என மதிப்பிடுக)**

★ 'ஆங்கில வாணி' 'பூஞ்சோலைக் காவலன்' என்னும் இலக்கிய இன்ப ஓவியங்களை வெளியிட்டார்.

★ 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' என்ற தமிழ்த் திங்கள் இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

★ மதுரைத் தமிழ் சங்கத்தின் திங்கள் இதழான 'செந்தமிழ்' ஏட்டிலும், பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

★ தமிழர்களின் பழம் பெருமைகளைக் கட்டுரைகள் வாயிலாக உலகறியச் செய்தார்.

★ பிறநாட்டு மாந்தரின் நாகரிகத்தினை ஆராய்ந்து தமிழர்களின் நாகரிகத்துடன் ஒப்பு நோக்கினார்.

★ தமிழரின் தலையாய தனிப் பெருமைகளையும், பண்புகளையும் நிலைநாட்டினார் இவை பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார்.

★ அடிகளாரின் உரைநடைப் பணியை விஞ்ஞானத்துறை, ஆங்கில இலக்கிய மொழிபெயர்ப்பு, நாடகம், இசை, பத்திரிகைத் துறை என்ற வகைகளில் நோக்க முடியும்.

★ இவ்வாறு தமிழ் உரைநடைக்குப் பல்வேறு வழிகளில் தொண்டு ஆற்றிய அடிகளாரின் பணி மகத்தானது எனலாம்.

**3. சுவாமி விபுலாநந்த அடிகளின் உரைநடைப்பணியில் அவர் விஞ்ஞானத்துறைக்கு ஆற்றிய பணிகளின் பங்கை மதிப்பிடுக.**

★ அடிகளார் விஞ்ஞானப் பொருள்கள் பற்றிய இனிய கட்டுரைகளை திங்கள் இதழ்களில் வெளியிட்டார்.

★ மக்கள் எளிதில் விளங்கும் எளிய தமிழ் நடையில் விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதினார்.

★ ஆங்கிலத்தில் இருந்த விஞ்ஞானச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை ஆக்கினார். அவற்றைக் '**கலைச் சொற்கள்**' என்ற தலைப்பில் திங்கள் இதழில் வெளியிட்டார்.

★ "**விஞ்ஞான தீபம்**" என்ற நூலை அடிகளார் எழுதினார். இந்நூல் உள்ளே அடங்கிய பகுதிகளை விளக்குவதுடன் தமிழ்த் தாயை வணங்கி நூன்முகத்தை அவர் முடிப்பதையும் காணலாம்.

★ விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழிலே யாவரும் விளங்கும் முறையிலே எழுதிய பெருமை அடிகளாருக்கே உரியதாகும்.

★ **'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'** என்ற பாரதியாரின் கருத்தை மனதில் கொண்டு விஞ்ஞானக் கலையைத் தமிழில் தெளிவாக எழுதினார். மொழி பெயர்ப்புக்கு வேண்டிய கலைச் சொற்களை ஆக்கினார்.

★ காலத்தின் போக்கிற்கு இசையாத தமிழ் நடைகள் சிறிது சிறிதாக வலுவிழக்க, அடிகளாரின் புதிய உரைநடையானது மக்களால் வரவேற்கப்பட்டது.

★ விஞ்ஞான உரைநடைக்கு வேண்டிய கலைச் சொற்களை அருமையான முறையில் ஆராய்ந்தார். அதற்கான சான்றுகளைத் தமிழ் இலக்கியங்களில் இருந்து எடுத்துக் காட்டினார்.
உ - ம்: Mirror - கண்ணாடி, இதனைப் பரிபாடலுள்ளும் **'வான்றுகள் மாசறக் கண்ணடி வயக்கி'** என்றார்.

★ இக் கண்ணாடி என்னும் பொது வழக்கில் **'Glass'** என்பர். வேறு பொருட்களுக்கு ஒரு சொல்லைக் குறியீடு செய்தாளுதல் மலைவுறுத்தலுக்கு இடமளிக்கும். எனவே **'Glass'** என்பதைப் **'படிகம்'** எனக் கொள்வாம் எனக்கூறியது இங்கு மெச்சத்தக்கதே.

★ **'..மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை**
**சொல்லவும் கூடுவதில்லை – அவை**
**சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை..'** என்ற கூற்றைப் பொய்ப்பித்துக் காட்டினார்.

★ **'விஞ்ஞான தீபம்'** என்ற கட்டுரையில் தாவர சாஸ்திரத்துக்கு வேண்டிய சொற்கள் பல பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டில் செறிந்துள்ளன எனக் காட்டினார்.

★ இரசாயன மொழிகளும், மூலிகைகளும் பெயர்களும் வைத்திய நூல்களில் காணப்படுகின்றன எனவும், மனநூலுக்குரிய மொழிகள் சித்தாந்த சாஸ்திரங்களில் காணப்படுகின்றன எனக் காட்டப்படுவது அடிகளாரின் ஆய்வுகள் தமிழ் மொழியின் வளத்தைக் காட்டுவனவாக உள்ளதை எமக்கு இயம்புகின்றன.

★ விஞ்ஞான நூல் உண்மையை நிச்சயிக்கின்ற அளவை நூல். ஆதலால் மொழிபெயர்ப்பு நூலும் திரிபில்லாத பொருள் உள்ளதாக முதனூல் கருத்தோடு ஒத்துப் போவதாக அமைய வேண்டும் என அடிகளார் கூறுவார்.

இவ்வாறாக அடிகளாரின் உரைநடைப் பணியில் விஞ்ஞானத் துறைக்கு ஆற்றிய பணி மகத்தானது எனலாம்.

**4. சுவாமி விபுலாநந்தர் அவர்கள் தமிழ் உரைநடைக்கும் தமிழ்மொழிச் சிறப்புக்கும் ஆற்றிய பணிகளின் மூலமாக அவர் உரைநடைக்கு ஆற்றிய பங்கினை மதிப்பிடுக.**

★ **'ஆங்கில வாணி' 'பூஞ்சோலைக் காவலன்'** என்னும் இலக்கிய இன்ப ஓவியங்களை வெளியிட்டார்.

★ **"ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்"** என்ற தமிழ் திங்கள் வெளியீட்டின் ஆசிரியராக இருந்து பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

★ மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் இதழ் **'செந்தமிழ்'** ஏட்டிலும் அடிகளார் பல கட்டுரைகள் எழுதினார்.

★ தமிழரின் பழம் பெருமைகளைக் கட்டுரைகளில் வெளியிட்டார்.

★ பிறநாட்டு மாந்தரின் நாகரிகத்தினை ஆராய்ந்து தமிழ் நாகரிகத்துடன் ஒப்பு நோக்கினார்.

★ தமிழரின் தலையாய தனிப்பெருமைகள், பண்புகளை அடிகளார் நிலைநாட்டியதோடு இவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டார்.

★ "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றை மெய்ப்படுத்தினார். விஞ்ஞானக் கலையைத் தமிழில் எழுதினார்.

★ காலத்தின் போக்கிற்கு இசையாத தமிழ்மொழி நடைகள் வலுவிழக்கும் காலத்தில், மக்கள் கவரும் உரை நடையை எழுதினார்.

★ விஞ்ஞான உரைநடைக்கு வேண்டிய கலைச் சொற்களை வெளியிட்டார்.

★ பழம் பெருமைமிக்க தமிழ்மொழி நூல்களின் சிறப்பையும், அவற்றிலே பொதிந்துள்ள விஞ்ஞானக் கருத்துக்கள், தாவர சாஸ்த்திர சொற்கள், மூலிகைகளின் பெயர்கள், மனநூலுக்குரிய மொழிகள் என்பன காணப்படுவதைக் காட்டி, தமிழ் நூல்களின் சிறப்பைக் காட்டினார்.

★ "**ஒரு மொழியில் உள்ள நூலினை மற்றொரு மொழியில் பெயர்த்து எழுதுமித்து முதனூல் பொருள். நடை. இயல்பு முதலியவற்றை மாறுபடவிடாது மொழிபெயர்ப்பு நூலினுள்ளும் காட்ட வேண்டும்.**" என்ற கருத்துக்கு மாறுபடாது தனது மொழி பெயர்ப்பைச் செய்தார்.

★ மொழி பெயர்ப்பில் தமிழ்மொழி இல்லாத விடத்தில் பொருத்தமுள்ள பிறமொழிச் சொற்களைக் கையாண்டார்.

★ ஆரிய மொழியில் ஏற்புடையனவற்றைக் கையாளுதல் இழுக்கு ஆகாது என்று கூறினார்..

★ விவேகானந்தரின் சொற்பொழிவு நூல்கள், விவேகானந்த தீபம், சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புகளும் அவரின் மொழிபெயர்ப்பு உரைநடையின் சிறப்பைக் காட்டுவனவாக உள்ளன.

★ அடிகளாரின் உரைநடை இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் அணி செய்கிறது.

★ தமிழ் நாட்டில் சாமிநாதையர், கலியாணசுந்தர முதலியார் போன்றோரும், அரசன் சண்முகனார், இரா. இராகவையங்கார் என்பவர்களும் இலகு தமிழில் ஆராய்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டனர்.
அவர்கள் வரிசையில் அடிகளாரும் தமிழ் உரை நடைக்குத் தொண்டாற்றினார்.

★ அடிகளார் '**மதங்க சூளாமணி**' மூலம் நாடகத் தமிழுக்குத் தொண்டாற்றினார். நாடகத் தமிழிலே தெளிவான எளிய நடையை இனிமை தவழக் கையாண்டார்.
(உ-ம்) **கருதியது எய்திய காதலர் சரிதை.**

★ "**யாழ்நூல்**" மூலம் இசைத் தமிழுக்குப் பெரும்பணி ஆற்றினார்.

★ "**மதங்க சூளாமணி**", "**யாழ்நூல்**" என்பவற்றில் அடிகளார் கையாண்ட உரைநடைகள் தனிச்சிறப்பு வாய்ந்தன.

★ ஆங்கில மகாகவியான '**ஷேக்ஸ்பியரின்**' நாடகப் படைப்புகளை '**மதங்க சூளாமணி**' என்னும் **நாடக இலக்கணம்** கூறும் மங்கள நூலாகச் சிறப்பாக ஆக்கியுள்ளார். ஒழிபியலில் நாடக இலக்கண முடிபுகளைச் சிறப்பாக ஆராய்ந்துள்ளார்.

★ **செந்தமிழ். தமிழ்பொழில். செந்தமிழ்ச் செல்வி. கலைமகள். ஈழகேசரி** ஆகிய பத்திரிகைகளில் அடிகளாரின் கட்டுரைகள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் எளிய நடையில் வந்துள்ளன. இவர் எழுதிய சில பகுதிகளை அரசு உயர்வகுப்புகளுக்கு உரிய நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் நோக்கும் போது அடிகளார் தமிழ் உரைநடைக்குச் சிறந்த தொண்டாற்றி உள்ளார் எனக் ,கூறலாம்.

5. அ. **இருபதாம் நூற்றாண்டிலே தமிழ் உரைநடை வேகமாக முன்னேறியமைக்கு எவையெவை காரணங்களாக அமைந்தன எனக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

ஆ. **சுவாமி விபுலாநந்தர் அவர்களின் காலத்தில் காலத்தின் போக்கிற்கு இசைந்து வராத தமிழ் நடைகளாகக் காணப்பட்டவை எவை எனக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துக.**

இ. **சுவாமி விபுலானந்தர் அவர்களின் சமகாலத்தவர்கள் எனக் கட்டுரையில் காட்டப்பட்ட தமிழ் அறிஞர்கள் யாவர்?**

அ. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடையின் வேகமான வளர்ச்சிக்கு விஞ்ஞானக் கலை வளர்ச்சி, ஆங்கிலக் கல்வி, பொதுமக்களின் விழிப்புணர்ச்சி என்பனவே காரணங்களாகக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது.

ஆ. ★ அடிகளாரின் காலத்தில் வடமொழிச் சொற்களை வேண்டாத அளவுக்குப் புகுத்தி மணிபிரவாள நடையில் எழுதப்பட்டது.

★ வழக்கொழிந்த சொற்களைப் பெய் து பழைய உரையாசிரியர்கள் கையாண்ட உரை நடையைத் தழுவிய உரைநடைகள் இருந்தன.

★ செய்யுளிற் காணப்படும் எதுகை மோனை முதலிய ஓசைப் பண்புகளையுடைய உரைநடையும் காணப்பட்டன.

★ வடசொற் கலவாத தனித்தமிழ் நடையும் காணப்பட்டது.

இவ்வாறான நடைகள் அடிகளாரின் காலத்தில் காணப்பட்டன எனக் கட்டுரையில் காட்டப்பட்டுள்து.

இ. வெள்ளைக்கால் சுப்பிரமணிய முதலியார், நாவலர். ச. சோமசுந்தர பாரதியார், நவநீத கிருஷ்ண பாரதியார் என்பவர்கள் சமகாலத்தவர்களாகவும், நண்பர்களாகவும் சுவாமி விபுலாநந்தர் காலத்தில் வாழ்ந்தனர் எனக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6. பின்வருவோர் தமிழ் நாடக வளர்ச்சிக்கு எவ்வாறான பணிகளை ஆற்றினார்கள் எனக் கட்டுரையில் தரப்பட்டுள்ளது என விளக்குக.**

★ **சாமிநாதையர். கல்யாணசுந்தர முதலியார்.**

பாமரமக்கள் படித்தறிந்து கொள்ளும் வகையில் தம் வாழ்க்கை அனுபவங்களைக், கருத்துக்களை வெளியிட்டனர். கலியாணசுந்தர முதலியார் தெளிவும் இனிமையும் உள்ள ஒரு நடையைக் கைக்கொண்டார். பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

★ **அரசன் சண்முகனார். இரா. இராகவையங்கார்**

பழைய நடையைத் தழுவிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்.

★ **பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. சூரிய நாராயண சாஸ்திரியார் (கி. பி. 1870 – 1903)**

தமிழ் நாடகங்களை இயற்றியவர்களில் முன்னோடிகளாக விளங்குகின்றனர். ஆங்கில நாடக இலக்கிய முறையினைத் தழுவிப் பல நாடக நூல்களை எழுதினர். **சூரிய நாராயண சாஸ்திரியார் "நாடக இலக்கண நூலொன்றையும்"** எழுதினார்.

இவ்வாறாக அறிஞர்களின் பணிகள் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது.

7. அ. விபுலாநந்த அடிகளார் நாடகத் துறைக்கு ஆற்றிய பணி கட்டுரையில் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது.

ஆ. "மதங்கசூளாமணி" என்ற நாடக நூலின் மூன்று இயல்புகளும் எவை?

இ. விபுலாநந்த அடிகளுக்குச் செய்ய வேண்டிய தமிழ் மக்களின் கடமை எதுவெனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்?

அ. ★ "மதங்க சூளாமணி' மூலம் நாடகத் தமிழுக்கும், 'யாழ்நூல்' மூலம் இசைத் தமிழுக்கும் அடிகளார் பெரும் பணிஆற்றியுள்ளார் எனக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது.

★ நாடகத் தமிழிலே தெளிவான எளிய உரைநடையைக் கையாண்டார்.
(உ-ம்) "மதங்க சூளாமணி" – கருதியது எய்திய காதலர் சரிதை.

★ கற்பனைக்கு எட்டாத ஆய்வுகள் பலவற்றை எளிய முறையில் தந்துள்ளார்.

★ "செகசிற்பியரின்" நாடகங்களுக்கு அடிகளார் அழகு தமிழில் அருமையான பெயர்களைச் சூட்டியுள்ளார்.
(உ-ம்) Romeo and Juliet – "இரமியன் சுசீலை சரிதை"
Macbeth – மகபதி சரிதை

★ மதங்க சூளாமணி – உறுப்பியலில் நாடக உறுப்புகள் எவையென ஆராய்ந்தார்.
மதங்க சூளாமணி - எடுத்துக் காட்டியலில் செகசிற்பியரின் பன்னிரண்டு நாடகங்களை ஆராய்வார்.

★ மதங்க சூளாமணி 'ஒழிபியலில்' எஞ்சிய நாடக இலக்கண முடிவுகளை ஆராய்வார்.

★ நாடக உரைநடையின் சிறப்பை இவரின் எடுத்துக் காட்டியலில் காணலாம்.
இவ்வாறு விபுலாநந்த அடிகளார் நாடகத்துறைக்குப் பெரும் பங்காற்றினார் எனக் கூறலாம்.

ஆ. "மதங்க சூளாமணி" – நாடக ஆராய்வு நூலில் உறுப்பியல், எடுத்துக் காட்டியல், ஒழிபியல் என மூன்று இயல்புகள் இடம் பெறுகின்றன.

இ. விபுலாநந்த அடிகளார் ஆற்றிய பணிகளைப் போற்றுவதுடன், அப்பணிகளை மேலும் எடுத்துச் செல்வது தமிழ் மக்களின் கடமையாகும் எனக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**8. விபுலாநந்த அடிகள் விஞ்ஞானக் கலையைத் தமிழிலே தெளிவாக எழுதியமைக்குக் காரணங்களும், அவற்றினால் ஏற்பட்ட பயன்பாடும் பற்றிக் கட்டுரையில் எவ்வாறு தரப்பட்டுள்ளது.**

**(அடிகளார் விஞ்ஞானக் கலையைத் தமிழிலே தெளிவாகத் தர எடுத்த முயற்சிகள் எவை?)**

★ விஞ்ஞானப் பொருள்கள் பற்றிய இனிய கட்டுரைகளை மக்கள் எளிதில் விளங்குமாறு எளிய தமிழ் நடையில் எழுதுதல்.

★ விஞ்ஞானச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொற்களை ஆக்குதல், இதனைக் "**கலைச் சொற்கள்**" என்ற பெயரில் வெளியிட்டார்.

★ பள்ளிக்கூடச் சிறுவர்களுக்குப் பயன்படக் கூடியதாக எழுதுதல்.

★ கல்லூரிச் சட்டத்திற்கு இசைய அடக்க வேண்டிய பொருள் அனைத்தையும் அடக்கி நிற்கும் '**ஸயன்ஸ்**' தமிழ் மாதுக்கு இல்லாத குறையை நீக்கச் செய்தார்.

★ விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழிலே யாவரும் விளங்கும் முறையில் எழுதினார்.

★ காலத்திற்கு ஏற்ற நடையைக் கையாண்டார்.

★ விஞ்ஞான உரைநடைக்கு வேண்டிய கலைச் சொற்களை ஆராய்ந்தமை, சான்று கூறியமை என்பன போற்றத்தக்கனவே.

★ மொழிபெயர்ப்பை, முதனூலோடு கருத்து மாறுபடாது இருக்கச் செய்தார்.

இவ்வாறான காரணங்களாலும், செயல்களினாலும் விஞ்ஞானக் கலையைத் தமிழில் தெளிவாகத் தர அடிகளார் முன்வந்தார்.

## 13. பாரச் சிலுவை

**1. அ. ஒரு தொழுநோய்க்காரன் விட்டெறிந்த பணம் எதற்கு உவமிக்கப்பட்டுள்ளது?**

**ஆ. எப்போது கொல்லவரும் பாம்புகளும், புலிகளும் பெருங்கண்ணீர் கொட்டின?**

அ. இயேசு பிரானின் கைகளில் எட்டுப்பேர் சுமக்கின்ற பெருஞ்சிலுவையை எடுத்து வைத்தமை, தொழுநோய்க்காரன் விட்டெறிந்த பணத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

ஆ. ஒன்றுமே அறியாத இயேசுபிரான் தோள்களிலே சிலுவையைச் சுமந்தபோது கொல்லவரும் பாம்புகளும், புலிகளும் கூடப் பெருங்கண்ணீர் கொட்டி அழுதன எனக் கூறப்பட்டுள்ளது.

**2. "பாரச் சிலுவை" என்ற கவிதையில் எப்போது "ஞாலமெல்லாம் ஒரு பொழுது நடுங்கிற்று" எனக் கூறப்பட்டுள்ளது?**

வானகமும், வையகமும் கூடுவதைக் குறிப்பது போன்று சிலுவையை ஏந்திக்கொண்டும். மானம் என்று கூறப்படுகின்ற உயர்ந்த பண்பினை மனிதகுலம் காண்பதற்கு மன்ம் கொண்டு, தானத்துடன் தவமும் பெருகிக் கொள்ள முள்ளினாலே ஆக்கப்பட்ட முடியினைத்

தலையில் சூடிக் கொண்டு, ஞானமகனாகிய இயேசுபிரான் நின்றபோது உலகமெலாம் ஒரு பொழுது நடுங்கியது எனப் பாரச்சிலுவை எனும் கவிதையில் கூறப்பட்டுள்ளது.

**3. அ. அவமானச் சின்னமாகிய சிலுவையை எதற்காக இயேசு பிரானின் தோளில் ஏற்றி வைத்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.**

**ஆ. அவமானச் சின்னமாகிய சிலுவையை இயேசுபிரான் ஏன் சுமந்தார் எனக் கூறப்பட்டுள்ளது.**

அ. அவமானம் மிக்கவர்கள் தங்களது மானத்தை இழந்து கொள்வதற்காக, அவமானச் சின்னமான சிலுவையை இயேசுபிரானின் தோளில் ஏற்றி வைத்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆ. ★ புவியில் உள்ள மக்களின் மானம் காப்பதற்காகச் சிலுவையை முத்தமிட்டார் தூயவராகிய இயேசுபிரான். எதிர்காலத்தில் உவமானமாக எடுத்துக் காட்டுவதற்குரிய செயலினைப் புரிவதற்கு எண்ணம் கொண்டு சிலுவையைச் சுமந்தார். எனக் கூறப்பட்டுள்ளது.

★ மேலும், எத்தனையோ பாவிகளின் பாவத்தைத் தன் தோளில் ஏற்றுக் கொள்வதற்காக உத்தமராகிய இயேசுபிரான் சிலுவையில் உடலை வைத்தும், அதன் மீது உள்ளமும் வைத்தார் எனவும் கூறப்பட்டுள்ளது. எனவே தான் இயேசுபிரான் சிலுவையைச் சுமந்தார்.

**4. இயேசுபிரான் பாரச் சிலுவையைச் சுமந்தபோது பட்டபாடுகள் 'பாரச்சிலுவை' என்ற பகுதியில் எவ்வாறு காட்டப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுக.**

★ கத்தியின் முனை போன்று கூரிய வேலினைக் கொண்ட கொடியவர்கள் பின் தொடர்ந்து செல்லவும், அறிவுடையோர்கள்

அவர் படும் துன்பத்தைச் சகிக்க முடியாது கண்கலங்கவும் பாரச்சிலுவையைச் சுமந்து இயேசுபிரான் கால் நடையாகச் சென்றார்.

★ வாய்மையின் செல்வராகிய இயேசுபிரான் பாரச் சிலுவையைச் சுமந்து கொண்டு தள்ளாடும் உடலுடையவராகத் தவழ்ந்து சென்றார்.

இயேசு பிரானுடைய உடம்பானது சுமக்க முடியாதும், நடக்க முடியாதும் தள்ளாட்டம் கொள்ளவும், வானில் இருந்து பொழிகின்ற மழைபோல இயேசுபிரானின் உடலில் இருந்து வியர்வை ஆறுபோல் பெருகவும், தாங்கொணாது மண்ணிலே சாய்வார்.

★ இவ்வாறு சாயும் வள்ளலாகிய இயேசுபிரானைச் சாட்டையினால் கொடியவர்கள் அடிப்பார்கள். இவ் அடிகளைத் தாங்காது வள்ளல் இயேசு பிரான் மறுபடியும் எழும்பி நிற்பார்.

★ தலையிலே பூட்டப்பட்டுள்ள முள்ளுகளினால் ஆக்கப்பட்ட முடியினால் ஏற்படுகின்ற துன்பமும் ஒருங்கே இயேசு பிரானைத் துன்பப்படுத்துகின்றது.

★ இவ்வாறு துன்பப்பட்டபோதும் தனது எண்ணத்தில் இருந்து மாறுபாடில்லாது புவியில் உள்ள மக்களின் மானம் காக்க, பாவம் போக்க, நீண்ட சிலுவையைச் சுமந்தபடி, அசைந்து அசைந்து ஆடியாடி நடக்கின்றார் அவர்.

★ இவ்வாறு இயேசுபிரான் தாங்கமுடியாத துன்பத்தால் இப் பூமியிலே மூன்று முறை வீழ்ந்து, வீழ்ந்து தனக்கு ஏற்பட்டுள்ள சோதனையைப் பொறுத்து மன்னித்தார். ஆனால் அச் சிலுவையைச் சுமக்க அவரது உடலால் முடியவில்லை. அவர் தாங்க முடியாது சோர்கிறார்.

★ இவ்வாறு சோரும் இயேசுபிரான் தலைவனாகிய ஆண்டவனையே மனத்தில் எண்ணி இவ்வுலகத்தவரை மன்னிப்பதற்காகக், காப்பாற்ற நடந்து செல்கின்றார்.

இவ்வாறு வேதனையும், சோதனையும் உடையவராக நல்வழியைக் காட்டிய இயேசுபிரான் சிலுவையைச் சுமந்து சென்றார். இவ்வாறு சென்றபோது அவர் பட்ட பாடுகள் பாரச் சிலுவையில் இப்படிக் காட்டப்பட்டுள்ளது.

**5. இயேசுபிரான் சிலுவையில் உடல் வைத்து, உள்ளம் வைத்தது எதற்காக எனக் காட்டப்பட்டுள்ளது?**

எத்தனையோ பாவிகளின் பாவத்தைத் தன் தோளில் ஏற்றுக் கொண்டு, அவர்களின் பாவத்தை மன்னித்து அருளுவதற்காக இயேசுபிரான் சிலுவையில் உடல் வைத்து, அதன் மீது உள்ளம் வைத்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

# 14. காப்பு

**1. அ. 'காப்பு' என்ற சிறுகதையில் தமிழர் நாகரிகத்தின் குட்டிப் பெண்ணல்லவா? அவள் என இங்கு ஆசிரியர் எதனைக் கிண்டல் செய்கிறார்.**

**ஆ. பூமணிக்குக் காப்பு வாங்க சண்முகத்துக்குப் பணம் எவ்வாறு கிடைத்தது.**

**இ. அறுபது சதம் அதிகமாக உழைக்கச் சண்முகம் கூறும் வழி என்ன?**

**ஈ. காப்பை போட்டுக் கொண்ட பூமணி கைகளை எவ்வாறு வைத்து மகிழ்ந்தாள் எனக் காட்டப்பட்டுள்ளது.**

அ. தமிழர் நாகரிகத்தில் நகை ஆசை இல்லாமல் போகாது. தமிழர் நகை போடுவது நாகரிகம் என்று எண்ணுபவர்கள். எனவே நகைபோட ஆசைப்படும் பூமணி மூலம் இவ்வாறு தமிழர் நாகரிகத்தைக் கிண்டல் செய்கிறார் ஆசிரியர்.

ஆ. சுருட்டுக் கொட்டில் முதலாளியிடம் நூற்றைம்பது ரூபா கடன் வாங்கினான். இதனால் பணம் கிடைத்தது.

இ. இனிமேல் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரவில்லை. அந்த ஒரு மணித்தியாலத்தில் ஐம்பது, அறுபது சுருட்டு சுருட்டினால் ஒரு நாளைக்கு அறுபது சதம் அதிகமாக உழைக்கலாம் எனச் சண்முகம் உழைக்க வழி கூறினான்.

ஈ. "என்ரை அப்பா வாங்கித் தந்தவர்" கைகளைப் பரத நாட்டிய கமல முத்திரையில் பிடித்தவாறே காப்புகளைக் காட்டிப் பூமணி புழுகிக் கொண்டிருந்தாள் எனக் காட்டப்பட்டுள்ளது.

**2. அ. பூமணிக்குத் 'தங்கக் காப்பு' ஆசையை மனதில் விதைத்தது எது?**

**ஆ. சண்முகத்தின் உள்ளத் தீயில் எண்ணெய் வார்க்கின்ற இனத்தவர்களின் பேச்சுக்களாக இருந்தவை எவையெனக் காப்பு சிறுகதையில் காட்டப்பட்டுள்ளது.?**

அ. மற்றைய பிள்ளைகளின் கைகளில் உள்ள தங்கம் இல்லாமலில்லை. அவர்களின் கழுத்துக்களில் கூட சின்னஞ்சிறு சங்கிலிகள். இவைதான் ஒன்றுமறியாத பூமணிக்குத் தங்கக் காப்பு ஆசையை மனதில் விதைத்தன.

ஆ. "பாரென் நித்திரையிலே படுத்திருக்கிறது போலை தானே கிடக்கிறாள்"

"என்னக்கா. மூன்று நாள் காய்ச்சல் தானே...."

"எங்களுக்கே மனம் பதறுகுது எண்டால். பெத்தவளுக்கு எப்படி இருக்கும்? ..!'

இவ்வாறான பேச்சுக்கள் சண்முகத்தின் உள்ளத்தீயில் எண்ணெய் வார்க்கின்ற பேச்சுகளாக அமைந்தன.

3. அ. **பரிகாரி தம்பிப்பிள்ளை பூமணியைப் பரிசோதித்தது எவ்வாறு கூறப்பட்டுள்ளது.**

ஆ. **பரிகாரி தம்பிப்பிள்ளை கூறிய ஆலோசனையும் அனுமானமும் என்ன?**

அ. கழுத்தை வருடி, முதுகைத் தடவிக் குழந்தையின் கையைப் பிடித்து மணிக்கட்டு நாடியின் மேல் தனது வலது விரல்களை வைத்து நாதஸ்வர மேதையைப் போல் தொட்டும் தொடாமலும் மாற்றி மாற்றி விரலடித்து...
எனப் பரிகாரி சோதித்த விதம் கூறப்பட்டுள்ளது.

அ. **"கழுத்தில் இரு வாய்வுக் கட்டிகள்"** நான்கு சின்ன வார்த்தைகளில் விளக்கமாக **'டயக்னோசிஸ்'** கை மருந்துக்கு ஆலோசனையும் அனுமானமும் கையோடையே கூறப்பட்டது.

4. **காப்புகளைக் கழற்ற மயானம் சென்ற சண்முகம் காப்புகளைக் கழற்றாது விட்டது ஏன் எனச் சிறுகதையில் கூறப்பட்டுள்ளது?**

சண்முகத்தின் கண்ணீர்த் திரைகளின் ஊடாகச் சவம் அல்ல. அவன் மகள் பூமணிதான் தெரிகிறாள். **"கைகளை மடக்கிக் காப்புகளை நெஞ்சோடேயே வைத்து..."** அந்தக் கைகளை மெல்லத் தொடுகிறான். "............" கைகளை வெடுக்கென உதறி இழுத்துக் கொள்கின்றாள். அவள், **அப்பா வாங்கிக் கொடுத்த காப்புகளைத் தன் நெஞ்சோடேயே வைத்துக்** கிடக்கிறாள். கைகளைத் தொடுகிறான். கைகளை இழுப்பது போல் உணர்வு. **அப்பா காப்பு வாங்கித் தந்தவர் களவெடுப்பாரா?** என எண்ணுகிறான். இதனை உயிரோட்டமாக பூமணியிடம் முன்னர் நிகழ்வது போல் மனத் திரையில் காண்கிறான். எனவே காப்புகளைச் சண்முகம் கழற்றாது விடுகிறான்.

எனக் காப்புக் கழற்றாமல் விட்டதற்கு ஆசிரியர் காரணம் கூறுகிறார்.

**5. 'காப்பு' என்னும் தலைப்பு இச் சிறுகதைக்கு எவ்வகையில் பொருத்தமாக அமைகிறது என மதிப்பிடுக.**

★ காப்பு வேண்டிக் கொடுக்கும் முன்னரே காப்புப் போட்ட கைகளை மனத்திரையிலே காண்கிறான் சண்முகம் எனக் கதையின் ஆரம்பத்தில் ஆசிரியர் கூறுவார்.

★ சண்முகம் காப்பைப் போடமுன் பூமணியின் கைகளைத் தொட்டபோது 'களவெடுக்கிறாய்..ய்..ய்'' கோபச் சிணுங்கல் என பூமணியின் நிலையைக் காட்டுவார்.

★ பூமணியின் ஆசையை நிறைவேற்றக் காப்பு வாங்கச் சுருட்டுக் கொட்டிலில் கடன் வாங்கிய நிலையும், கடன் அடைக்க மத்தியானச் சாப்பாட்டுக்கு வராது பாடுபடும் சண்முகத்தையும் காட்டுவார்.

★ பூமணிக்குத் '**தங்கக் காப்பு**' ஆசையைத் தூண்டிய நிகழ்வுகளைக் காட்டுவார்.

★ இறந்த பின்பும் பூமணி "**கைகளை மடக்கிக் காப்புகளை நெஞ்சோடேயே வைத்து**'' எனக் கூறிச் செல்வார்.

★ இறந்த பின்பு காப்பைக் கழற்ற நினைக்கின்ற மார்க்கண்டுவின் எண்ணத்தைக் கதை நிகழ்வுகளின் ஊடே ஆசிரியர் காட்டுகிறார்.

★ காப்பைக் கழற்றுவதற்காகத் திரும்பவும் குழி தோண்டுவதைக் காட்டும் ஆசிரியர், சண்முகத்தின் கண்ணீர்த் திரைகளின் ஊடாகச் சவம் அல்ல, அவள் மகள் பூமணியை உயிரோட்டமாகக் காட்டுவார்.

★ மேலும் '**கைகளை மடக்கிக் காப்புகளை நெஞ்சோடேயே வைத்து...**' என உயிரோட்டமாக நிகழ்வுகளை முன்வைக்க ஆசிரியர் தவறவில்லை.

★ எனவே, குஞ்சு. **அப்பா உனக்குக் காப்பு வாங்கித் தந்தவர் களவெடுப்பாரா?** எனத் தன் கைகளை இழுத்துக் கூறும் சண்முகத்தை எமது மனத் திரைகளில் நிறுத்துவார்.

★ இறந்த பின்பு காப்பைக் கழற்றும் வேகமும் இறந்த குழந்தையை விடக் காப்புப் பெறும் முக்கியத்துவமும், செலாவணி மதிப்பும் பற்றி நையாண்டிக் கூற்றுகளுடன் நிகழ்வுகளைக் கதையின் ஊடே எல்லா இடங்களிலும் ஆசிரியர் கூறுதல்.

★ காப்பு என்ற ஒரு தலைப்பைக் கொண்டு கதைகளைப் பின்னிச் செல்கின்ற தன்மையைக் காணலாம்.

★ கதையின் எவ்விடங்களிலும் காப்பினைத் தொடர்புபடுத்திக் கொண்டே செல்லல் இங்கு குறிப்பிடத்தக்கது.
காப்பு வேண்ட வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிய சண்முகத்தைக் காட்டும் ஆசிரியர், அக் காப்புக்கே உரிய மகளை இழந்து நிற்கும் அவல நிலையை எமக்குக் காட்டுகின்றார். இவ்வாறு பல்வேறு இடங்களிலும் கதை கூறுகின்ற "காப்பு" என்ற ஆபரணம் இச் சிறுகதைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது எனக் கூறிக் கொள்ளலாம்.

**6. பின்வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறுக.**
**யாரால், யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.**

(அ) "குஞ்சுன்ரை காப்பை நான் களவெடுப்பேனா?"

யாரால்: சண்முகத்தால்
யாருக்கு : பூமணிக்கு
சந்தர்ப்பம் : நித்திரையில் கிடந்த மகளாரின் கைகளைச் சண்முகம் செல்லமாகத் தொட்டபோது களவெடுக்கிறாய் என மகள் சிணுங்கியபோது கூறியது.

(ஆ) **"இந்தாங்க நீங்க அவளுக்கு அதிகம் செல்லம் கொடுக்கிறீர்கள்"**

யாரால் : சண்முகத்தின் மனைவியால்
யாருக்கு : சண்முகத்துக்கு
சந்தர்ப்பம் : சண்முகம் பூமணிக்குக் காப்பு வாங்கிப் போட்ட அன்று காலையில் சண்முகத்தைக் கண்டித்தபோது கூறப்பட்டது.

(இ) **"எங்களுக்கே மனம் பதறுகுது எண்டால் பெத்தவளுக்கு எப்படியிருக்கும்"**

யாரால் : இனத்தவர்களுள் ஒருத்தியால்
யாருக்கு : இனத்தவர்களுக்கு
சந்தர்ப்பம் : என்னக்கா மூன்று நாள் காய்ச்சல் தானே எனக் கூறி தனது மூக்கைத் துடைத்து முந்தானையில் துடைத்தபோது இனத்தவரில் ஒருவரால் கூறியது.

(ஈ) **"மச்சான் சுடலையில் கழற்றலாம்"**

யாரால் : சண்முகத்தால்
யாருக்கு : நல்லம்மாவின் தமையன் மார்க்கண்டுவிற்கு.
சந்தர்ப்பம் : இறந்த பூமணியின் கைகளில் கிடந்த காப்பைக் கழற்ற மார்க்கண்டு இறந்த பூமணியின் கையை விலக்கிய போது.

(உ) **"என்ன கதைக்கிறயள். காப்பைக் கழற்ற வில்லையோ"**

யாரால் : நல்லம்மாவால்
யாருக்கு : மார்க்கண்டுவுக்கு
சந்தர்ப்பம் : மச்சான் சுடலையிலே காப்பைக் கழற்ற மறந்து போனோம் என மார்க்கண்டு ஏங்கியபோது கேட்கப்பட்டது.

# 15. தமிழ் சினிமாவும் இலக்கியமும்

1. அ. "கலைகளின் கடைக்குட்டி எனத்தகும்" எனக் கட்டுரையில் குறிப்பிடப்படுவது யாது? இதன் வளர்ச்சி எக்கால அளவு கொண்டது?

   தமிழகக் கதையினைச் சித்திரிக்கும் முதல் திரைப்படமாகக் கொள்ளப்படுவது எது?

   இ. சினிமாக் கலையினால் பெறும் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

   ஈ. இந்தியாவின் பேசும் படம் எப்போது வெளியானது அது எது?

அ. கலைகளின் கடைக்குட்டி எனத்தகும் எனக் கூறப்படுவது சினிமா அல்லது திரைப்படத்தைக் குறிக்கிறது. இது சுமார் எண்பது ஆண்டு வளர்ச்சியினைக் கண்டதாகும்.

ஆ. 1919 இல் வெளிவந்த **"கீசகன் வதை"** தமிழிலான முதற் கதைகூறும் திரைப்படமாகக் கொள்ளப்படுகிறது.

இ. ★ சினிமாக்கலை வசதியும் வாய்ப்பும் மிகுந்த அற்புத சாதனமாகும்.

★ மக்களுடைய அனுபவங்களைச் செம்மைப்படுத்த உதவும்.

★ மக்களின் உணர்வுகளை இதப்படுத்தவும், அறிவினை ஆழமுடையதா க்கவும் அதிக அளவில் உதவும். இவ்வாறான பெருமைகளை, பயன்களைச் சினிமாக்கலை பெறும்.

ஈ. 1931 இல் வெளியான **"ஆலம் ஆராவே"** இந்தியாவின் முதலாவது பேசும் படமாகும்.

**2. அ. இலங்கையில் சினிமாக்கலை எவ்வாறு தோற்றம் பெறுகிறது எனக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?**

**ஆ. சினிமாக்கலை பெறும் பெருமைகள் மூன்றினைத் தருக.**

**இ. சினிமாவின் பயன்பாடும், செல்வாக்கும் பற்றி ஆசிரியர் எவ்வாறெல்லாம் அளவளாவுகிறார் என்பதை மதிப்பிடுக?**

அ. இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம்மிடையே திடீரெனக் கட்டியங் கூறாமல் அறிமுகமானது சினிமாக் கலையாகும்.

ஆ. ★ சினிமாவைப் பட்டி தொட்டிகள் தோறும் பரப்பி, விரைவாகப் பொருள் சேர்க்க உதவும் உகந்த துறையாகச் சினிமாத்துறையைக் கொள்ளலாம்.

★ நாட்டின் அரசியலையே பாதிக்கக்கூடிய துறையாகும்.

★ மக்களால் ஏற்றுக் கொள்ளும் கவர்ச்சி மிகுந்த துறை. என்ற பெருமைகள் கொண்டது சினிமாத் துறையாகும்.

இ. ★ இன்று கூடிய செல்வாக்கும் தாக்கமும் உடைய கலை சினிமாவே எனக் கூறப்பட்டுள்ளது.

★ திரைப்படத்தை அர்த்தமும், அவசியமும் மிகுந்த ஒன்றாகக் கொள்ளும் ஒரு பண்பாட்டில் வளர்ந்த தலை முறையினை இன்று நாம் காண்கின்றோம்.

★ தொழில்நுட்ப ஈடுபாடு மிகுந்த இன்றைய நாகரிகத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின் பெறுபேறான சினிமாவுக்குத் தனிமதிப்பு உண்டு.

★ புறத்தோற்ற விபரங்களையும், நுணுக்கமான இயக்கங்கள் செயற்பாடுகளையும் கட்புலனாக நேருக்குநேர் காட்டும் சக்தி சினிமாவுக்கு அற்புதமாக வாய்த்திருக்கிறது.

★ இன்று நம்மை வெகுவாகப் பாதிக்கும் விஷயங்களைத் தாமதமின்றி வேகமாகக் காட்டவல்லது சினிமா ஆகும்.

★ உலகு சுருங்கி வரும் இக்காலத்தில் பிரதேசக் காட்சிகளையும், சம்பவங்களையும், அனுபவங்களையும் மட்டுமன்றி எம்மவர் கதைகள், கனவுகளையும் ஏககாலத்தில் ஏராளமானவர்கள் பல்வேறு திசைகளிலும் இருந்து பார்க்கத் தருவது சினிமாவின் மற்றொரு மயக்கும் வல்லமையாகும்.

★ கலைகளில் இளமைத் துடிப்பு மிகுந்தது. புதுமை தவழுவது சினிமாவாகும்.

★ இவ்வாறு சினிமாவின் பயன்பாடும் செல்வாக்கும் பற்றி ஆசிரியர் கூறுகின்றார்.

**3. அ. சினிமா மக்களை மயக்க வல்லது என்பதற்கு இரு காரணங்கள் தருக.**

**ஆ. இலக்கியத்தையும், சினிமாவையும் எவ்வாறெல்லாம் ஒப்பிட்டு ஆசிரியர் காட்டுகிறார்?**

அ. ★ புறத்தோற்ற விபரங்களையும் , நுணுக்கமான இயக்கங்கள் செயற்பாடுகளையும் கட்புலனாக நேருக்கு நேர் காட்டும் சக்தி சினிமாவுக்கு அற்புதமாக வாய்த்துள்ளது.

★ இன்று நம்மை வெகுவாகப் பாதிக்கும் விஷயங்களைத் தாமதமின்றி வேகமாகத் காட்டவல்லது சினிமா. உலகு சுருங்கிவரும் இக்காலத்தில் பிறதேசக் காட்சிகளையும் சம்பவங்களையும், அனுபவங்களையும் மட்டுமின்றி எம்மவர் கதைகள், கனவுகளையும் ஏககாலத்தில் ஏராளமானவர்கள் பல்வேறு திசைகளிலும் இருந்து பார்க்கத் தருவது சினிமா.

சினிமா மக்களை மயக்க வல்லது என்பதற்கான காரணங்களை இவ்வாறு கூறலாம்.

ஆ. ★ இலக்கியம் வேறு, சினிமா வேறு ஆயினும் சினிமாவின் நயத்தை இலக்கியத்திலும், இலக்கியத்தின் நயத்தைச் சினிமாவிலும் காணமுடியாது என்றில்லை.

★ இரண்டையும் மேலெழுந்த வாரியாக ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இலக்கியம் பழையது. சினிமா புதியது.

★ இலக்கியம் தனியொருவரின் கற்பனைத் திறனிலும் முயற்சியிலும் உருவாகுவது. சினிமா கூட்டு முயற்சியால் ஆவது. பலபேர் ஈடுபடும் சினிமாவில் பலர் ஒன்று கூடுமிடத்து நன்மையாகவும் அமையலாம். ஆளுக்கொரு திக்கில் இழுக்கும் ஆபத்தும் விளையலாம்.

★ இலக்கியத்தையும், சினிமாவையும் கலையாக மட்டும் கொள்பவர் உண்டு. கருத்துக்களைப் பரப்பும் ஊடகமாகக் கொள்வாரும் உண்டு. தொழிலாகக் கொள்வாரும் உண்டு. வியாபாரமாகக் கொள்வாரும் உண்டு.

★ சினிமாத்துறையைத் தொழிலாகவும், வியாபாரமாகவும் கொள்வோரின் தேவைகளும், ஆதிக்கமுமே அதனை வெகுவாகப் பாதிக்கின்றது.

★ இலக்கியத்தைப் படிக்கவோ, கேட்டு விளங்கவோ கூடியவர்கள் தம் அகக் கண்களாலும், அனுபவ நாளங்களாலும் சுவைக்கலாம்.

★ சினிமாவைப் படிப்பறிவற்றவரும் கட்புலனாகக் கண்டு அதிக பிரயத்தனமின்றி ரசிக்கலாம்.

★ உண்மையில் நடப்பது போன்ற மருட்சி பன்மடங்கு கொண்டது சினிமாவாகும்.

★ இலக்கிய கர்த்தா இலக்கியங்களைப் புரிந்து கொள்ளத் தக்கவர்களை மனத்திற் கொண்டு இலக்கியம் படைக்கின்றனர்.

★ சினிமாத் தயாரிப்பாளன் பலதரப்பட்ட பல்வேறு சுவைப்பட்ட வெகுசன ரசனையைக் கருத்தில் கொள்கிறான்.

★ இலக்கியத்தில் கதாநாயகன் ஓங்கியமைவது சிருஷ்டிகர்த் தாவின் திறனாலேயே ஆகும்.

★ சினிமாவில் பல திரைப்படங்களில் தயாரிப்பாளர், இயக்குனர், கதாசிரியர் முதலிய அனைவரையுமே கதாநாயகர்கள் அமுக்கி விடுவதுண்டு.

★ இலக்கிய வெளியீட்டுக்குக் குறைந்தளவு மூலதனம் போதும். சினிமாவுக்குப் பெரும் அளவு மூலதனம் வேண்டும்.

★ இலக்கியத் துறையினர் இம் மூலதனப் பிரச்சினைக் குறைவால் சுயத்துவத்தையும், ஆத்ம பலத்தையும் குறிக்கோளின் மீதான நம்பிக்கையையும் இழக்காது விளங்குகின்றனர். ஆனால் சினிமாத்துறையினர் இதனை இழந்து நலிவதற்கு அதிக அளவிலான மூலதனப் பிரச்சினையே காரணமாகும்.

இவ்வாறாகக் கட்டுரை ஆசிரியர் இலக்கியத்தையும், சினிமாவையும் ஒப்பிடுகின்றார் எனலாம்.

4. அ. **சினிமாத்துறையின் பாதிப்பினைக் கட்டுரை ஆசிரியர் எவ்வாறு கட்டுரையில் காட்டுகின்றார்?**

ஆ. **சினிமாவையும், இலக்கியத்தையும் எவ்வாறு மனிதன் பயன்படும் முறையில் மாற்றி அமைக்கலாம் என ஆசிரியர் யோசனை கூறுகின்றார்?**

இ. **தமிழ் இலக்கியத்தைத், தமிழ்ச் சினிமா அண்மிக்கும் காலம் அண்மையில் இருப்பதாகத் தெரியவில்லை என எதனடிப்படையில் ஆசிரியர் கூறுகிறார் என விளக்குக.**

அ. புதுமைகள் என்று சொல்லிக் கொண்டு சமுதாய மனித ஒழுக்கப் பிறழ்வுகளைச் சித்திரிக்க எத்தனிக்கும் சினிமாக்களும், சமுதாயப் பரிவும், பார்வையும் அற்றவிடத்து, வருவாயைப் பெருக்க உபாயம் உரைக்கும் புதியதொரு வாய்பாட்டுக்கே வழிவகுப்பது கண்கூடு. இவ்வாறாகச் சினிமாத்துறை பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஆ. மனிதனையும், அவனது வாழ்வையும் புரிந்து கொள்ளவும், வளம்படுத்தவும் மனித ஜாதியின் தன்மையையும் போக்கையும் மாற்றியமைக்கவும் இலக்கியத்தையும், சினிமாவையும் கையாள முடியும் என ஆசிரியர் யோசனை கூறுவார்.

இ. பெறுமதி வாய்ந்த செய்திகளைச் சிறுவர்களுக்கு உணர்த்தச் சினிமாவைப் போல வேறெந்தத் துறையாலும் இயலாது என்பார், இலக்கியச் சிறப்புடைய கதைகளைச் சினிமாவாக்குவது எல்லோருக்கும் நன்மை தருவதாகும் எனச் சினிமாத்துறையின் வாய்ப்புகள் பற்றி விசாரித்து ஆராய்ந்தவர்கள் கூறியுள்ளனர். எனினும் எவ்வகையிலும் தமிழ் இலக்கியத்தைத் தமிழ்ச் சினிமா அண்மிக்கும் காலம் அண்மையில் இருப்பதாகத் தெரியவில்லை என ஆசிரியர் கூறுவார்.

**5. இந்தியாவில் வங்காளத்திலும், மலையாளத்திலும் இலக்கியங்கள் திரைப் படங்களாக்கப்பட்டன. இதற்கு உதாரணங்கள் தருக.**

★ 1936ல் சரச்சந்திரரின் "தேவதாஸ்" சிறந்த வங்காள சினிமாவாயிற்று.

★ சத்யஜித் ரேயின் பதர்பஞ்சலி, அபராஜிதோ, அபுசன்சார் ஆகியனவும் இலக்கியத்தின் அடியாக எழுந்த சினிமாக்களே.

★ மலையாளத்தில் வந்த இருட்டுண்டே ஆத்மா. செம்மீன். நகரமே நன்னி முதலிய சிறந்த சினிமாக்கள் சிறந்த இலக்கியங்களே ஆகும்.

**6. அ. சினிமாவுக்கும், இலக்கியத்துக்கும் இடையில் உறவு வலுப்பெற யாது செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?**

**ஆ. இலக்கியத்தைச், சினிமாவாக்க எந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டும் எனவும், எதனால் இது சாத்தியமாகும் எனவும் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?**

அ. சினிமாத் தாயரிப்பாளர் சமூக நடப்பியலோடு நெருங்கி வருவதும், தமக்குப் பிடித்த இலக்கியங்களை ஜீவத் துடிப்புடன் காண விளையும் கற்றறிந்த பார்வையாளரின் மதிப்பினையும் ஆதரவையும் பெறுவதும் சாத்தியமாகும் எனலாம். இதன் மூலம் சினிமாவுக்கும், இலக்கியத்துக்கும் இடையில் உறவை வலுப்படுத்தலாம்.

ஆ. ★ இலக்கியத்தைச் சினிமாவாகத் தயாரிக்க முனைபவர் சவால் ஒன்றினை ஏற்கத் தயாராக வேண்டும். சினிமாவுக்கு ஏற்ற கதையினைத் தேர்ந்தெடுப்பதும் இலேசானதல்ல இதுவே எதிர்நோக்கும் சவாலாகும்.

★ சினிமா படிமங்களைக் கையாண்டு கட்புலனாகச் சித்திரிப்பது ஆகும்.

★ இலக்கியம் வார்த்தைகள் வாயிலாக அறிவு அனுபவத்திற்கு விருந்தளிப்பது எனலாம்.

★ இவை இரண்டும் இணைவது அபூர்வம் என்பர் சிலர். அவை ஒன்றையொன்று சிறப்பிப்பதாக அமையலாம்.

★ சினிமாவைச் செவ்வனே நயப்பதற்கு இலக்கியப் பயிற்சி உதவலாம் என்பர்.

★ இலக்கியங்களின் புறத்தோற்றக் காட்சி, உருவகங்கள் மெருகுபெறச் சினிமாப் பயிற்சி உதவலாம்.
உ-ம் (புதுமைப்பித்தன் - துன்பக்கேணி)

எனவே இலக்கியத்தைச் சினிமாவாக்க ஏற்படும் சவாலுக்கு முகம் கொடுத்து அவற்றைப் சினிமாப்பயிற்சி, இலக்கியப் பயிற்சி மூலம் சாத்தியமாக்கலாம் என ஆசிரியர் கூறுவார்.

7. **சிறந்தோர் இலக்கியம், சிறந்த சினிமாவாக வேண்டுமாயின் யாது செய்ய வேண்டும் எனக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**

★ ஓர் சிறந்த இலக்கியம் சிறந்த சினிமாவாக வேண்டுமாயின் அவ் இலக்கியத்தின் உட்பொருளைக் கிரகித்து வெளியிடத்தக்க ஆற்றல் மிக்க சினிமாத் தயாரிப்பாளனும், நயக்கும் மனப்பாங்குடைய பார்வையாளரும் தேவை. இவ் இரு துறை-களுக்கும் இடையிலான முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். உறவு பேணப்படல் வேண்டும்.

★ வெகுஜன நுகர்வுக்குரிய விற்பனைப் பண்டங்களை உற்பத்தி செய்வனவாய்க் கருதும் நிலையும் நீக்கப்பட வேண்டும்.

★ சினிமாக் கலையினைக் கண்டு வளர்த்தவர்கள் அதனைப் பயன்மிகு கலையாக வளர்க்க விரும்பினர். ஆனால் வியாபாரச் சாத்தியக் கூறுகள் பற்றிக் கவனத்திற் கொள்ளவில்லை.
எனவே இவற்றைக் கவனத்திற் கொள்வதன் மூலம் சிறந்ததோர் இலக்கியம், சிறந்த சினிமாவாக ஆக முடியும் எனக் கட்டுரையில் ஆசிரியர் கூறிக் கொள்கிறார்.

# 16. கம்பராமாயணம் - மண்டோதரி புலம்பல்

1. அ. **மண்டோதரி, இறந்த இராவணனின் உடலில் வீழ்ந்தமையும், வாய் திறந்து அரற்றியமை பற்றியும் கம்பரால் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது.**

ஆ. **இராவணனது பிரிவை ஆற்றாத மண்டோதரி அழுது அழுது அரற்றிக் கூறியவற்றை விபரிக்குக.**

அ. மயன் என்பவனின் மகளாகிய மண்டோதரி அலைகடலில் மின்னல் வீழ்ந்ததைப் போன்று, வெற்றியும் வலிமையும் விளங்கும் இராவணனின் உடலின் மேல் (வீழ்ந்து) பொருந்தியவளாய், மரங்களும், மலைகளும், உருகக் கூடியவாறு வாய்திறந்து இரக்கமுடையவளாகப் பலவாறு அரற்றினார் எனக் கம்பரால் கூறப்பட்டுள்ளது.

ஆ. ★ அம்மா, அம்மா கொடியவளாகிய எனக்கு நேர்ந்துள்ளது (பெருந்துயரம்). அரக்கர்களுடைய தலைவனுக்குப் (என்னுடைய கணவனுக்குப்) பின்னரா நான் இறப்பது. அவருக்கு முன்னால் நான் இறக்க வேண்டும் என்ற கருத்தையும் என்னால் நிறைவேற்ற முடியவில்லை. என் முன்னால் வீழ்ந்து கிடப்பது (அவரது) முடி அணிந்த தலையோ? நிலத்தில் வீழ்ந்து கிடப்பது அவரது முகங்கள் தானோ? இராவணனார் உயிர்போன தன்மை என்னவோ? என்னவோ? இதுவோ பாவம் என மண்டோதரி புலம்பினாள்.

★ இராமன் என்னும் ஒருவனுடைய அம்பு, வெண்மை நிறத்தையுடைய எருக்கம்பூ மாலையணிந்த சடை முடியையுடைய சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் கயிலை மலையைப் பெயர்த்த (இராவணனின்) அழகிய உடம்பு முழுவதும், எள்ளுக்கூட இருப்பதற்குச் சிறிய இடமில்லாதவாறு, அவனது உயிர் இருக்கும் இடம் தேடித் துளைத்ததோ?

அல்லது தேன் இருக்கும் மலர்களை அணிந்த சீதையைத் தன் மனமாகிய சிறையில் மறைத்து வைத்த காதலானது உள்ளே எங்காவது இருக்கும் என எண்ணங் கொண்டு அவனது உடலிற் புகுந்து தடவிப் பார்த்ததோ?

என்று அம்பு துளைத்த விதம் கண்டு மண்டோதரி அரற்றுகிறாள்.

★ ஒப்பற்ற இராமனது வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகள் முத்துமாலைகளை அணிந்த அழகிய மார்பினை (இராவணனது மார்பினை) வாயகன்ற குகைகளைப் போல அகலப் பிளந்து இவ் உலகுக்கு அப்பால் நெடுந்தூரம் சென்றுவிட்டன. வீரம் போய்விட வலிமை குறைந்து, பெற்றிருந்த வரங்களும் வலிமை இழந்து போரில் தோற்று வீழ்ந்தானே நான் கெட்டேன். ஒரேயொரு அம்பா இராவணன் உயிரைக் குடித்தது? மனிதனின் வலிமை இத் தன்மை வாய்ந்ததா?

என அரற்றி நிற்கும் மண்டோதரியைக் கம்பர், எமக்குக் காட்டுவார்.

★ பெண்களுக்கு எல்லாம் ஆபரணம் போன்ற சீதையின் பேரழகும், அவளுடைய கற்பும், திரண்ட தோள்களையுடைய இராவணனது காதலும், சூர்ப்பநகை இழந்த மூக்கும் அரசர்க்கு அரசனான தசரதனது ஏவலினால் கொடுங்காட்டில் தவம் மேற்கொண்டு (இராமன்)சென்றதும் கடைசியில் இந்திரனின் பெருந்தவமாகப் போனதோ? இராவணன் இறந்தமையானது தேவர் தலைவனான இந்திரனின் வாழ்வுக்குத் தவமாயிற்று என்ற வகையில் மண்டோதரி புலம்புவதைக் காண முடிகிறது.

★ பேரறிஞர்கள் மூன்றரைக் கோடி ஆண்டுகள் ஆய்வு செய்தாலும் அவர்களால் முன் கூட்டியே அளந்து கூறமுடியாத பெரிய வலிமையுடைய (இராவணனின்) தோளாற்றலுக்கு அழிவே இல்லை (என நினைத்திருந்தேன்). தவப் பயனின் பெருமையைப் பார்த்துக் கொண்டிருக்கும். நான், அலைகளை மூடிவிட்டு அளப்பதற்கு வரம் என்னும் பாற்கடலைச், சீதை என்னும் உறைமோரை (பிரையை) இட்டு அழிப்பதை (நான்) நினைத்தேனா இல்லை.

★ உலகின் இயற்கையை அறியத்தக்கவர் எவருமிலர். அவ்வாறான பதினான்கு உலகங்களும் அஞ்சுவதற்குரிய வீரனானவன் (இராவணன்) உலகை விட்டுவிட்டு விண்ணுலகம் புகுந்துவிட்டார். கணுக்களையுடைய கரும்பு வில்லின் நாணில் இருந்து புறப்படும் நாண் மலராகிய அம்புகளால் நாளெல்லாம் தோளெல்லாம் நோவடையுமாறு தொடுக்கும் மன்மதனின் தனிப்பட்ட இலக்காகவிருந்த இராவணனை; மனிதனாகியவன் தமது வரத்தினால் (மேன்மையால்) அழித்தானே!

இவ்வாறு இறந்து கிடக்கும் இராவணனைக் கண்ட மண்டோதரி அழுது அரற்றுவதை இரக்கமானது மேலெழக் கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்.

**2. அ) மண்டோதரி உயிர் பிரிதலைக் கம்பர் எவ்வாறு உயிர்த் துடிப்புடன் எடுத்துக் காட்டுகிறார் எனத் தெளிவுபடுத்துக?**

**ஆ) உயிர்துறந்த மண்டோதரி எவ்வெவர்களால் வாழ்த்தப்பட்டார் எனக் கூறப்பட்டுள்ளது.**

அ. பலவாறு புலம்பி தன் கணவனாகிய இராவணனை மண்டோதரி அழைத்தாள். ஏக்கம் கொண்டவளாக எழுந்து தன் கணவனாரின் பொன் ஆபரணங்களால் செழிப்புற்ற ஒப்பற்ற மார்பினைத் தன்னுடைய தளிர்க் கரங்களால் தழுவியவளாகவும், தனியாக நின்று தன் கணவனாரை அழைத்தவளாகப் பெருமூச்சு விட்டாள் அக்கணமே அவள் உயிர் துறந்தாள் என மண்டோதரியின் உயிர் பிரிதல் கம்பரால் துயருறக் காட்டப்படுகிறது.

ஆ. தேவ மகளிரும், வித்தியாதர மகளிரும், மற்றும் அசுர மகளிரும் தவத்தின் சார்புடைய முனிவர்களின் பத்தினியரும், அரிய கற்புடைய மானிட மங்கையர் அனைவரும் (உயிர்துறந்த மண்டோதரியை) வாழ்த்தினார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

**3. அ. வீடணன் இராவணனின் இறுதிக் கிரியைகளை எவ்வாறு ஆற்றினான் எனக் காட்டப்பட்டுள்ளது?**

**ஆ. இராவணன், மண்டோதரி என்போரின் ஆன்ம சாந்திக்காக இறுதிக் கிரியையின் பின்னர் வீடணன் ஆன்மசாந்திக்காகச் செய்தமை காட்டப்படு மாற்றை விளக்குக?**

★ வீடணன் அக்கினியை முறைப்படி பிரதிட்டை செய்து சொல்லப்பட்ட சுடுகாட்டு விதி முறைப்படி கிரியைகளை முடித்துத் துன்பம் மிகுந்த நெஞ்சுடன் பெரிய அழகு மிக்க தனது முன்னவனான இராவணனை அஞ்சலி செய்து ஈமவிறகிலே கிடத்தினான்.

★ ஈமவிறகிலே அகில், சந்தனக் கட்டைகள் என்பவற்றை அடுக்கித் தேவ விமானத்தின் அழகு பொருந்தும் படியாக அமைத்தான். அப்போது மற்றைய ஒலிகள் எல்லாம் கீழ்ப்பட்டுக் குறைவடையுமாறு பேரொலி எழுப்பிக் கொண்டு நடுவே முற்படும் சங்கின் ஒலியானது எங்கும் ஒலிக்கின்றது.

★ வெற்றி பொருந்திய வெண்குடையுடன், கொடிகள் நெருங்கிப் பொருந்தவும், இறுதிக் கிரியையை முறைப்படி சுற்றத்தவரும், பெண்களும் தொடர்ந்து சூழ்ந்துவர வீடணனாகிய வீரன் அக்கினியை முறைப்படி வைத்தான்
இவ்வாறு வீடணன் இறுதிக் கிரியைகளை ஆற்றியமை காட்டப்பட்டுள்ளது.

ஆ. குடங்கள் நிறையக் கூடிய அளவு கண்களில் இருந்து பெருகும் குமிழியையுடைய கண்ணீரை உடையவனான வீடணன் இறுதிக் கிரியைகளைச் செய்து முடித்ததன் பின்பு கணவனைத் தொடர்ந்து உயிர் பிரிந்த மயன் மகளாகிய மண்டோதரி, இராவணன் என்போரின் ஆன்ம சாந்திக்காக வெம்மை மிகுந்த நெருப்புக்கு அவி சொரிந்தான். இவ்வாறு வீடணன் இறுதிக் கிரியையின் பின்பு ஆன்ம சாந்தி செய்தான் எனக் கம்பர் காட்டிச் செல்கின்றார்.

**4. "தரங்க நீர் வேலையில் தடித்து வீழ்ந்தென" இதனை விளக்குக உவமான, உவமேயங்களைத் தொடர்புபடுத்திக் காட்டுக.**

அலைகடலில் மின்னல் வீழ்ந்ததைப் போல என்பது கருத்தாகும். அலை கடலில் மின்னல் விழுவதைப்போல மண்டோதரி வலிமையால் விளங்கும் இராவணனின் உடலின் மேல் வீழ்ந்தாள்.

அ. உவமானம் - மின்னல்
உவமேயம் - மண்டோதரி
பொதுத்தன்மை - மின்னல் போன்ற உரு, வேகம்.

ஆ. உவமானம் - அலைகடல்
உவமேயம் - இராவணனின் உடல்
பொதுத்தன்மை - வலிமையும், ஆற்றலும்.

**5. "மானுடவன் ஊற்றம் ஈதோர்" என மண்டோதரி கூறுவதன் பொருளினை விளக்குக?**

★ ஒப்பற்ற இராமனது வில்லில் இருந்து புறப்பட்ட அம்புகள் முத்துமாலைகள் அணிந்த இராவணனின் அழகிய மார்பினை வாயகன்ற குகைகளைப் போன்று பிளந்து விட்டன. அவ் அம்புகள் அங்கே தரியாது இந்த உலகுக்கு அப்பால் சென்று விட்டன.

★ வீரம் போய், வலிமை குறைந்து பெற்ற வரங்களும் குன்றி போரில் தோற்று வீழ்ந்தான் இராவணன். நான் கெட்டேன்.

★ **"ஓர் அம்போ உயிர் பருகிற்று"** ஒரேயொரு அம்பா (பிரமாஸ்திரம்) இராவணனின் உயிரைக் குடித்தது. சாகாவரம் பெற்ற இராவணனின் வரத்தைக் குறைத்த அம்புக்கு உண்டான வலிமையை அழிக்கும் பலம் மனிதனுக்கு உண்டா? இத்தன்மை வாய்ந்ததா? என மண்டோதரி ஏங்குகின்ற நிலையையே இங்கு காணலாம்.

இதனை **"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னால் எக்கோடியாராலும் வெல்லப்படாய் எனக் கொடுத்த**

வரமும்" என மண்டோதரியால் வரத்தின் பெருமை கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு அம்பா வலிமை பொருந்திய இராவணன் உயிரைக் குடித்தது மனிதனின் வலிமை இவ்வாறானதா? என ஏங்கும் நிலையே பொருளாகக் காட்டப்படுகிறது எனலாம்.

6. **"சீதை என்னும் பிரை கடை இட்டு அழிப்பதனை அறிந்தேனோ" என மண்டோதரி புலம்புவது ஏன்?**

★ வரம் என்கின்ற பாற்கடலை அழிப்பதற்கு உறைமோராகச் சீதையை இட்டு அழிப்பார்கள் என்பதனை நான் அறிந்திருக்கவே இல்லை என மண்டோதரி கூறுவாள்.

★ சீதையை இராவணன் கவர்ந்து சிறை வைத்ததால்தான் இராவணன் அழிகிறான். இவ் இராவணன் அழிவதற்குக் காரணம் சீதை. வலிமை பொருந்திய பல்வேறுபட்ட வரங்களையும் அழியக் கூடியதாக அதற்குச் சீதை என்னும் பிரை (உறை கடையிட்டு) காரணமாக உள்ளது என்பதை நான் அறிந்திருக்கவில்லை என்பதை விளக்குகிறாள். இராவணனின் உயிர் பிரிவுக்குக் காரணம் சீதை. இச்சீதை, பாற்கடல் போன்ற அகன்ற நிகரற்ற அழியா வரங்களை அழிப்பதற்குப் பிரையாக (உறைமோராக) அமைந்து விட்டாள். இதனை நான் அறிந்திருக்கவில்லை என மண்டோதரி காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

★ எனவே இம் உறைமோராக அமைந்த சீதையே இராவணன் அழிவுக்குக் காரணம் என்பதை மண்டோதரி உணர்வதனை இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது. இதுவே அளப்பரிய பாற்கடல் போன்ற அழியா வரங்களையே அழித்து, இராவணன் உயிரைத் குடித்தது என மண்டோதரி அறிகிறாள். இப்பிரையின் இத்தன்மையானது அழியா வரங்களையே அழிக்கும் தன்மை பொருந்தியது. இத் தன்மையின் உயர்வை நான் அறிந்திருக்கவில்லை என மண்டோதரி ஏக்கம் கொள்வதனை இங்கே நாம் காணலாம்.

**7. அ. "வெள்ளெருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த" கதையினைச் சுருக்கமாகத் தருக.**

**ஆ. "புரந்தனார் பெருந்தவமாய்ப் போயிற்று" என மண்டோதரி கூறுவதன் காரணத்தை விளக்குக.**

அ. வெண்மையான எருக்கம்பூ மாலையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமான், எழுந்தருளி இருக்கும் கயிலை மலையை இராவணன் பெயர்த்தமை பற்றி செவிவழிக்கதைகளும், புராண வரலாற்றுக் கதைகளும் பலவாறு எடுத்துக் கூறுகிறது. அவற்றுள் ஒரு சில கதைகளை மட்டும் இத்தருணத்தில் அறிந்து கொள்வது இவ் வினாவுக்குப் பொருத்தமாக அமையும்.

★ ஒரு பொழுது இராவணன் தனது புட்பக விமானத்தில் சென்று கொண்டு இருந்தான். அப்போது அவனது விமானத்தைச் செல்லவிடா து உயர்ந்த மலையொன்று தடுத்தது. இதனால் கோபம் கொண்ட இராவணன் தன் போக்கினைத் தடுக்கும் மலையைப் பெயர்த்து எறிந்துவிட வேண்டும் என உறுதிகொண்டு புட்பக விமானத்திலிருந்து கீழ் இறங்கினான். தன்னைத் தடுத்த மலை தனக்கு அளவிலாப் பலம்தந்த சிவபெருமான் உறைந்துள்ள கயிலாய மலை என்பது அவனுக்குத் தெரியாது.

எனவே இராவணன் பலம் கொண்ட தன் உடலின் வலிமையால் மலையை அசைத்தான். மலை அசைந்தமையால் பீதிகொண்ட உமை, எல்லாம் வல்ல இறைவனைக் கட்டிப்பிடித்தாள். இச் செயலைக் கண்ட சிவபெருமான் தனது கால் பெருவிரலால் நிலத்தை ஊன்றினார்.

அப்போது கயிலைமலையை அசைத்த இராவணன் மலையின் கீழ் அகப்பட்டு நசிந்தான். அவ்வேளையில் இராவணன் முன்னால் தோன்றிய முனிவர் இராவணனை நோக்கி நீ அசைத்தமலை கயிலை மலை என்பதையும், இறைவன் இசைப்பிரியன். எனவே சாமகானம் வாசிப்பதன் மூலம் உன் துன்பத்தை இறைவன் நீக்குவான் என்றார். இதனை அறிந்த இராவணன் தன் தலை ஒன்றைக் கொய்து, கைகளில் ஒன்றை ஒடித்து, வீணையாக்கி மீட்டுச் சாமகானம் வாசித்தான்.

அவ்இசையில் திளைத்த சிவபெருமான் தன் காற் பெருவிரலை எடுத்தார். இராவணன் துன்பம் நீங்கி விடுதலை பெற்றான். இறைவன் பெருமையை வியந்து தொழுதான். இதுவே இராவணன் கயிலை மலையைப் பெயர்த்த கதையெனக் கூறப்படுகிறது.

★ இக் கதையை விட, இராவணன் பெருந்தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து பகைவர்களுக்கு இளைக்காத வலிமை பெற்ற வரத்தைப் பெற்றுக் கொண்டான். நாரத முனிவர் கூற்றுக்கிணங்க சிவபெருமான் கொடுத்த வரம் கைகூடுமா? கூடாதா? என்பதைப் பரீட்ஷித்து அறிந்துகொள்ள இராவணன் விரும்பினான்.

எனவே தன் வல்லமையைப் பரிசோதிக்க சிவபெருமான் வீற்றிருக்கும் கைலாச கிரிக்குச் சென்று, அம்மலையை இருபது கரங்களாலும் அசைத்தான். இராவணன் மீது கோபம் கொண்ட சிவபெருமான், இராவணா! உன் கரங்களைச் சங்கரிப்பதற்காக ஒரு புருஷன் ஜனித்து, அவற்றை விரைவில் சங்கரித்து விடுவான் எனச் சாபமிட்டார் எனப் புராண வரலாறு கூறுகிறது.

(தகவல்: சிவமஹா புராணம், பிரேமா பிரசுரம், சென்னை - 24, எட்டாம் பதிப்பு 1991)

★ இராவணனின் தாயார் நோயினால் பீடித்திருந்தார். அந் நோய்க்கு உரிய சஞ்சீவி மருந்து மரம் கயிலை மலையில் இருப்பதாக அறிந்த இராவணன் தான் பெற்ற வரத்தின் பலத்தைக் கொண்டு கயிலை மலையைப் பெயர்த்தான் எனவும் செவிவழிக் கதைகள் கூறுகின்றன.

ஆ. இராவணன் பெரும் தவத்தின் மூலம் சிவபெருமானிடம் இருந்து அவன் இஷ்டப்படி அபரிமிதமான பலம் பெற்றான். இவ் வரம் பெற்றுக் கொண்ட இராவணன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தன் வலிமையினால் பல்வேறுபட்ட துன்பங்களைச் செய்தான். இதனால் தேவர் தலைவனான இந்திரன் எவ்வழியிலும் இராவணனது வலிமை குன்ற வேண்டும் எனவும், அவனை அழிக்க வேண்டும் என விரும்பினான். எனவே இங்கு இராவணன் இறந்தமையானது தேவர் தலைவனான இந்திரனின் வாழ்வுக்கு வெற்றி கொடுக்கும் தவமாயிற்று. இதனால் தேவர் தலைவன், தேவர்கள் துன்பத்தில் இருந்து விடுதலை பெற்றனர். ஆகவே இந்திரனின் நல் வாழ்வுக்கு, இராவணனின் இறப்பு தவமாக அமைந்துவிட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

# 17. சூழும் புயலிலிருந்து விடுபட்டார்

1. அ. பாத்திமா, கண்ணீரை ஆறாகப் பெருக்கி அழுதமைக்குக் காரணமாக அமைந்த சம்பவம் யாது?

ஆ. அண்ணல் அவர்கள் ஏன் மக்காவில் இருந்து தாயிபுக்குச் செல்ல எண்ணினார்?

இ. தாயிபுக்குச் சென்ற அண்ணல் அவர்கள் அங்குள்ள முக்கியஸ்தர் மூவரிடம் எவ்வாறு தன்னை அறிமுகப்படுத்தினார்?

ஈ. தாயிபுவிலுள்ள முக்கியஸ்தர் மூவரும் அண்ணல் அவர்களை எவ்வாறு இகழ்ந்து சிரித்தனர் எனக் கூறப்பட்டுள்ளது என்பதைக் காட்டுக.

அ. "தாங்கள் எவருக்கும் யாதொரு இன்னலும் விளைவிக்காது தெருவழியே செல்லும்பொழுது அக் கொடியோன் தங்களின் தலையில் மண்ணை வாரிக் கொட்டி விட்டானே" என்பது குறைஷிகள் இழைத்த துன்பத்தால் பாத்திமா கூறிய கூற்றாகும். பாத்திமாவின் தந்தைக்கு மக்காக் குறைஷிகள் துன்பம் ஏற்படுத்தினர்.

ஆ. மக்காக் குறைஷிகள் இழைத்து வந்த இன்னல்கள் பொறுக்க இயலாது மக்காவிலிருந்து எழுபத்து மூன்று மைல் தூரத்திலுள்ள தாயிபுக்குச் சென்றாவது இஸ்லாத்தைப் போதித்து அங்குள்ள மக்களை நேர்வழிப்படுத்த அண்ணல் அவர்கள் எண்ணினார்.

இ. "என் பெயர் முஹம்மதாகும். நான் இறைவனின் திருத் தூதனாவேன். உங்களுக்கு நேர்வழிகாட்ட இறைவனால் அனுப்பி

வைக்கப்பட்டுள்ளேன்." என்று அண்ணல் அவர்கள் கூறினார்கள்.

ஈ. ★ அண்ணல் அவர்கள் கூறியதைச் செவியுற்ற அந்த மூன்று அண்ணன் தம்பிகளும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அவர்களில் ஒருவன் அண்ணல் அவர்களை நோக்கி "மக்காவிலிருந்து தாயிபுக்கு வர ஒரு கழுதையைக் கூடப் பெற்றிராத உம்மைத்தானா இறைவன் தன் திருத்தூதராகத் தேர்ந்தெடுத்தான்? நிரம்ப அழகு. நிரம்ப அழகு" என்று சிரித்துக்கொண்டு கூறினான்.

★ இரண்டாவது முக்கியஸ்த்தன், இறைவன் தன்னுடைய திருத்தூதராய் அனுப்ப உம்மையல்லாது வேறு எவரும் இறைவனுக்குக் கிடைக்க வில்லையா? என்று கூறிப் பரிகசித்துச் சிரித்தான்.

★ மூன்றாவது முக்கியஸ்தன் 'நீர் உண்மையில் இறைவனின் திருத்தூதராக இருப்பின் உம்முடன் உரையாட நான் அருகதை அற்றவனாவேன். நீர் ஒரு பொய்யராயிருப்பின் என்னுடன் உரையாட நீர் அருகதையற்றவராவீர்" என்று கூறி வெடிச் சிரிப்புச் சிரித்து நகைத்தான்.

மேலும் இம் மூவரும் ஊரில் உள்ள வீணர்களை எல்லாம் ஏவிவிட்டு அண்ணல் அவர்களைப் "பைத்தியம்" என்று கூறிக் கைகொட்டிப் பரிகசிக்குமாறு தூண்டினர்.

**2. தாயிபு மக்கள், அண்ணல் அவர்களை எவ்வாறு துன்பப்படுத்தினர் எனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது?**

"புயல் சூழ்ந்த இடம் தாயிப்" **என்ற தலைப்பில் அண்ணலார் அடைந்த துன்பங்கள் பற்றி எழுதுக.**

★ ஊரில் இருந்த முக்கியஸ்தர் மூவரும் அண்ணல் அவர்களைப் பரிகசித்தனர். நகைத்தனர்.

★ ஊரில் உள்ள வீணர்களை எல்லாம் ஏவிவிட்டு அண்ணல் அவர்களைப் **"பைத்தியம்"** என்று கூறிக் கைகொட்டிப் பரிக சிக்குமாறு அவர்களிடம் முக்கியஸ்தர் மூவரும் தூண்டினர்.

★ பத்து நாட்கள் தங்கி இறைவன் மார்க்கத்தைப் போதித்த அண்ணல் அவர்களுக்கு மக்கள் இழைத்த கொடுமைகள் அளவில.

★ இக்கொடுமைகள் மக்காக் குறைஷிகளைவிட மோசமாக இருந்தன. இதனையே **"மக்காக் குறைஷிகளைத் தலைகுனிய வைத்தன"** எனக் கூறப்பட்டுள்ளது.

★ அண்ணல் அவர்கள் நபியாக இருப்பின் ஏன் அவரின் ஊர் மக்கள் அவரின் மதத்தில் சேரவில்லை என்றனர்.

★ மக்களின் கொடுமைகளைத் தாங்கமுடியாது அண்ணல் அவர்கள் ஊரைவிட்டு வெளியேறினார்.

★ வெளியேறும் நபி அவர்களை, ஊர்மக்கள் வீதியின் இருமருங்கும் நின்று அவர்மீது கல்மாரி பொழிந்தனர்.

★ அவரின் கால்கள் கல் எறிபட்டதால் புண்ணாயின. உதிரங்கள் வழிந்தோடின. காயங்களால் ஏற்பட்ட வேதனையானது தாங்கமுடியாத வேதனையை அவருக்குக் கொடுத்தது.

★ காயத்தின் வேதனையால் நபி அவர்கள் அமர்ந்தபோது அவரை அமரவிடாது **"இங்கே உட்காராதே: உன் ஊரை நோக்கி ஓடிப் போ"** என்று அண்ணல் அவர்க்ளின் தோளைப் பிடித்துத் தூக்கிவிட்டனர்.

★ மீண்டும் உடலெங்கும் கல்லால் எறிவர், காயப்படுத்தினர். உதிரம் பெருக்கெடுத்து ஓடச் செய்தார்கள்.

★ விரட்டி, விரட்டிக் கல்லால் எறிந்தார்கள். **'பைத்தியம், பைத்தியம்'** என்று கூறிக்கொண்டு கல்லால் எறிந்தனர்.

★ நபி அவர்கள் மீது கல்லடிபடாது காத்து நின்ற "ஸைதின்" என்பவரின் முகத்தையும் கல் தாக்கியது. குருதி பெருகியது.

★ மூன்று மைல் தூரம்வரை அண்ணல் அவர்களுக்குக் கல்லால் எறிந்தனர்.

★ அண்ணல் அவர்கள் மூச்சுத் திணற ஓடினார்கள் மயக்க முற்ற நிலையில் ஓடினார்கள், வேதனை தாங்க இயலாது ஓடினார்கள்.

இவ்வாறு அண்ணல் அவர்கள், தாயிபு மக்களால் துன்பப்படுத்தப்பட்டார் எனக் கூறப்பட்டுள்ளது.

3. அ. **தாயிபு மக்களால் துரத்தப்பட்டுத், துன்பப்பட்டு வந்த அண்ணல் அவர்கள் தான் ஓடி வந்தமை பற்றி எவ்வாறு வேதனையுடன் கூறினார்கள் எனக் காட்டப்பட்டுள்ளது.**

ஆ. **மக்கா வாசியான ஒருவரின் தோட்டத்தில் உள்ள ஊழியர் பழக்குலை கொண்டுவந்தபோது அண்ணல் அவர்களுக்கு, ஸைதின் என்ன செய்து கொண்டிருந்தார்?**

இ. **கொடிமுந்திகைப் பழத்தட்டை ஊழியர் கொடுத்தபோது அப் பழங்களை எடுத்து அண்ணல் அவர்கள் என்ன கூறிச் சுவைத்தார்?**

அ. நான் தாயிபிலிருந்து மூன்று கல் தொலை ஓடியே வந்தேன். நான் மிகவும் காயப்பட்டு மயக்கமுற்ற நிலையில் ஓடிவந்ததால் நான் எங்கிருந்து ஓடி வருகிறேன், எதை நோக்கி ஓடுகிறேன் என்பதை அப்பொழுது என்னால் அறிய முடியவில்லை என்று அண்ணல் அவர்கள் வேதனையுடன் கூறினார்கள்.

ஆ. அண்ணல் அவர்களின் முகத்திலிருந்து வடிந்த குருதியைத் 'துடைத்துக் கொண்டும்' காலில் ஏற்பட்ட காயங்களுக்குப்

பச்சிலை வைத்துக் கட்டிக் கொண்டும் ஸைது அவர்கள் இருந்தார் எனக் கூறப்பட்டுள்ளது.

இ. 'மிகவும் நன்றி' என்று கூறிக் கொண்டே அண்ணல் அவர்கள் தமது தட நெடுங்கையை நீட்டி அப் பழங்களை எடுத்தனர். "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்" என்று கூறி வாயிலிட்டுச் சுவைத்தார்.

**4. அ. "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்" என்று கூறிய அண்ணல் அவர்களிடம், ஊழியன் நீங்கள் கூறியதற்குப் பொருள் என்ன எனக் கேட்டபோது அண்ணல் அவர்கள் என்ன கூறினார்?**

**ஆ. கிறிஸ்தவ மதம், முஸ்லீம் மதம் என்பவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டை அண்ணல் அவர்கள் எவ்வாறு எடுத்துக் காட்டுகிறார்?**

**இ. அண்ணல் அவர்கள் கல்லடியால் ஏற்பட்ட காயங்களினால் உண்டான வேதனையின்போது அவர்களின் கைகள் வானத்தைப் பார்த்த வண்ணம் நிமிர்ந்தன. இறைஞ்சின. இது எவ்வாறானது, எதற்கானது எனக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது?**

அ. ★ நான் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹிம் என்று கூறினேன். அதன் பொருள் **"அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்"** என்பது பொருளாகும்.

★ எச் செயலைச் செய்யத் தொடங்கும் முன்னும் **"அல்லாஹ்வுடைய திருப்பெயரால் அதனைத் தொடங்குவது"** ஒவ்வொரு முஸ்லீமுடையதும் கடமையாகும். என்று அண்ணல் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்.

ஆ. வேற்றுமை என்ன என்பதைத் "திருக்குர் ஆனே" நன்கு விளக்கமாகக் கூறுகிறது. "அல்லாஹ்" ஒருவன். அவன் தேவையற்றவன். அவன் எவரையும் பெறவுமில்லை. அவனை எவரும் பெறவுமில்லை. அவனுக்கு இணை யாருமில்லை. என்று எடுத்தியம்புகிறது.

'அவன் எவரையும் பெறவுமில்லை. அவனை எவரும் பெறவுமில்லை என்பதே உங்களுடைய மதத்திற்கும். எங்களுடைய மதத்திற்கும் உள்ள வேற்றுமை" என்று அண்ணல் அவர்கள் கூறினார்கள்.

இ. ★ "இறைவனே! என்னுடைய பலவீனத்தைப் பற்றியும் வறிய நிலையைப் பற்றியும் மக்களின் கண்களில் நான் இழிவாகக் காணப்படுவதைப் பற்றியுமே நான் உன்னிடம் முறையிடுகிறேன். ஏனெனில் இரக்க சிந்தனையாளர்களில் எல்லாம் மிகவும் இரக்க சிந்தனையாளன் நீ. திக்கற்றவர்களுக்குத் துணையளிப்பவனும். ஆதரவு அற்றவர்களுக்கு அபயமளிப்பவனும் நீ. நீயே எனது பாதுகாவலன் நீ, எவரிடம் என்னை ஒப்படைக்க எண்ணி உள்ளாய்? என்னுடைய நண்பர்களிடமா? அல்லது பகைவர்களிடமா? நீ என்மீது சினமுறாது இருப்பின். என்னை எவரிடமும் ஒப்படைத்த போதிலும் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை.

★ ஏனெனில் உன்னுடைய பாதுகாப்பே எனக்குப் போதுமானது. இறைவனே இருளை விரட்டியடித்து இரண்டுலக வேலைகளையும் சிறப்புடன் செய்து வரும் உன்னுடைய அளப்பரும் ஒளி வெள்ளத்தில் நான் அடைக்கலம் புகுகின்றேன். உன்னுடைய கோபமோ. அதிருப்தியோ என்மீது சாராதிருக்க உன் அபயம். அபயம். உன்னுடைய அன்பும் அருளுமே எனக்குத் தேவை. உன்னுடைய அருள் உதவி இன்றி நான் எந்த நற்செயலையும் ஆற்றவும் இயலேன் தீச் செயலையும் தவிர்க்கவும் இயலேன்"

என்று இறைவனிடம் தம் கண்களில் இருந்து கண்ணீர் ஆறுகரை புரண்டோட அழுது இறைஞ்சினார். பின் மக்காவுக்குப் பயணமானார் எனக் கூறப்பட்டுள்ளது.

**5. அ. அண்ணல் அவர்கள் மக்காவில் தனக்குப் பாதுகாப்புக்காக இருந்த பெரியாரை இழித்துரைக்க வேண்டாம் என எவ்வாறு கூறினார்கள்.**

**ஆ. அண்ணலைச் சந்திக்க நேரிடின் காதுகளில் பஞ்சை வைத்துக் கொள்வதாக உறுதிகூறிய மக்காச் செல்வந்தருக்கு ஏற்பட்ட அனுபவத்தை விளக்குக.**

அ. சகோதரர்களே! நான் இக் கணத்திலிருந்து அப் பெரியாரின் பாதுகாப்பில் இல்லை! பெரியோனாகிய இறைவனின் பாதுகாப்பில் இருக்கிறேன். அவனுடைய பாதுகாப்பு எனக்குப் போதுமானது. ஆதலின் பொருட்டு அப்பெரியாரை இழித்துரைக்க வேண்டாம் என்றனர் அண்ணல் அவர்கள்.

ஆ. செல்வந்தர் தெருவழியே சென்று கொண்டிருந்தார். அப்பொழுது எவரோ சத்தமிட்டு எதனையோ ஓதிக் கொண்டிருந்தது அவருடைய செவிகளில் ஒலித்தது. திரும்பிப் பார்த்தார். அண்ணல் அவர்களே பாதையோரத்தில் உள்ள பரந்த வெளியில் ஒலியெழுப்பி ஓதித் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் உடனே பதறிக்கொண்டு தம்மடியில் இருந்த பஞ்சை எடுத்தார்.

அதற்குள் **"திருக்குர்ஆனின்"** திருவாக்கியங்கள் அவருடைய செவியிற் புகுந்து, உடலிற் புகுந்து, உள்ளத்தில் புகுந்து, உள்ளின் உள்ளேயும் புகுந்து தன்னுடைய வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டன.

பஞ்சை எடுக்கச் சென்ற கை பஞ்சை எடுக்காது அப்படியே அவருடைய மடிமீது துயில் கொண்டது. அவருடைய கண்கள் வைத்தவிழி மாறாது அண்ணல் அவர்களையே நோக்கிக்

கொண்டிருந்தன. கால்கள் அதற்கு அப்பால் நடக்க மறுத்துவிட்டன. அங்கேயே நின்று அண்ணல் அவர்கள் இனிய முறையில் **"திருக்குர்ஆனை"** ஓதுவதையும், கைகட்டி இறைவன் முன்னிலையில் நிற்பதையும் பின்பு குனிவதையும் தலை பணிந்து வணங்குவதையும், அதன்பின் இரு கைகள் ஏந்தி இறைவனிடம் இறைஞ்சுவதையும், கண்களால் பார்த்துப் பருகிக் கொண்டிருந்தார்.

அவருடைய உடலையும் உள்ளத்தையும் ஒருங்கு சேர்த்து ஒருவிதத் திடுக்கம் ஆட்கொண்டது. அண்ணல் அவர்கள் தொழுது விட்டு வீடு சென்றார். இது எதுவும் அண்ணலுக்குத் தெரியாது. இவ்வாறு திடுக்கம் கொண்ட செல்வந்தர் அண்ணல் அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டித் திறந்தார்.

அண்ணல் அவர்களின் முன்பாய்ந்து அவர்களைக் கட்டித்தழுவிக் கண்ணீர் ஆற்றைப் பெருக் கெடுத்தோடச் செய்தார். **"நான் தங்களின் அடியார்க்கு அடியான். அபயம் அளியுங்கள். அபயம் அளியுங்கள்"** என்ற மொழிகள் அவருடைய வாயிலிருந்து தேம்பலினூடேயும் அழுகையினூடேயும் வெளிவந்து கொண்டிருந்தது.
**இவ்வாறு மக்காச் செல்வந்தரின் அனுபவம் கூறப்பட்டுள்ளது.**

6. அ. **செல்வாக்கு மிகுந்த தலைவரைத் தம்பக்கம் இணைத்ததற்காக அண்ணல் அவர்கள் யாருக்கு எவ்வாறு நன்றி கூறுகிறார்?**

ஆ. **இஸ்லாத்தில் மக்கள் இணையும் காலம் எவ்வாறாக அமைந்தது என்பது பற்றி ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்.**

அ. செல்வாக்கு மிகுந்த தலைவரைத் தம்பக்கம் இணைத்ததற்காக அண்ணல் அவர்களின் நா **"எல்லாப் புகழும் இறைவனுக்கே"** என்று கூறி இறைவனை வாழ்த்தத் தொடங்கியது.

ஆ. இக்கணத்திலிருந்து அரபுநாடு என்னும் ஆழிய கடலில் அரசியல், சமுதாய, சமய அலைகள் வேறு பக்கமாக வீசத் தொடங்கிவிட்டன. அண்ணல் அவர்கள், மக்களை விரட்டி, விரட்டிப் பிடித்து இஸ்லாத்தில் இணைத்த காலத்தின் முடிவு நெருங்கியது. மக்கள், அண்ணல் அவர்களை விரட்டி, விரட்டித் தேடி இஸ்லாத்தில் இணையும் காலத்தின் பொழுதானது உதயமாகும் வேளையும் அண்மியது என ஆசிரியர் இக்கால வேளையைக் குறிப்பிடுவார்.

# 18. மலைப்பாம்பு

1. அ. **மகாபாரதக் கதையில் வரும் பாண்டவர்களின் பெயர்களைத் தருக.**

ஆ. **பீமனை, மலைப் பாம்பு பற்றியபோது அவன் ஏன் மிகவும் ஆச்சரியமடைந்தான்.**

இ. **பீமன் எவ்வாறு தன்னை மலைப்பாம்புக்கு அறிமுகம் செய்து கொண்டான்?**
**மலைப்பாம்பு எவ்வாறு தன்னை அறிமுகம் செய்தது.**

அ. தருமன், அருச்சுனன், பீமன், நகுலன், சகாதேவன் எனும் ஐவராவர்.

ஆ. பீமனின் இரு கரங்களையும் மலைப்பாம்பு பற்றிக் கொண்டது. அதன் பிடியில் இருந்து அவனால் விடுபட முடியவில்லை. அவனுடைய பலம் முழுவதும் அந்தப் பாம்பிடம் பயனற்றுப் போயிற்று. பதினாயிரம் யானை பலம் கொண்ட பீமனைப் பாம்பு செயலற்றவனாகச் செய்தது. தனது பலத்தையும் மிஞ்சிய பலமுள்ளோர் இருப்பது பீமனுக்கு அப்போது தெரிய வந்தது. இச்செயல் பீமனுக்கு அதிக ஆச்சரியத்தைத் தந்தது.

இ. நான் பாண்டு மன்னரின் புதல்வன், யுதிஷ்டிரருக்கு இளையவன், என்பெயர் பீமன் என்று அறிமுகம் செய்தான்.

நான் உன் முன்னோர்களில் ஒருவன். எனது பெயர் நகுஷன். அகஸ்திய முனிவரின் சாபத்தால் நான் மலைப்பாம்பு ஆனேன். நான் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க விடைகள் எவன் கூறுகிறானோ; அப்போதுதான் எனக்குச் சாப விமோசனம் ஏற்படும் எனப் பாம்பு தன்னை அறிமுகம் செய்தது.

**2. அ. பீமனை விட முடியாமைக்கு யுதிஷ்டிரனுக்குப் பாம்பு கூறிய காரணம் யாது?**

**ஆ. "ஒருவன் அறிய வேண்டியது எது? அந்தணன் என்று யாரைச் சொல்லலாம்" என்ற வினாவுக்கு யுதிஷ்டிரர் என்ன பதில் கூறினார்?**

**இ. தருமர், பாம்பிடம் கேட்ட கேள்விகளையும். பாம்பு தருமருக்கு அளித்த பதில்களையும் தருக?**

அ. குற்றம் இல்லாதவனே! நான் சந்திர குலத்தில் பிறந்தவன். என் தந்தை பெயர் **ஆயு**, என்பெயர் **நகுஷன்** அகஸ்திய முனிவரின் சாபத்தால் நான் மலைப் பாம்பாகவேண்டி நேர்ந்தது. நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ தக்க விடைகள் கூறுவாயாயின் உன் தம்பியை நான் விட்டுவிடுகிறேன் என்று பாம்பு கூறியது.

ஆ. எங்கும் வியாபித்து, இன்ப துன்பமில்லாத பரம்பொருளே நாம் அறியவேண்டிய பொருள் ஆகும் எனப் பதில் கூறினான்.

கொடை, பொறுமை, உண்மை, ஒழுக்கம், இரக்கம், தவம், அருள், உணர்வு உடையவனே அந்தணன் என்று யுதிஷ்டிரன் பதில் கூறினார்.

இ. i. மறைகள் அவற்றின் அங்கங்கள் முதலியவற்றை ஓதிக் கரை கண்டவனைக் காட்டிலும் எவனுக்கு மேலான கதி கிட்டும் என்று யுதிஷ்டிரர் பாம்பிடம் கேள்வி கேட்டார்.

அன்பனே! உண்மையை இனிமையாகப் பேசி, பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமலும் அஹிம்சையைக் கடைப்பிடித்து, எவன் சான்றோரை ஆர்வத்துடன் ஆதரிக்கிறானோ, அவனே மேலான கதியை அடைவான் எனப் பாம்பு பதில் கூறியது.

ii. பாம்பே! சத்தியத்தைக் காட்டிலும் தானம் மேலானதா? அல்லது தானத்தைக் காட்டிலும் சத்தியம் மேலானதா? என்று யுதிஷ்டிரர் கேட்டார். "**சில சமயங்களில் தானம் மேலானது. சில சமயங்களில் சத்தியம் மேலானது**" என்று பாம்பு பதில் சொல்லியது.

iii. அஹிம்சை சிறந்ததா? அல்லது இன்சொல் சிறந்தா? என்று யுதிஷ்டிரர் மீண்டும் கேள்வி கேட்டார்.

'**சில சமயங்களில அஹிம்சை மேலானது. சிலசமயங்களில் இன்சொல் மேலானது**" என்று பாம்பு பதில் சொல்லியது. இவ்வாறு தருமர் கேட்ட கேள்விக்கு மலைப்பாம்பு பதில் கூறியது.

**3. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன?**

அ. "**பாம்பே நீ யார்? அதிக பலசாலியான எனது பலத்தையும் மிஞ்சிவிட்டாய் இவ்வளவு பெரிய பலம் உனக்கு எவ்வாறு கிட்டியது**"

யாரால்: பீமனால்
யாருக்கு:- மலைப் பாம்புக்கு
சந்தர்ப்பம்:- மலைப்பாம்பு பீமனின் இரு கரங்களையும் பற்றி அவனைச் செயலற்றவனாகச் செய்தபோது.

ஆ. **"நான் உனது முன்னோர்களில் ஒருவன்"**

யாரால்:- மலைப்பாம்பினால்
யாருக்கு:- பீமனுக்கு
சந்தர்ப்பம்:- பாம்பே நீ யார்? அதிக பலசாலியான எனது பலத்தையும் நீ மிஞ்சிவிட்டாய்! இவ்வளவு பெரிய பலம் உனக்கு எவ்வாறு கிட்டியது? எனப் பீமன் கேட்டபோது கூறியது.

இ. **"வேறு ஏதாவது ஆகாரம் உனக்கு நான் தரச் செய்கிறேன்"**

யாரால்:- யுதிஷ்டிரனால்
யாருக்கு:- மலைப் பாம்புக்கு
சந்தர்ப்பம்:- வேட்டையாடச் சென்ற பீமன் திரும்பி வராதபோது தேடிச் சென்றவேளையில் ஒரு குகையின் அருகே மலைப்பாம்பு ஒன்று தன் தம்பி பீமனைப் பிடித்துக் கொண்டிருந்தபோது கேட்டது.

ஈ. **"எவன் சான்றோரை ஆர்வத்துடன் ஆதரிக்கிறானோ அவனே மேலான கதியை அடைவான்"**

யாரால்:- மலைப்பாம்பினால்
யாருக்கு:- யுதிஷ்டிரருக்கு
சந்தர்ப்பம்:- பாம்பு கேள்விகேட்டது போல் தானும் இரண்டொரு கேள்விகள் கேட்க விரும்புவதாகப் பாம்பிடம் கூறி யுதிஷ்டிரர் கேள்வி கேட்டபோது கூறப்பட்டது.

4. அ. **பீமன், பாம்பு தன்னைப் பற்றிக் கொண்டபின்பு அஞ்ச வில்லை என்பதையும், தனது பலத்தின் தேவையையும் எவ்வாறு பாம்புக்கு எடுத்துக் கூறுகின்றான்.**

ஆ. **யுதிஷ்டிரர், பீமனைத் தேடிச் சென்றபோது கண்ட காட்சிகள் எவை?**

அ. 'எனது உயிரைத் துறப்பதற்காக நான் அஞ்சவில்லை எனது பலத்தை நம்பி என் சகோதரர்கள். என்தாய் குந்தி முதலியோர் இருக்கிறார்கள்' என்று பீமன் பாம்பிடம் கூறினான்.

ஆ. தருமர் சென்ற வழிநெடுகிலும் ஏராளமான விலங்குகள் கொல்லப்பட்டுக் கிடந்தன. மரங்களும் முறிக்கப்பட்டுக் கிடப்பதை அவர் கண்டார். உவர் நிலத்திலே காணப்பட்ட ஏராளமான மரங்கள் இலைகளே இல்லாமல் மொட்டையாக இருந்தன. தொடர்ந்து சென்றபோது ஒரு குகையின் அருகே பெரிய மலைப்பாம்பு ஒன்று தன் தம்பி பீமனைப் பிடித்துக் கொண்டிருப்பதை அவர் கண்டார். இவ்வாறு தருமர் சென்ற இடமெல்லாம் இவ்வாறான காட்சிகளைக் கண்டார் எனக் கூறப்பட்டுள்ளது.

# 19. நளவெண்பா

1. அ. **நளவெண்பா யாரால் பாடப்பட்டது.**

ஆ. **நளன் எந்த நாட்டைச் சேர்ந்தவன். யாரைத் திருமணம் செய்தான்?**

இ. **நளன் ஏன் தமயந்தியைப் பிரியவேண்டி ஏற்பட்டது?**

ஈ. **நளனைப் பிரிந்த தமயந்தி எங்கு சென்றாள்? தமயந்திக்கு இரண்டாம் சுயம்வர அறிவித்தல் ஏன் கொடுக்கப்பட்டது?**

அ. நளவெண்பா புகழேந்திப் புலவரால் பாடப்பட்டது.

ஆ. நளன் நிடதநாட்டு மன்னன். விதர்ப்பநாட்டு இளவரசி தமயந்திமேல் காதல் கொண்டு அவளை நளன் திருமணம் செய்தான்.

இ. நளனைக் கலி தொடர்ந்தமையால் தனது நாடு, நகர் அனைத்தையும் சூதாடி இழந்து கானகம் சென்றான். அங்கு தமயந்தியைப் பிரிந்தான்.

ஈ. நளனைக் காணாது தவித்த தமயந்தி தனது தந்தையின் நாட்டுக்குத் திரும்பினாள்.

பிரிந்து சென்ற நளனைச் சேர்த்து வைப்பதற்காகத் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரமென்று அறிவிக்கப்பட்டது.

2. அ. **பாம்பு தீண்டியதால் நளன் எவ்வாறானான்?**

ஆ. **நளன் யாருக்குத் தேர்ச் சாரதியாக இருந்தான்.**

அ. பாம்பு தீண்டியதால் நளன் உருவம் மாறினான்.

ஆ. அயோத்தி மன்னன் இருதுபன்னனுக்குத் தேர்ச் சாரதியாக நளன் இருந்தான்.

**3. அ. வாகுவனைப் பற்றிய உண்மையை அறியத் தமயந்தி செய்த சூழ்ச்சி என்ன?**
**(நளன்பால் அன்புகொண்ட தமயந்தி புரோகிதனை அயோத்திக்கு என்ன சொல்லி அனுப்ப எண்ணினாள்?)**

**ஆ. புரோகிதன், அயோத்தியில் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம் பற்றி எவ்வாறு முரசம் அறிவித்தான் எனப் புகழேந்திப் புலவர் கூறுகின்றார்?**

அ. அந்தணனே! "வீமன் திருமகள் மீண்டும் ஒரு சுயம்வரத்தினை மேற்கொண்டாள் என்று நீ போய் அயோத்தியில் சொன்னால். மிகுந்த கொடைச் சிறப்புடைய இருதுபன்னன் ஆகிய அயோத்தி மன்னவனுக்கு இவ்வூர்வரையும் நம் படைவேந்தன் (நளன்) தேர்க்கோலம் கொள்வான்" என்று வாகுவன் பற்றிய உண்மை அறிவதற்காக அந்தணனிடம் இவ்வாறு சொல்லி அயோத்திக்கு அந்தணனைத் தமயந்தி அனுப்பி வைத்தாள்.

இதனைப் புகழேந்திப் புலவர்

**"மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை பூ ண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்....."** என மிக அழகாக எடுத்துக் காட்டுதலைக் காணலாம்.

ஆ. தமயந்தி கூறியபடி புரோகிதன் அயோத்திக்குச் சென்றான். எந்நாளும் மாலையை அணிந்துள்ளவனாகிய அயோத்தி மன்னனை அடைந்தான்.

செங்கோன்மையை உடையவனே! எங்கள் அரசன் வீமராசனது மகளுக்கு இரண்டாவது சுயம்வரம் என்று அவ்விடத்தே ஒப்பற்ற முரசம் அறிவித்தல் செய்தான்.

அச்சுயம்வர நாளும் நாளை அளவிலே நடைபெறுகின்றது எனப் புரோகிதன் கூறினான்.

"எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரசம் அறைவித்தான் - செங்கோலாய்
அந்நாளும் நாளை யளவென்றான்......."

எனக் கூறுவதன் மூலம் யாருக்கு, எப்போது சுயம்வரம் நடைபெறப் போகிறது என்பதை அந்தணன் முரசம் அறிவிக்கும் வகையினைப் புகழேந்திப் புலவர் மிகக் கச்சிதமான சொல் வகைகளைக் கையாண்டு சிறப்புறக் கூறியிருப்பதனைக் காண முடிகிறது.

**4. "நளவெண்பா" என்ற பாடப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன எவ்வாறு காட்டப்பட்டுள்ளது எனத் தெளிவுபடுத்துக.**

**அ. இருதுபன்னன், நளனிடம் அயோத்திக்குச் செல்வது பற்றிக் கேட்ட விதம்.**

**ஆ. i. இருதுபன்னனை, நளன் சிறப்பித்துக்கூறும் விதம்.**
**ii. இரண்டாம் சுயம்வரத்துக்குச் செல்லவேண்டும் எனக்கேட்ட இருதுபன்னனுக்கு நளன் கூறிய பதில்.**

**இ. இருதுபன்ன மன்னன், புரோகிதன் இரண்டாம் சுயம்வரம் எனக் கூறிய வார்த்தைகளை உண்மையென மதித்தலும், (எனக்காகவே இரண்டாம் சுயம்வரம்), நளனுக்கு இருதுபன்னன் முடிவு கூறுதலும் எவ்வாறு காட்டப் பட்டுள்ளது.**

அ. வேத மொழிகளிலே வல்லவனான புரோகிதன் வந்து வீமராசனது அன்புக்குரிய மகளான தமயந்தி மீண்டும் சுயம்வரத்தை விரும்பினாள். இதற்கு நாம் என்ன செய்வோம்? என்று மின்னல் போன்ற ஒளி பிரகாசிக்கும் வேற்படையைக் கொண்ட அயோத்தி மன்னன், நளனிடம் கேட்டான் எனக் கூறப்பட்டுள்ளது.

"....மீண்டும் சுயம்வரத்தைக் காதலித்தாள்
வீமன்றன் காதலியென்று....."

கூறுவதால் மீண்டும் சுயம்வரத்தை தமயந்தி விரும்பினாள் என்பதையும்,

"..என்செய்கோ மற்றிதனுக் கென்றான்.." எனக் கூறுமுகத்தால், இதற்கு என்ன செய்வது என நளனிடம், இருதுபன்னன் கேட்பதையும் புகழேந்திப் புலவர் சிறப்புறக் காட்டிச் செல்வார்.

ஆ. i. மீன் பிடிப்பவர் பறியின் உள்ளே போட்டு வைத்துள்ள வரால் மீன்கள் பறியினைக் கிழித்துக் கொண்டு நெற்பயிர்களிடையே ஓடுகின்ற பெரிய நாட்டிற்கு உரியவனே என நாட்டு வளப்பத்துடன் கூடிய இருதுபன்ன மன்னனை நளன் சிறப்பிக்கின்றான்.

மீன்பிடிப்பவர் பறியினுள் இடப்பட்ட வரால் மீன்கள் பறியினைக் கிழித்துக் கொண்டு, நெற்பயிர்களிடையே ஓடுகின்ற வளப்பம் பொருந்திய நாட்டை உடையவனே இதனை

"...பறிமீறி நெல்லிற் பருவரால் ஓடும் நெடுநாடா...."

எனப் புகழேந்திப் புலவர் சிறப்பிப்பதைக் காணலாம்.

ii. தமயந்தி ஆனவள், குறைவு எதுவுமில்லாத கற்பினை உடையவள். தன்னைக் கொண்டவனுக்கு அல்லாமல் பிறனிடத்தே தன் மனதைச் செலுத்தாத ஏந்திழையாள். அவள் இந் நாளில் இத்தகைய சொல்லினைச் சொல்லுதல் கூடுமோ? கூறியிருக்கமாட்டாள் என்ற கருத்துப்பட நளன், இருதுபன்னனுக்குக் கூறினான்.

'குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையாள்....'

எனக் கூறுமுகத்தால் தமயந்தியின் பெண்ணின் பெருமையை கற்புச்சிறப்பை புகழேந்திப்புலவர் எடுத்துக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

இ. மதநீரைச் சொரிகின்ற யானையைப் போன்றவனான அயோத்தி மன்னன், புரோகிதன் கூறிய வார்த்தைகளை வாய்மை என்றே மதித்தான். அதனை "முன்னர் சுயம்வரம் நடந்த நாளிலே அவள் என்மேல் எறிந்த பூமாலை, தவறிப்போய் எழிலுடைய நளனது மேலாக விழுந்துவிட்டது. என்பதை நீ அறிவாயாக. அன்று பிழைபட நிகழ்ந்ததற்குக் காரணம்தான் இத்தகைய இரண்டாம் சுயம்வரம் அல்லவோ?" என்று அயோத்தி மன்னன் தன் முடிவை நளனுக்குக் கூறினான்.
இதனை

**"என்மேல் எறிகின்ற மாலை எழில்நளன்றன்**
**தன்மேல் விழுந்ததுகாண் முன்னாளில்...."**

எனக் கூறுவதன் மூலம் முன்னைய சுயம்வரத்தில் தமயந்தி தன்னை விரும்பி எறிந்த மாலை தவறுதலாக நளன் மேலாக விழுந்தது எனக் கூறுவதன் மூலமாக இரண்டாம் சுயம்வரத்தை விரும்பி அங்கு செல்ல ஆயத்தமாக இருதுபன்னன் இருப்பதையும் செல்ல இருக்கும் விருப்பத்தின் முடிவையும் சிறப்புற எடுத்துக் காட்டுகிறார் புகழேந்திப் புலவர் அவர்கள்.

**5. இருதுபன்னன் இரண்டாம் சுயம்வரத்திற்குச் செல்ல வேண்டும் என முடிவு கூறியதைக் கேட்ட நளனின் கலக்கம் எவ்வாறு காட்டப்படுகிறது?**

★ இருதுபன்ன மன்னன் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரத்திற்குச் செல்லவேண்டும் என நளனிடம் முடிவு கூறுகிறான். இதனைக் கேட்ட நளன் பின்வருமாறெல்லாம் எண்ணிக் கலங்குகின்றான்.

★ "முன் செய்த தீவினையின் காரணமாக எல்லாமே இங்ஙனம் வந்து நிறை வேறுவதாயிற்றோ? அல்லது வண்டினம் மொய்க்கும் நெருங்கிய கூந்தலை உடையவ்வளாகிய தமயந்தி, என்னைத் தான் அறிந்து கண்டுபிடிப்பதற்காக இவ்விதம் செய்கிறனளோ? என்று ஏங்கி நிற்கிறான்.

★ குலமரபுக்குப் பொருந்தாத பேச்சுக்கள் உலகத்திலே இந்நாளில் சொல்லப்பட்டு விட்டதே? இது எவ்வகையினால் ஏற்பட்டதோ? இவ்வாறு உலகில் பொருந்தாத சொல்லாகிய இரண்டாம் சுயம்வரம் என்றொரு பேச்சும் எழுவதாயிற்றே என்று கலங்கி, ஏங்கி வருந்தும் நளனை ஆசிரியர் காட்டுகிறார்.

**6. நளன் தன் கடமையை உணர்வதும், இருதுபன்னனின் ஏவலை நிறைவேற்றுவதும் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?**

★ உலகிலேயே பொருந்தாத சொல்லாகிய இரண்டாம் சுயம்வரம் என்றதொரு பேச்சும் வந்துவிட்டதே எனக் கலக்கமடையும் நளன் தனது கடமையை உணர்கின்றான். இதனை

**"காவலனுக்குக் கேவற் கடன் பூ ண்டேன் மற்றவன்றன்**
**ஏவல் முடிப்பன் இனியென்று...."**
எனக் காட்டப்பட்டுள்ளது.

★ இருதுபன்ன மன்னவனுக்கு ஏவலானதொரு கடமையினை நான் மேற்கொண்டேன். அதனால் அம் மன்னன் ஏவலை இனிமேல் முடிப்பேன் என்று கடமையை உணர்கிறான். பெண்களுடைய மார்பகங்களிலே தன் மாலைகளில் இருக்கும் பூக்களில் இருந்து தேன் துளித்து விழும்படியாகிய மாலையைத் தரித்தவனாகிய முருகக்கடவுள் போன்ற நளமன்னன், நல்ல சாதிக்குதிரைகள் கொண்ட தேரினைப் புறப்படுவதற்கு ஆயத்தமாகப் பூட்டிக் கொண்டுவந்து இருதுபன்ன மன்னவன் முன் நிறுத்தினான் என நளன் தன் கடமைமையை உணர்ந்து, ஏவல் நிறைவேற்றுகின்ற செயல் காட்டப்படுகிறது.

★ 'பொம்' என்ற ஒலியோடு வண்டினம் ஒலி செய்ய, இனிதான தேனை ஒழுகிக் கொண்டிருக்கும் மாலையை அணிந்தவனாகிய நளன் **"ஒன்றாகிய ஒப்பற்ற சக்கரத்தை உடையதான கதிரவனின் தேர்"** என்று கூறத்தக்கதான, விரைந்து ஓடத்தக்கதொரு வெற்றி பொருந்திய உயர்ந்த தேரினைப் பூட்டிக் கொண்டு வந்துள்ளேன்.

இதனிடத்தே ஏறி அமருங்கள் என்று அயோத்தி மன்னனான இருது பன்னமன்னனிடம் நளன் கூறினான். இதனை

"ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் - மற்றிதற்கே
பொந்தேறு கென்றுரைத்தான்..."

எனப் புகழேந்திப்புலவர் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

இவ்வாறு நளன் தனது கடமையை உணர்ந்தமையும், ஏவலை நிறைவேற்றத் தேர்கொண்டு வந்தமை பற்றியும் காட்டப்பட்டுள்ளது.

**7. இருதுபன்னனும், நளனும் சென்ற தேர்ச் சிறப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?**
**(நளன் இருதுபன்ன மன்னனைக் கொண்டு சென்ற தேரின் வேகம் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?)**

★ அழகும், மணமும் உள்ள மாலைகளால் குறைவடையாத மென்மையான கூந்தலை உடையவனான தமயந்தியின் செயலினைத் தன் உள்ளத்தே ஆராய்கின்ற நளன் செலுத்திய தேரின் வேகம் பின்வருமாறு புகழேந்திப் புலவரால் காட்டப்படுகிறது.

★ தன் பழவினை வந்து நெருங்கியதாலே, தமயந்தியின் மேல் குறைவடையாத மையல் (விருப்பம்) கொண்ட அயோத்தி மன்னன் இருதுபர்னனின் சிந்தையைக் காட்டிலும் தேர் விரைவாகச் சென்று கொண்டிருந்தது எனக் காட்டப்பட்டுள்ளது. இதனைப் புலவர்,

"முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுச் சென்றதே..........."

எனக் கூறுவதன் மூலம் தேர் சென்ற விரைவினை மிக இலாவகமாகக் கூறுவார்.

இங்கே இருதுபர்ன மன்னன், நளனின் மனைவிபால் வைத்த மையல் கொண்டதன்மையான சிந்தையின் விரைவை எடுத்துக் காட்டுதல் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ இவ்வாறு பகைவர்களிடம் தோல்வி பெறாது எப்பொழுதும் வெற்றியே பெற்று விளங்கும் அயோத்திமன்னன் அவ்வாறு தேரின் மீது அமர்ந்து வருகின்றான். தேர்விரைவாக ஓடும்போது மன்னன் **என் மேலாடை வீழ்ந்துவிட்டது. அதனை எடுக்க** என்று கூறுகிறான். அவ்வாறு சொல்வதற்குள் கொடுமையைத் தரும் கலியின் சூதினாலே மயக்கம் கொண்ட நளன் கோலைக் கையில் கொண்டு செலுத்துகின்ற **குதிரைகள் நாலாறு காத தூரத்தினைக் கடந்துவிட்டன** எனப் புலவரால் நளன் செலுத்தும் தேரின் விரைவு காட்டப்படுவது மட்டுமன்றி நளன் தேர்த்தொழிலில் வல்லவன் என்பதையும் எடுத்துக் காட்டுவார் ஆசிரியர்.

**"மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்**
**நாலாறு காதம் நடந்ததே...."**

என்று ஆசிரியர் தேர் சென்ற வேகத்தைக் காட்டுதல் மெச்சத்தக்கதே. இவ்வாறு தேர்சென்ற வேகம் காட்டப்படுகிறது.

**8. பின்வரும் தலைப்புகள் நளவெண்பாவில் காட்டப்படும் விதம் பற்றி விளக்கம் தருக.**

**அ. இருதுபர்ன மன்னன் எண்ணிக் காணும் தொழிலில் சிறந்தவன் என்பது புலவரால் காட்டப்படும் விதம்.**

**ஆ. தொழில் மாற்றுதியோ? என அயோத்தி மன்னன் நளனைக் கேட்ட விதம்.**

**(நளனும் அயோத்தி மன்னனும் தம் கலைத்திறன்களை ஒருவருக்கொருவர் கற்பித்தமை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?)**

அ. நளனால் செலுத்தப்பட்ட தேர் மிக விரைவாகச் சென்று கொண்டிருந்தது. அப்போது இந்தத் தாழ்ந்த இடமாகிய தோட்டத்தில் இருக்கும் பெரிய தான்றிக் காய்களை எண்ணினால் அது பத்தாயிரம் கோடியாகும் என அயோத்தி மன்னன் கூறுகின்றான். எனவே எண்ணும் கலையில் மன்னன் சிறந்து விளங்கினான் என்பதை ஆசிரியர்

"இத்தாழ் பணையில் இருந்தான்றிக் காயெண்ணிற் பத்தாயிரங்கோடி பாரென்ன......"

எனக் கூறுமுகத்தால் மன்னன் இக்கலையில் சிறந்து விளங்கினான் என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

ஆ. விரைவாகத் தேரைச் செலுத்திச் செல்கின்ற நளன் தேர் செலுத்தும் தொழிலில் சிறந்தவன் என்பதை இருதுபன்னன் மதிக்கிறான். எனவே தேரிற் பூட்டிய குதிரைகளைச் செலுத்தும் உனது (நளனின்) தொழிலையும், எண்ணிக் கணக்கிடும் கலையில் சிறந்ததாகிய எனது (இருதுபர்ன மன்னன்) தொழிலையும் என்னுடன் மாற்றிக் கொள்கிறாயோ? என்று அயோத்தி மன்னன் கேட்டான்.

**9. அ. நளனைப் பீடித்திருந்த கலி நீங்கிய விதம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?**

**ஆ. நளனைப் பீடித்திருந்த கலி என்னும் துன்பம் ஏன் நீங்கியது எனக் கொள்ளக்கிடக்கிறது?**

**இ. அயோத்தி மன்னன் வீமன் நகரம் சென்றடைந்தமை காட்டப்படும் விதத்தைத் தருக?**

அ. வண்டுகள் ஆர்ப்பரிக்கும் வளப்பமான வயல்கள் சூழ்ந்திருக்கும் உழவர் நாட்டை ஆளுகின்ற எம் மன்னவனான குளிர்மையை உடைய மாலையைச் சூடுகின்ற சந்திரன்

சுவர்க்கி என்பன போற்றுகின்ற பாவாணனிடத்தே (பாடல்பாடுவோன்) அதற்கு முன் நிலைபெற்றிருந்த பசிநோயினைப் போல, காவலனாம் நளனிடத்தே நிலைபெற்றிருந்த கலியும் அப்போது அவனை விட்டு நீங்கிப் போய் விட்டது எனக் கூறப்பட்டுள்ளது இதனை

**"தண்டார் புனை சந்திரன் சுவர்க்கி கொண்டாடும்**
**பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே**
**காவலன்பால் நின்ற கலி"**

என மன்னனிடம் பீடித்திருந்த கலி நீங்கிய விதம் புகழேந்தியால் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஆ. ★ மன்னன் நளனிடத்தே நிலைபெற்றிருந்த கலி அவனை விட்டு நீங்கிப் போகப் பின்வருவன காரணமாக அமைந்தன எனலாம்.

★ இருதுபர்னன் நளனுக்குக் கற்பித்த வித்தை "**அட்ச இருதயம்**" என்பது. அவ் வித்தையானது பிறர் எண்ணத்தை அறிதலும் கண்டவற்றை எண்ணிக் காணலும் ஆகிய சக்தி உடையது.

★ இந்த வல்லமை நளனுக்கு, இருவரும் தம் தொழிலை அதாவது கலைத்திறனை ஒருவர்க்கு ஒருவர் கற்பித்ததனால் கிடைத்தது.

★ இவ்வல்லமை நளனுக்கு வந்து விட்டால் சொக்கட்டான் ஆட்டத்தில் அவன் வென்றுவிடுவான் என்பதனால் கலி நளனை விட்டு நீங்கியது.

★ அல்லது தன்னுடைய பகைமையை உணர்ந்து கொள்ளின் அதுவும் தனக்குக் கேடாகும் எனக் கலி கருதியிருக்கலாம் எனவும் கொள்ள இடம் உண்டு.

★ எனவே நளனுக்கு இவ்வல்லமை கிடைத்ததுவே கலி அவனை விட்டு நீங்கவேண்டி ஏற்பட்டது எனலாம்.

இ. போர்க்களத்தினை விரும்பி உயிருண்ண எழுகின்ற இயமனைப் போன்ற ஆண் யானையினோடு ஒப்புமை கொண்டவனாகிய அயோத்தி மன்னனான இருதுபர்னன், ஆமைகளின் முதுகிலே நண்டுகள் துயில் கொள்கின்ற அழகான பெரிய தன் நாட்டினைக் கைவிட்டு, வீமராசனது அழகிய நகரத்தைச் சென்றடைந்தான் என இருதுபர்னன் வீமன் நகரம் (குண்டின புரம்) சென்றடைந்தமை வர்ணனைச் சிறப்புடன் கூறப்பட்டுள்ளது.

"ஆமை முதுகில் அலவன் துயில் கொள்ளும்
காமர் நெடு நாடு கைவிட்டு"

என அயோத்தியை விட்டு நீங்கியமை பற்றி மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

**10. பின்வருவனபற்றி நளவெண்பாவில் கூறப்பட்டுள்ள விதம் பற்றி விளக்குக.**

**அ. வீமன் அரண்மனையில் இருதுபர்ணன் சென்ற விதம்.**

**ஆ. இருபர்ணனிடம் என்னிடத்தே வரவிரும்பிய காரணத்தை வீமன் கேட்கும் விதம்.**
**(வீமன் அயோத்தியைச் சிறப்பித்துக் கூறும் விதம்)**

**இ. இருதுபர்ணன் வீமனிடம் வந்த காரணத்தைக் கூறும் பாங்கு.**

அ. "வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயின்
முற்றத் திருத்தி........"

வெற்றிச் சிறப்புடைய தேரினை வீமராசனின் பெரிய அரண்மனை முற்றத்தே நிறுத்தி விடுகிறான் இருதுபர்ணன் என்பது இவ்வாறு காட்டப்பட்டுள்ளது.

"................முறைசெய்யும் கொற்றவர்க்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப் புக்கான்......"

இங்கே இருதுபர்ணன் தான் வந்திருப்பதனை வேந்தர்க்குக் கூறுமாறு வாயிற்காவலர்க்குக் கட்டளை இடுகிறான். அதன்பின் தனியாகவே மகிழ்வுடன் இருதுபர்ணன் அரண்மனையுள்ளே சென்றான் என்பது காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே 'தனிப் புக்கான்' என்பதன்மூலம் நளனாகிய தேர்ப்பாகனை வெளியே விட்டுவிட்டே செல்கிறான் என்பது இங்கு கொள்ளக்கிடக்கிறது. இவ்வாறு வீமனின் அரண்மனையுள் இருதுப்ர்ணன் சென்ற விதம் கூறப்பட்டுள்ளது.

ஆ. புதிதாக மலர்ந்த மணமுள்ள பூவில் தேனை நிறையக் குடித்துவிட்டுத் தாமரை மலரில் பொருந்தி உறங்குகின்ற வரிகளை உடைய வண்டானது மறுபடியும் எழுந்து கருநெய்தற் பூவினை விரும்பிச் செல்கின்ற பெரிதான நாட்டை உடையவனே! இதனை

**"கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின்
மன்னித்துயின்ற வரிவண்டு - பின்னையும் போய்
நெய்தற் கவாவும் நெடுநாட........."**

எனப் புகழேந்திப்புலவர் சிறப்பாகக் கூறுவார்.

நீ என்னிடத்தில் வருவதற்கு விரும்பியதற்கான காரணம்தான் என்னவோ? என்று வீமராசன், இருதுபர்ணனை நோக்கி (அன்போடு) கேட்டான்.

இ. தமயந்தியின் மேல் தன் உள்ளம் செல்கின்ற காரணத்தினாலே உண்மையைத் தெரிந்து கொள்ளாது புரோகிதனின் பேச்சை நம்பி வீமராசனிடம் சென்ற இருதுபர்ணன் வாசனையுள்ள மலர்மாலையை உடையவனே! **"இன்று உன்னைக் காணும் படியான ஓர் ஆசையினாலே நின்னிடத்தே யான் வந்துள்ளேன்"** என்று தான் வந்த காரியத்தை வெளியே தெரியாது மறைத்துக் கூறினான் எனக் காட்டப்பட்டுள்ளது.

இதனை,

"இன்றுன்னைக் காண்பதோ ராதரவாய் யானிங்ஙன்
மன்றல் மலர்த்தாராய் வந்தடைந்தேன்...."
எனத் தான்வந்த காரியத்தை மறைத்துக் கூறும் இருதுபர்ணனின் விடையினைக் காணலாம்.

**11. நளவெண்பா என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

**அ. நளன் மடைப்பள்ளி புகுந்தமை காட்டப்பட்டுள்ள விதம்.**

**ஆ. நளன் மடைப்பள்ளி புகுந்தபோது ஏற்பட்ட சிறப்பு.**

அ. எருமைகளின் கடைவாயிலே கரு நெய்தற் பூக்கள் மலர்ந்து கொண்டிருக்கும் வளப்பமான நிடத நாட்டிற்கு உரியவனாகிய நளன், முதன்மையான நெடிய தேரிலே பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து அவைகளைக் களைப்பாறச் செய்கிறான்.

"ஆதி நெடுந்தேர்ப் பரிவிட்ட வையாற்றி........"
எனக் கூறப்பட்டிருத்தலால் இதனை அறியலாம்.

பின்பு குற்றமற்ற முறையில் சோறாக்க வேண்டிய தன் கடமையினை முடிப்பதற்குக் கருதி மடைப்பள்ளியினுள்ளே செல்கிறான்.

"கோதில் அடிசிற்குறை முடிப்பான்......."

என்பதன் மூலம் நளன் சோறாக்குவதற்குச் சென்றவிதம் பற்றிக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நளன் மடைப்பள்ளி புகுந்தமை கூறப்பட்டுள்ளது.

ஆ. ஆதியாகிய மறைநூல்கள் அனைத்தையும் ஆராய்ந்தறிந்த நீதி நெறியாளர்களான சான்றோர்களின் உள்ளத்தைப் போல பொன்மயமான தேரின் சிறந்த பாகனாகிய நளன் புகுந்த அந்த

வீடும் எதையும் எவரும் கொண்டு நிரம்பாமலே எல்லாம் தாமே வந்து நிரம்பியதாக நளன் புகுந்த இடம் சிறப்படைந்தது எனக் காட்டப்பட்டுள்ளது. (இந் நிகழ்வு நளனுக்குத் தேவர்கள் முன்தந்த வரத்தின் பயனால் நிகழ்ந்தது எனலாம்)
இவ்வாறு நளன் புகுந்த இடம் நிரம்பியதை நீதி நெறியாளர்களின் நெஞ்சத்துடன் புலவர் ஒப்பிடுதல் இங்கு சிறப்பாக அமைந்துள்ளது. நீதி நெறியாளர்களின் உள்ளம் நிறைந்துள்ளது போன்று மடைப்பள்ளி காணப்படுகிறது. இதனை

**"ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துணர்ந்த**
**நீதி நெறியாளர் நெஞ்சம் போல்........."**

இவ்வாறு நளன் புகுந்த சிறப்பு புகழேந்தியால் கூறப்பட்டிருத்தல் மெச்சத்தக்கது.

இதன் மூலம் நளன் புகுந்த வீடு எதனையும் எவரும் கொண்டு வராமல் தானே நிரம்பி உள்ளமை கூறப்பட்டிருக்குமாற்றை அறிந்து கொள்ளலாம்.

**12. 'நளவெண்பா' என்ற பாடற்பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

**அ. அயோத்தி நாடு, அயோத்தி மன்னன் சிறப்பிக்கப்படும் தன்மை**

**ஆ. நிடதநாடு நளமன்னன் சிறப்பிக்கப்படும் விதம்.**

**அயோத்தி நாட்டின் சிறப்பு**

அ. ★ ஏரடிக்கும் உழவர்கள் தம் கைக்கோலை உயர எடுக்கையிலே, இனிதான தேன் பூங்கொத்துக்களைப் பீறிக்கொண்டு ஒழுகுகின்ற, மேகங்கள் தவழும் சோலைகளையுடைய கடற்கரை கொண்ட நாடு அயோத்தி ஆகும்.

- ★ புதிதான மணமுள்ள பூவில் தேனை நிறைய அருந்தி விட்டுத் தாமரை மலரிற் சேர்ந்திருந்து உறங்கிய வரிகளையுடைய வண்டானது மறுபடியும் எழுந்து கரு நெய்தற் பூவினை விரும்பிச் செல்கின்ற பெரிய நாடு அயோத்தியாகும்.
- ★ ஆமைகளின் முதுகிலே நண்டுகள் துயில் கொள்கின்ற நீர்வளத்தையுடைய அழகான பெரிய நாடு அயோத்தி நாடாகும்.

## அயோத்தி மன்னனின் சிறப்பு

- ★ கொடைச் சிறப்புடைய மன்னன்.
- ★ பகைவர்களுக்குத் தோல்வியடையாது வெற்றி கொண்டு விளங்குபவன் இதனைத் **"தோலாமை மேல் கொண்டான்"** எனக் கூறப்பட்டுள்ளது.
- ★ செங்கோன்மை உடையவன்.
- ★ அழகு ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாலையை அணிந்தவன்.
- ★ பகைவரைச் சினந்து அழிக்கின்ற மின்னல் போல ஒளி செய்யும் வேற்படையை உடையவன்.
- ★ **"இகல் சீறும் மின் செய்த வேலான்..."** எனக் கூறப்பட்டுள்ளது.
- ★ மதநீரைச் சொரிகின்ற, யானையைப் போன்ற மதம் பொருந்தியவன்.
- ★ மீன் பிடிப்பவர் மீனை இட்டு வைத்துள்ள பறியினைக் கிழித்துக் கொண்டு, பருத்த வரால் மீன்கள் நெற்பயிர்களிடையே ஓடுகின்ற பெரிய நாடு அயோத்தி, அதற்கு இருதுபர்னன் மன்னன் என்ற சிறப்பு மேலும் மெருகூட்டியது.

## ஆ. நிடதநாடு சிறப்பிக்கப்படும் விதம்.

- ★ பெண்களுடைய மார்பகங்களிலே தன் மாலையில் உள்ள பூக்களில் இருந்து தேன் துளித்து விழும்படியான மாலையைப் பூண்டவன் நளன் ஆவான்.

★ 'பொம்' என்னும் ஒலியோடு வண்டினம் ஒலி செய்ய இனிதான தேனை ஒழுகிக் கொண்டிருக்கின்ற மாலையை அணிந்தவன் நளன்.

★ வண்டுகள் ஆர்ப்பரிக்கும் வளமான வயல்கள் சூழ்ந்திருக்கும் உழவன் நாட்டை ஆளுகின்ற எம் மன்னவனான நளன்.

★ எருமைகளின் வாய்க் கடையிலே கரு நெய்தற் பூக்கள் மலர்ந்து கொண்டிருக்கும் வளப்பம் பொருந்திய நிடத நாட்டுக்குரியவன் நளன் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இ. நளனின் சிறப்பு காட்டப்படும் விதம்.

★ தனது ஏவல் செய்யும் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றும் உள்ளமுடையவன்.

★ சிந்தையிலும் வேகமாகத் தேர் செலுத்தும் வல்லமையுடையவன் **"நிந்தை யினுங் கடுகச் சென்றதோ"**

★ நாள்தோறும் செய்யும் வேலைகளை செய்து முடிக்கும் எண்ணமுடையவன். குற்றமில்லாத வகையில் சமையல் செய்து வைப்பவன்.

★ நளன் புகுந்த சமையற் பள்ளி உணவினால் நிரம்பியது என நளனின் சிறப்புத் தன்மை காட்டப்படுகிறது.

**"யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப் பாகன் புக்கமனை"**

என நளனின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

# 20. வீடற்றவன் (நாவல்)

1. ''வீடற்றவன்'' என்னும் நாவலை ஆதாரமாகக் கொண்டு தோட்டத் தொழிலாளர்படும் அவலங்களை விளக்குக?

(1998 டிசம்பர் பரீட்சை வினா)

(தோட்டத் தொழிலாளரது துன்பியல் வாழ்வின் ஒரு சிறுபகுதியைக் காட்டுவதே ''வீடற்றவன்'' நாவல் விளக்குக)

(கண்ணீரால் கறைபட்டுப்போன தோட்டத் தொழிலாளர்களின் சரிதத்தின் சிறுபகுதியே ''வீடற்றவன்'' நாவல் விளக்குக)

(இந்திய வம்சாவழியினரான மலையகத் தொழிலாள மக்களது வஞ்சிக்கப்பட்ட வாழ்க்கையின் சிறுபகுதியைக் காட்டுவதே ''வீடற்றவன்'' நாவல் விளக்குக.)

❖ மலையகத் தொழிலாளர் ஒழுங்காக வசிப்பதற்கு ஏற்ற அடிப்படைத் தேவையான வீட்டு வசதி இன்மை.

❖ ஐம்பது வருடத்திற்கு முன்கட்டிய பழைய காலத்து லயன்கள், தார் பூசிய கூரைத் தகடுகள், மழையில் இருந்து தப்புவதற்கு விராந்தையின் அரைச்சுவருக்கு மேல் உரச்சாக்கு மரவாடமும், காற்றுக்கு கூரை அடித்துக்கொண்டு போகாதபடி மணல் மூடைகள் போடப்பட்டிருக்கும் வீட்டின் பரிதாபகரமான தோற்றம்.

❖ லயன்கள் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் வைத்திய வசதி அற்றநிலை. (நீலகிரியில் வைத்திய வசதி இன்றி நோயாளர் தலவாக்கலைக்குச் செல்லும் நிலை)

❖ தோட்ட நிர்வாகிகள் இளம் பெண்கள் மேல் காட்டுகின்ற சேட்டைகள். (அலமேலுவிடம், பெரிய கங்காணி மகன் சின்னையா அவளை வழிமறித்துப் பேச்சுக்கொடுத்தல்)

❖ நிர்வாகம் செய்யும் தவறைத் தட்டிக்கேட்கும் தொழிலாளர்களுக்குப் பத்துச்சீட்டு வழங்கி தோட்டத்தை விட்டு விலக்குதல், துரத்துதல்.

- பழனியப்பன் தோட்டத்துப் பெண்ணை (அலுமேலுவை) அடித்தான் எனக் குற்றம் சாட்டிப் பத்துச் சீட்டு வழங்கல், தோட்டத்தை விட்டுத் துரத்துதல்.

- ராமலிங்கம் பத்துச் சீட்டுக்களைப் பெரியசாமியிடம் கொடுத்தல். நீங்கதான் என்னே காப்பாத்தோணும் ரொம்ப கஸ்டப்பட்டு போயிட்டன் என்றான். இவ் வார்த்தையில் குடும்பப் பாரம், வறுமை, பசிக்கொடுமை, ஏமாற்றம் என்பன அவனைக் கெஞ்சும்படி செய்தன.

- கூலிக்காரனுக்குப் பொண்டாட்டியா என்பதற்கிணங்க வாழ்க்கையின் இன்பத்தை ராமலிங்கத்தால் நுகரமுடியாத நிலை.

- தோட்டத்தில் நடக்கும் அட்டூழியங்களை வாய்விட்டுச் சொல்ல முடியாத நிலையில் தொழிலாளர்கள் புழுங்கினார்கள்.

- அநீதிகளுக்கு முடிவுகாணச் சங்கத்திற்கு ஆட்சேர்க்க முடியாத நிலை.

- உண்ணும் உணவின் தரம்.
பழைய சாதத்தை அவசரஅவசரமாகச் சாப்பிட்டாள் கமலம். பின் கொழுந்தெடுக்கப் புறப்பட்டாள்.

- தோட்ட நிர்வாகத்திற்குத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிக் கோள் சொல்லும் ஒற்றர் படைகள். (வேவு பார்க்கும் படைகள்)

- சங்கத்தில் சேர்ந்திருப்பதைத் துரைக்கு, நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தாது இருக்கும் நிலை அன்றேல் தோட்ட நிர்வாகம் பத்துச்சீட்டு வழங்கும் நிலைமைகள்.

- பனித் தண்ணீர் பட்டுக் கைகள் விறைக்கும் நிலை. ஆனால் இயந்திரம் போல் வேலை செய்யும் பரிதாபகரமான நிலைமைகள்.

- சங்கத்தில் சேர்ந்தவர்கள் தோட்ட நிர்வாகத்தால் பழிவாங்கப்படல் கல்வாத்துப் பிழையென்று கணக்குப்பிள்ளை ராமலிங்கத்தை வஞ்சித்தல். ராமலிங்கம் மலையை விட்டு இறங்குதல், லயம் செல்லுதல்.

- முதல் நெறுவைக்கு இருபது றாத்தல் கொழுந்து எடுக்க வேண்டும். முடியாதவர்கள் லயத்துக்குப் போ என கங்காணி கூறுகின்ற அடாவடித்தனம், வஞ்சித்தல், கசக்கிப்பிழிதல்.

- நீலகிரித் தோட்டத்தை நடத்தும் சட்டதிட்டங்கள் அதை ஒரு துன்பக் கேணியாக மாற்றின. ''நின்றால் குத்து விழுந்தால் உதை" என்ற பழமொழி முதன்முதல் நீலகிரித் தோட்டத்தில் தான் உருவாகியிருக்க வேண்டும் என்ற கூற்று இதைத் தெளிவுறுத்தும்.

- கையெழுத்து தெரியாத நேரம், அதிகாலையில் மலைக்கு வேலைக்குப் போய் திரும்பும் போது விளக்கு வைத்துப் போகும். இதுதான் இவர்களின் இருண்ட வாழ்க்கை.

- பத்துச்சீட்டு வழங்கப்பட்டவர்கள் தாம் வாழ்ந்த தோட்டத்திற்கு வர முடியாத நிலை. வாழ்ந்த மண்ணில் கால் வைக்க முடியாத நிலை.

- பழனியப்பன் தாயை அலமேலுவைப் பார்க்கத் தோட்டத்திற்கு வரமுடியாத நிலையும் அதனால் ராமலிங்கம் குடும்பம் இம்சிக்கப்படல்.

- நிர்வாகம், தொழிலாளர் மேல் பகைத்தால் இஸ்டோர், பங்களா, ஆபீஸ் இவைகளை உடைத்து விட்டுப் பொலிஸைக் கூப்பிட்டு அவர்களைத் தொந்தரவு செய்யச் சொல்லுதல்.

- தேயிலைத் தூளை அட்டாவில் போட்டுவிட்டு காவல்காரனை விட்டுப் பிடிப்பார்கள். அவர்கள் மேல் அபாண்டமாகக் குற்றம் சுமத்துதல்.

- வெயில், மழை, பசி, பட்டினி, சுகதுக்கம் எல்லாம் அவனுக்கு ஒன்றுதான். (ராமலிங்கத்துக்கு) இது தான் தொழிலாளரின் நிலை எனக் காட்டப்படுகிறது.

- தோட்டத்தில் வாழ்ந்தவன் பத்துச்சீட்டுப் பெற்றுவிட்டால் தோட்டக் கக்கூஸ் கூட உபயோகிக்க முடியாத மோசமான நிலை.

- தோட்டத் தொழிலாளரின் படுக்கை வசதியற்ற நிலை. படுப்பதற்குக் கூடப் போதியதாக அவர்களின் வீடு இருக்கவில்லை.

- பெண்கள் நாற்பது இறாத்தல் கொழுந்து எடுத்தால் ஒரு நாள் பேர் கிடைக்கும். அறுபது அடி கான், முன்நூற்றி ஐம்பது மரம் கவ்வாத்து, கால் ஏக்கர் அறுகம் புல் வெட்டினால் ஆண்களுக்கு ஒரு நாள் பேர் தான் செக்ரோலில் விழும் பரிதாபகரமான அவல நிலை.

இவ்வாறாக வீடற்றவன் நாவலில் தொழிலாளர் படும் அவஸ்தைகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

2. ''வீடற்றவன்'' நாவலில் வரும் இராமலிங்கத்தின் குணநலன்களை ஆராய்க?

(1999 டிசம்பர் பரீட்சை வினா)

❖ தவறுகளைக் கண்டபோது, அவற்றுக்கெதிராகக் கிளம்பும் மனோபக்குவமும், மனப்போராட்டமும் கொண்டவன். எதனையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் உள்ளமுடையவன்.
அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பவன்.

❖ கவ்வாத்துச் செய்ததில் பிழையெனக் கங்காணி கூறியபோது பயமின்றி அவனை எதிர்த்தவன். ஏனைய தொழிலாளர்களுக்கு இதனைத் தெளிவுபடுத்தியவன். நீதியை வெளிப்படுத்துபவன்.

❖ தனது தாயின் மீது அளவிலாப் பாசம் கொண்டவன். தனது மனைவி, சுற்றம், தொளிலாளர் மீது அன்பும், பரிவும் கொண்டவன்.

❖ தோட்ட நிர்வாகத்தினரின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிப்பவன். போர்க்கொடி உயர்த்துபவன். நீதி வேண்டுபவன்.

❖ பிறர் செய்யும் தவறைச் சுட்டிக்காட்டி நியாயத்திற்காக வாதாடுபவன். தொளிலாளரின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதற்காகச் சங்கத்தில் சேர்ந்தவன். தொளிலாளரின் உரிமைகள் பேணுவதற்காக தனது உழைப்பையே உதறியவன்.

❖ எதிர்காலத்தில் நிகழ இருக்கும் அநீதிகளையும், தவறான போக்குகளையும் சீர்தூக்கிப் பார்ப்பவன்.

❖ தனக்கு எதிரானவர்களை மன்னிக்கும் மனோபாவமும், பிறருக்கு உதவும் எண்ணமும் கொண்டவன்.

இவ்வாறாக ராமலிங்கத்தின் குணநலங்கள் வீடற்றவன் நாவலில் காட்டப்பட்டுள்ளது.

3. ''வீடற்றவன்'' நாவலாசிரியர் நடப்பியலுடன் கூடிய வர்ணனையோடு பாத்திரங்களை, லயத்தின் சூழலை, கதையை வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் வல்லவர் என்பதனைத் தெளிவுபடுத்துக.

❖ ராமலிங்கத்தை அறிமுகம் செய்யும் பாங்கு.

பிரயாணி கறுத்த நடுத்தரமானவன். கதர் வேஷ்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்தான். முகத்தில் பருக்கள். ஹிட்லர் மீசை, சுறுசுறுப்பான கண்கள், அவன் நடையில் ஒரு திடம்.

❖ லயன்களை அறிமுகம் செய்யும் பாங்கு.

ஐம்பது வருடங்களுக்கு முன் கட்டிய பழைய காலத்து லயன்கள், தார் பூசிய கூரைத் தகடுகளைத் தாங்கி நிற்க அஸ்திவாரத்திலிருந்து நாலடி கற்சுவர். அதற்குமேல் மண்சுவர். மண்பகுதி சுவர்களில் உள்ள ஓட்டை வழியாகப் புகை போவதற்கு வசதியாக இருந்தது.

எந்த நேரமும் அடித்துக் கொண்டிருக்கும் காற்றிலும், மழையிலிருந்தும் தப்புவதற்கு விராந்தையின் அரைச்சுவருக்கு மேல் உரச்சாக்கு மரவாடமும், கூரை காற்றுக்கு அடித்துக் கொண்டு போகாதபடி மணல் மூடைகளும் போடப்பட்டிருந்தன.

❖ அலமேலுவை அறிமுகம் செய்யும் பாங்கு.

பட்டுப்போன்ற பெண்குரல். அவள் குரல் சொல்லியபடி வயது இருபத்தாறுதான் இருக்கும். தண்ணி பட்டால் தண்ணி தெறிக்கும் என்ற தோட்டக்காட்டுப் பழமொழிக்கு உதாரணமாக இருந்தது.

அவள் இளமையை மறைத்தும், மறைக்காமலும் சேலையை அணிந் திருந்தாள். கருகமணியைச் சரடுபோல் மூன்று கண்ணிகளாய்ப் பின்னி பொட்டுடன் கழுத்தில் ஒட்டக் கட்டியிருந்தாள். இதை அழகுபடுத்தும் முறையில் இரு கரங்களிலும் கரு வளையல்கள். பாத நடுவிரல்களில் இரட்டை வெள்ளி மிஞ்சிகள்.

நீலகிரியின் தேவதை போல் காணப்பட்ட அவள் பெயர் அலமேலு எனக் கூறுவார். அலமேலுவை அந்தத் தோட்டத்தில் கண்டு மயங்காத பேர்களில்லை. அவளுடைய முகராசி அவள் கணவன் முத்துசாமிக்கே ஆபத்தாக முடிந்தது என அழகைக் காட்டுவார்.

❖ பழனியப்பனை அறிமுகம் செய்யும் பக்குவம்.

பழனியப்பன் கண் நிறைந்த வாலிபன், வயதிற்கு ஏற்ற முறுக்கு, உடலும் உயரமும், கண்ணும் மூக்குமாயிருந்தான்.

❖ பெரியசாமியை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தல்.

பெரியசாமிக்கு ஐம்பது வயதிற்கு மேலிருக்கும். மாநிறம். நடுத்தர உயரமானவர். பரந்த மார்பு. நரைகண்ட கெலுத்தி மீசை. முண்டாசு கட்டுவதற்கு வசதியாய் கட்டைக் கிராப்பு வெட்டியிருந்தார். வைரக்கல் கடுக்கண் விளக்கு வெளிச்சத்தில் மின்னியது. கை நிறையத் தங்க மோதிரங்கள். மல்வேட்டியும், காஷ்மீர் பச்சைச் சால்வையும் அணிந்திருந்தார்.

❖ நீலகிரித் தோட்டத்தின் சூழலை அறிமுகம் செய்து வைக்கும் பாங்கு.

உயர்ந்தும் தாழ்ந்தும் திரண்டோடும் மட்டக் கொழுந்து மலை பச்சை வெல்வெட் விரித்தது போல் மினுமினுத்துக் கொண்டிருந்தது. பச்சையிலும் எத்தனையோ வித பச்சை இது தங்கம் கலந்த குளுமையின் கண் குளிர்ந்த பச்சை குமரித் தன்மையோடு விளங்கும் பச்சை... ரம்யமான நீலகிரி மலைச்சாரலில் கடைக்கோடியில் ஆரோகணித்திருக்கும் தோட்டம். பச்சை திரண்டு பொங்கும் இந்திரத் தோற்றத்தோடு இருந்தும் மக்களுக்கு அது ஒரு நரகமாயிருந்தது.

ஓயாது சிணுங்கிக் கொண்டிருக்கும் மழை, இடைவிடாது பெருமூச்சுவிடும் காற்று. கருமுகில் கூட்டம். இவையெல்லாம் ஒருங்கே சேர்ந்தால் தான் நீலகிரியின் இரவு பூரணமாகும். நாய்கள் கூட இச் சூழ்நிலையைப் பொறுக்க முடியாமல் கோழிக் கிடாப்புக்குக் கீழ் முடங்கிப் படுத்தன. இவ்வாறு வர்ணனையுடன் கூடிய அறிமுகத்துடன் வாசகர்களைக் கதையுள் உள்ளீர்ப்புச் செய்வதில் ''வீடற்றவன்'' நாவலாசிரியர் வல்லவராகத் திகழ்கிறார்.

**4. தோட்ட நிர்வாகம் கையாண்ட அடக்கு முறைகளின் பின்னணியில் தான் வீடற்றவன் நாவல் மிளிர்கிறது விளக்குக?**

**(தோட்ட நிர்வாகத்தினருக்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள பாரிய இடைவெளியை (முரண்பட்ட தன்மையை) விளக்குவதே வீடற்றவன் நாவல் விளக்குக.)**

❖ சங்கத்திற்கு ஆள் சேர்த்தபடியால் ராமலிங்கத்திற்குத் தோட்ட நிர்வாகம் பத்துச் சீட்டு வழங்குகிறது. அவன் தனது தோட்டத்தில் இருக்க முடியாது நீலகிரித் தோட்டத்திற்கு வருகிறான். இதன் பின்னணியில் கதை தொடர்கிறது.

❖ பெரியசாமி எட்கங்காணி, சங்கத் தலைவர் அவர் மருமகன் முருகப்பன், காரியதரிசி, ஒண்டிமுத்து, பெரிய கணக்கப்பிள்ளை இவர்கள் வைத்ததே சட்டம். எனவே தோட்டத்தில் நடக்கும் அட்டூழியங்களை வாய் விட்டு சொல்ல முடியாத நிலையில் தொழிலாளர்கள் புழுங்கினார்கள். இதன் தொடர்பிலேயே இக்கதை விரிகிறது.

❖ இந்தத் தோட்டத்தில் தொழிலாளர்கள் படும் நரக வேதனையில் இருந்து அவர்களை மீட்க வேண்டும். அதனால் தனக்கு ஆபத்து வந்தாலும் பாதகமில்லை. இதனால் ராமலிங்கத்திற்குப்பத்துச்சீட்டு வழங்கப்படுகிறது. அவன் வேலையை இழக்கிறான். இதன் பிரதிபலிப்பே இக்கதையின் தொடர்பாகும்.

❖ அல மேலு கொழுந்து வெட்டி விட்டு மலைக்குத் திரும்பும்போது பெரிய கங்காணி மகன் சிவனையா அவளை மறித்துப் பேச்சுக் கொடுக்கின்றான். இதன் எதிரொலியாக அவளைக் கண்டித்த பழனியப்பனுக்கு தோட்ட எட்கங்காணி பெரியசாமி பத்துச் சீட்டு வழங்கி தோட்டத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றான். இதன் பின்னணி கொண்டதே இக்கதை.

❖ ராமலிங்கம் சங்கத்திற்கு ஆட்சேர்ப்பதை அறிந்த தோட்ட நிர்வாகம் கணக்குப்பிள்ளை மூலம் அவனை வஞ்சம் தீர்க்கிறார்கள்.
மிச்சம் மோஸ்மான வேலே ராமலிங்கம்
கவ்வாத்து வெட்டத் தெரியாதா? லயம் போ மனுசன்.

- கமலமும், அலமேலுவும் முதல் நிறுவைக்கு இருபது றாத்தல் கொழுந்து எடுக்காததால் லயத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். இவ்வாறு தோட்ட நிர்வாகத்தினரின் கெடுபிடிகளே நாவலின் பின்னணிக்கு கதைக் கருக்களாகிவிட்டன.

- பழனியப்பன் தன் தாயைப் பார்க்க வந்த குற்றத்திற்காக ராமலிங்கத்தை மனைவியிடம் இருந்து பிரிக்கத் தோட்ட நிர்வாகம் முனைகிறது. இவற்றின் பிரதிபலிப்பே நாவலின் எழுச்சியாகவும் அமைகிறது.

- தோட்ட நிர்வாகத்தினருக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள பாரிய இடைவெளியானது பகை கொண்ட விரிசலாக மாறுகிறது. இதன் எதிரொலி தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினரால் வஞ்சிக்கப்பட்டார்கள். இதன் பின்னணியே ''வீடற்றவன்'' நாவலின் தோற்றமும் தொடர்ச்சியுமாகும்.

- **தொடர்ச்சியாகத் தோட்டங்களில் நடைபெற்று வரும் கெடுபிடிகள், அடக்குமுறைகள், வஞ்சனைகள், தண்டனைகள் என்பன நிறைந்த மலையகத் தமிழர்களின் கையறு நிலையினை ''வீடற்றவன்'' நாவல் பின்னணியாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.**

எனவே புதிய சவால்களை எதிர்கொள்ளும் திடம் ஊன்றும் நேரத்திலும் தொடர்புகளை அறுக்கும் தோட்ட நிர்வாகத்தையும், தோட்டங்களுக்குள் தொழிற்சங்கங்கள் வேரூன்றி விடாமல் தோட்ட நிர்வாகம் கையாண்ட அடக்கு முறைகளையும் கொண்ட பின்னணியில்தான் ''வீடற்றவன்'' நாவல் விரிகிறது எனக் கூறின் மிகையாகாது.

**5. நாவலாசிரியர் ஸி.வி.வேலுப்பிள்ளையின் ''வீடற்றவன்'' என்ற நாவலின் தலைப்பு எவ்வகையில் பொருத்தமானது என்பதை விளக்குக?**

- தோட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினரால் வஞ்சிக்கப்பட்டு பத்துச் சீட்டு வழங்கப்பட்டுத் தோட்டத்தில் வாழமுடியாது கலைக்கப்பட்ட வகையைக் காட்டுகிறது இந்நாவல். எனவே தொழிலாளர் தான் வாழ்ந்த மண்ணை விட்டு வெளியேறும் நிலை.

❖ தாம் வாழும் நீண்ட லயன்களின் குறைபாடுகள், துரைமார் ராஜ்யத்தின் கொடூரமான அடக்குமுறையும், பிழைக்க வந்த இடம் என்ற தொழிலாளரின் நிலைப்பாடும் தொழிலாளரின் வாழ்வில் இருள் தோன்றக் காரணமாயிற்று என்ற பரிதாபகரமான நிலை.

❖ வீடு என்ற ஒன்று இன்றி ஐம்பது வருடத்திற்கு முன்கட்டிய பழையகாலத்து லயன்கள், தார் பூசிய கூரைத் தகடுகள். தொழிலாளர் வாழ்வது வீடுகள் அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறது.

❖ தோட்டத்துரையை அல்லது பெரிய கங்காணியை தங்கள் ரட்சகராக கருதிய தொழிலாளரது மனோபாவமானது பிழைக்க வந்த இடம் என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தியது. இது தோட்ட தொழிலாளர்கள் தமக்குச் சொந்த நிலமின்றி, வீடின்றி தம் உதிரத்தை மலைநாட்டின் செழிப்பிற்கு உரமாக இட்டு வெறுமையானமையை இந் நாவல் காட்டுகிறது.

❖ வாழ்க்கையில் எந்தச் சுகத்தையும் அனுபவிக்காது வாழ்நாள் பூராகவும் துன்பம் கொண்ட உள்ளத்தினரால் வீடற்று, நாடற்று நிற்கும் பரிதாபகரமான நிலையை இந்நாவல் காட்டி நிற்கிறது.

❖ இந்தியாவில் இருந்து வசதி பெறும் ஆசையில் நாடிழந்து, வீடிழந்து வந்த இம்மக்கள் தாம்எண்ணிவந்த ஆதங்கம் எல்லாம் தவிடுபொடியாக, வாழ வழிதெரியாது நிற்கும் அவல நிலையும் காட்டுமிராண்டித்தனமான தோட்ட நிர்வாகத்தினரின் அடக்குமுறைகளையும் அப்பட்டமாக எடுத்துக்காட்டி நிர்க்கதியற்று நிற்கும் தொழிலாளரை உலகுக்குக் காட்டுகிறது இந்நாவல்.

❖ புதிய சவால்களை எதிர்கொள்ளத், தமது சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தோட்ட தொழிலாளர்கள் படுகின்ற அவஸ்தைகளுக்கு விடிவு காண எடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுபவர்களும், அவர்களின் துணையாட்களும், குடும்பமும் தோட்ட நிர்வாகத்தினரால் பத்துச் சீட்டு வழங்கப்பட்டு நீதி குழிதோண்டிப் புதைக்கப்பட்டுத் தோட்டத்தை விட்டே கலைக்கப்படுகின்ற இன்றைய மலையகத் தமிழர்களின் கையறு நிலையினை இந்நாவல் தெளிவுற எடுத்துக் காட்டுகிறது.

❖ இவ்வகையில் நோக்கும்போது தோட்ட தொழிலாளர்களின் நாடற்ற, வீடற்ற, தனக்கென மண்ணற்ற எதுவுமற்ற நிர்க்கதியான, கையறு நிலையினைச் சுட்டிக்காட்டும் ''வீடற்றவன்'' என்ற தலைப்பு இந்நாவலுக்கு மிகப் பொருத்தமானதே எனக் கூறலாம்.

**6. வீடற்றவன் என்ற நாவலை மண்வாசனை (பேச்சுமொழி) நம்பிக்கைகள் கொண்டதாக அமைந்த பெருமை ஸி.வி.வேலுப்பிள்ளைக்கு கைகூடியுள்ளது ஆராய்க.**

❖ ''வீடற்றவன்'' என்ற நாவலை ஆசிரியர் மலையக மண்ணைக் களமாகக் கொண்டே அமைத்துள்ளார். மலையகத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் நேரடியாகப் பங்கு பெறுபவர்களாக வாசகர்களைக் கவரும் பாங்கில் மலையக மண்வாசனை பொருந்தக் கதையை வளர்த்துச் செல்கிறார்.

❖ கதையில் எல்லா இடங்களிலும் மலையக மக்களது பேச்சுமொழி இடம்பெற்றுள்ளது. மலையகத்தில் பேசப்படுகின்ற சொற்பிரயோகங்கள் செறிந்துள்ளன.
கொஞ்சம் குடிங்க அத்தே, இன்னும் ஒரு மொடக்கு குடிச்சிருங்க. கவ்வாத்து வெட்டிவெட்டிக் காய்ப்புக் காய்ந்த கையில் யோக ரேகைகள் அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. தம்பி வெள்ளைக்காரனை நம்பி கைமோசம் போயிட்டோம்.

❖ வெள்ளைக்காரன் தோட்டத்திற்கு பொழைக்க வந்துட்டோம் கொஞ்சம் கவனமா இருக்கணும் என்ற வார்த்தைகளின் ஊடாக மண்வாசனை பொழியப்பட்டபோதும் கூட, அநீதிக்கு எதிராக வாய் திறந்து பேசமுடியாத தோட்டத் தொழிலாளர்களது பரிதாப நிலை காட்டப்படுகிறது.

❖ சங்கத்திற்கு ஆள் சேக்கலன்னு கற்பூரத்தைத் தொட்டுக்குடு பேச்சு மொழியினூடே தோட்ட தொழிலாளர்களது நம்பிக்கைகளையும் இடையிடையே தொட்டுக்காட்ட ஆசிரியர் தவறவில்லை எனலாம்.

❖ தோட்டத் தொழிலாளர்களது பேச்சுமொழியை மட்டுமன்றி அதிகார தோரணையில் பேசும் தோட்ட நிர்வாகிகளது பேச்சுகளையும் ஆதாரம் காட்டி அவர்களை நையாண்டி பண்ண ஆசிரியர் தவறவில்லை எனலாம்.

மிச்சம் மோஸ்மான வேலே ராமலிங்கம்!
கவ்வாத்து வெட்டத் தெரியாதா?
மிச்சம் பேசவேண்டாம் ராமலிங்கம்! லயம் போ மனுசன்.
அடியேய்! இந்த நெரை ஆள் யார்?
கங்காணி, கொங்காணி தலவரு பொண்டாட்டியாம்! ஓடு லயத்துக்கு கடை பொறுக்கி படவாள்! தோட்டத்தைக் கெடுத்துப் போட்டான்.

❖ நாவலாசிரியர் ஸி.வி.வேலுப்பிள்ளையின் மலையக நாட்டார் வழக்கில் உள்ள ஆழ்ந்த அனுபவமும் தேர்ச்சியும் மலையக மண்வாசனை பொருந்தக்கூடியதாக ''வீடற்றவன்'' என்ற நாவலை ஆக்கத் தூண்டிற்று எனலாம்.

❖ இலங்கையின் மலைநாட்டில் அடிமைகளாகக் குடியேறிய தொழிலாளர்கள் அங்குள்ள தோட்டக் காடுகளில் நிர்வாகத்தினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் கண்ணீரால் கறை பட்டுப்போன உள்ளமுடையவர்களாக அடிமைகளாக அடக்கப்படும் நிலையை மலையகக் களத்தில் நின்று மண்வாசனை (பேச்சுமொழி) பொருந்த நாவல் ஆக்கிய பெருமை ''வீடற்றவன்'' நாவல் ஆசிரியருக்கே உரியது எனக் கூறிக் கொள்வது மிகப் பொருத்தமானது எனலாம்.

❖ இவ்வகையில் நோக்கும்போது வாழ்வில் ஒளி பெறலாம் என்ற எண்ணத்தில் தாம் பிறந்த மண்ணை விட்டு, இலங்கையிலே தோட்டத்தில் வேலை செய்ய என வந்த இம்மலையக மக்கள் சொந்த வீடின்றி, நாடின்றி, நிலமின்றி தமது உதிரத்தை மலையகப் பயிர்களுக்கு உரமாக்கிய வெறுங்கையுடன் ஏமாந்து நிற்கும் கையறு பரிதாபகர யதார்த்த நிலையை ஆசிரியர் மண்வாசனை பொருந்தத் தத்துரூபமாகக் காட்டியுள்ளார் எனக் கூறிக்கொள்ளலாம்.

***வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே.***

அச்சிட்டோர் : மாணவர் மறுதோன்றி அச்சகம், சென்னை - 1. ☎ 25382513

# எமது வெளியீடுகள்

அரசினர் பாடத்திட்டத்தை முற்றும் தழுவிய பாடநூல்கள், வினா விடைகள் என்பன இப்பொழுது விற்பனையாகின்றன.

## புதிய பாடத்திட்டம் - 1999, 2000

1. தமிழ் மொழியும் இலக்கியமும் செயல் நூல் - தரம் 6
2. தமிழ் மொழியும் இலக்கியமும் செயல் நூல் - தரம் 7
3. தமிழ் மொழியும் இலக்கியமும் செயல் நூல் - தரம் 9
4. தமிழ் மொழியும் இலக்கியமும் செயல் நூல் - தரம் 10
5. தமிழ் மொழியும் இலக்கியமும் பொழிப்பு - தரம் 10
6. தமிழ் மொழியும் இலக்கியமும் வினா விடை - தரம் 10
7. தமிழ் மொழியும் இலக்கியமும் சந்தர்ப்பம் கூறல் - தரம் 10 - 11
8. தமிழ் இலக்கியம் (விருப்பத்துக்குரியது) - தரம் 10 - 11
9. சைவநெறி செயல் நூல் - தரம் 6
10. சைவநெறி செயல் நூல் - தரம் 7
11. சைவநெறி செயல் நூல் - தரம் 9
12. சைவநெறி செயல் நூல் - தரம் 10
13. சைவநெறி மதிப்பீட்டு வினாவிடை - தரம் 6
14. சைவநெறி மதிப்பீட்டு வினாவிடை - தரம் 7
15. சைவநெறி மதிப்பீட்டு வினாவிடை - தரம் 9
16. சைவநெறி மதிப்பீட்டு வினாவிடை - தரம் 10
17. இன்சுவைப் பதார்த்தங்கள் (மனைப் பொருளியல்)
    பாகம் I, II, II செய்முறை பரீட்சைக்கானது - தரம் 8 - 11
18. தையல் அலங்காரம் (மனைப் பொருளியல்) - தரம் 5 - 11
19. மொழிவளம் - தமிழ்மொழி - தரம் 5 - 11